பக்கங்கள்:இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 25 சனிக்கிழமை (09.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 044

# யுத்தக் குற்ற விசாரணைக்கு உதவ நிபுணர் குழுவை ஐ.நா. நியமிக்கும்

## ஒளிநாடா உண்மை என்பதால் நடவடிக்கைக்கு வலியுறுத்து

நியூயோர்க், ஜனவரி 9

இலங்கையில் தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்படுவதை வெளிப்படுத்தும் 'சனல் -4' வெளியிட்ட ஒளிநாடா உண்மையானது என்று கண்டறியப்பட்டதால் -

யுத்தக் குற்றம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசை மீண்டும் வலியுறுத்தி உள்ளது.

இது விடயத்தில் இலங்கை அரசு விசாரணைகளை முன்னெடுக்க உதவும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் - கீ மூன் நிபுணர் குழு ஒன்றை நியமிக்க உள்ளார். இது குறித்து இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## சிறைக் கைதிகள் விடுதலைக்கு அடுத்த வாரம் நடவடிக்கை

ஜனாதிபதியின் ஆலோசகர் வாசுதேவ

கொழும்பு, ஜன.9

சிறைச்சாலைகளில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை மூன்று குழுக்களாகப் பிரித்துப் பிணை வழங்குதல், புனர்வாழ்வு வழங்குதல், நீதிமன்றில் ஆஜர்படுத்தல் எனும் வகைகளில் அடுத்த வாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டமா அதிபர் உறுதியளித்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நாளை யாழ்ப்பாணம் வருகிறார்



யாழ்ப்பாணம், ஜன. 9

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் விஜயம் செய்கின்றார்.

நாளை காலை யாழ். வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முற்பகல் 11 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுவார் என்றும் தெரி விக்கப்பட்டது.

காலை முதல் மாலை வரை யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குபற்றும் ஜனாதிபதி, பொது அமைப்புகள், நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவும் மிக முக்கியமான அறிவிப்பு ஒன்றை இங்கு வைத்து ஜனாதிபதி வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

## மகஸின் சிறையில் உண்ணாவிரதமிருக்கும் மூன்று கைதிகளின் நிலை கவலைக்கிடம்!

### யாழ். சிறைச்சாலையில் நான்காக உயர்வு

கொழும்பு, ஜன.9

தம்மை விடுவிக்குமாறு கோரி கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையில் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் மூன்று பேரின் நிலை கவலைக்கிட மாக இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்தவரும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் பணிப்பாளருமான கே.தேவதாசன், வல்வெட்டித்துறையை சேர்ந்த 54 வயதான வைரமுத்து ஜெயசந்திரன், வவுனியாவைச் சேர்ந்த 45 வயதான பழனி கருணாகரன் ஆகியோரே கவலைக்கிடமான நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் இவர்களுக்கு ஆதரவாக யாழ்ப்பாண சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருவோரில்

(20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுத் திட்டங்களை ஜனாதிபதி வேட்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும்

### கொழும்புப் பேராயர் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 9

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு எவ்வாறான நிரந்தர அரசியல் தீர்வுத் திட்டங்களை முன்வைக்கின்றார்கள் என்பதனை ஜனாதிபதி வேட்பாளர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது மிகவும் இன்றியமை யாததாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கொழும்புப் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை.

தங்களது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் மக்கள் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் எனவும் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கடவுள் வழங்கியுள்ள அறிவைக் கொண்டு யார் இந்த நாட்டுக்கு தலைமை தாங்கப் பொருத்தமானவர்கள் என்பதனை மக்கள் தாமாகவே தீர்மானிக்க வேண்டுமென அவர் கூறியுள்ளார்.



தேர்தல் சுதந்திரமானதும், நியாயமானதுமாக நடைபெறுவதற்கு அனைத்து வேட்பாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடை

(20ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றத்துக்கு இன்னும் எஞ்சியுள்ளோர் 82,940 பேர் மட்டுமாம்

கொழும்பு, ஜன. 9

மீள்குடியேற்றத்துக்கான இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது என இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது வவுனியா நலன்புரி முகாம்களில் 79 ஆயிரத்து 965 பேர் தங்கியுள்ளனர். மேலும் யாழ்ப்பாணத்தில் 1349 பேர் தங்கியுள்ளனர். இதேவேளை, வைத்தியசாலைகளில் 1626 பேர் சிகிச்சை பெற்று வரு

(20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு நாளை

### நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜன. 9

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த தேசிய மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பொதுக்குழுத் தீர்மானங்கள்,

(20ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் தந்தையாரின் இறுதிக்கிரியை நாளை வல்வை ஊறணி மயானத்தில்

யாழ்ப்பாணம், ஜன.9

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அவரின் சொந்த ஊரான வல்வெட்டித்துறையில் நடைபெறவுள்ளன.

அவரது பூதவுடல் அன்று முற்பகல் 11 மணியளவில் ஊறணி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். அமரர் வேலுப்பிள்

(20ஆம் பக்கம் பார்க்க)

அறிமுகப்படுத்துகிறோம்
யாழ் நகரிலும், கொழும்பிலும்
ஒரே சுவை, ஒரே தரம், ஒரே விலை
Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm
விசேட வடஇந்திய காலை உணவு
பூரி, சப்பாத்தி, பரோட்டா, நாண், சைவ, அசைவ கறிவகைகளும் மற்றும்
கொசி உணவகம் Feel like home
இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020
இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். HOTLINE: 021-2225899
Indian, Chinese, Panjabi & Jaffna Foods

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரங்க, மஹேல அதிரடியான இணைப்பாட்டம்
# பங்களாதேஷை 9 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது இலங்கை

மிர்பூர், ஜன 9

பங்களாதேஷுடனான நேற்றைய போட்டியில் 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது இலங்கை இதன்மூலம் பங்களாதேஷ் மண்ணில் தொடர்ந்து 3போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது.

பங்களாதேஷில் நடை பெற்று வரும் முக்கோணச் சுற்றுப்போட்டியில் நேற்று இலங்கை-பங்களாதேஷ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணியக்கப்பட்ட 50ஓவர்கள் முடிவில் 9விக்கெட்டுக்களை இழந்து 249ஓட்டங்களை பெற்றது.

இதில் தமிம்இக்பால் 21ஓட்டங்களுடனும் கெய்ஸ் 42ஓட்டங்களுடனும் 'எல். பி. டபிள்யூ' முறையில் ஆட்டமிழந்தனர். அஷ்ஷர்புல் 13ஓட்டங்களுடன் துஷாராவால் 'ஸ்ரெம்ப்' செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சஹிபுல் ஹசன், ஷாகிப் அல்ஹசன் ஆகியோர் பொறுப்புடன் ஆடினர். சஹிபுல் ஹசன், 43ஓட்டங்களுடனும் ஷாகிப்அல்ஹசன் 47ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஏனையோர் குறைந்த ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தனர்.

இலங்கைஅணி சார்பில் பந்து வீசிய குலசேகர, ரண்டிவ், பெரேரா ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக தரங்கவும் மஹேலஜயவர்த்தனாவும் களமிறங்கினர். இருவரும் முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாக 215ஓட்டங்களைப் பெற்றனர். இதில் மஹேலஜயவர்த்தனா 13பௌண்டறிகளுடன் 108ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். தரங்க 18பௌண்டறிகளுடன் 118 ஓட்டங்களைஆட்டமிழக்காமல் பெற்றதுடன் சங்கக்கார 17ஓட்டங்களைப்பெற்றார்.

42.5 ஓவர்களில் இலங்கை ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்று 9விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. பங்களாதேஷ் சார்பில் பந்து வீசிய இஸ்லாம் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் வெற்றிக்கு வழிசமைத்த தரங்க தெரிவானார். நேற்றைய வெற்றியுடன் இலங்கை 10புள்ளிகளுடன் முதலிடத்திலும் இந்தியா 4புள்ளிகளுடனும் உள்ளன. (ஒ-6)

# யாழ்-கொழும்பு இரவு பஸ் சேவை நாளை ஆரம்பமாகுமென அறிவிப்பு

யாழ்ப்பாணம், 9

யாழ்ப்பாணம்- கொழும்பு இடையிலான இலங்கை போக்குவரத்து சபையின் இரவு நேர பஸ் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாவதாக போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இந்த பஸ் சேவை நாளை ஞயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் சேவையில் பயணிக்க விரும்புவோர் தமக்கான ஆசனப்பதிவுகளை யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் மேற்கொள்ள முடியும் என்று முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை-

யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து சகல பாதைகளுக்குமான இறுதி பஸ் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் இரவு 8.30 மணிக்குப் புறப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-4-224)

# வண. தம்பர அமில தேரர் பிணையில் செல்ல அனுமதி

கொழும்பு, ஜன. 09

வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவார் என உறுதியளித்து நிதி மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் வண. தம்பர அமில தேரர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன் கைதுசெய்யப்பட்ட அவர், நேற்று மீண்டும் ஹொறணை நீதிவான் நீதிமன்றின் முன் ஆஜர்படுத்தப்பட்டபோதே அவருக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

எனினும், ஒவ்வொரு மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையும் அவர் குற்றத்தடுப்புப் பிரிவில் ஆஜராக வேண்டும்எனநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வண. தம்பர அமில தேரரின் கடவுச் சீட்டையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் பணித்தது.

அவர் தொடர்பான வழக்கு ஏப்ரல் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (சி)

## அறிவித்தல்

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**
**வருடாந்த தேசிய மாநாடு**

நாளை 10.01.2010 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த தேசிய மாநாடு தவிர்க்க முடியாத காரணங்களினால் யாழ்ப்பாணம், நல்லூர், சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும் என்பதை அழைக்கப்பட்டவர்களுக்கும் கட்சியின் அங்கத்தவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தலைமைச் செயலகம்,
30, மார்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
09.01.2010.

மாவை சோ. சேனாதிராசா
பொதுச் செயலாளர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.12.2009 புதன்கிழமை அன்று காலமாகிய எங்கள் குடும்பத்தலைவி

**விசுவநாதர் பொன்னம்மா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(93584)

குடும்பத்தினர்.

# ஆசிரியர் சங்கத்தினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.09

வடமாகாண ஐக்கிய ஆசிரியர்கள் சங்க அங்கத்தவர்கள் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுள உயர் கல்வி நிலையத்தில் ஒன்றுகூடுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

தற்காலிக இணைப்புப் பெற்று யாழ். குடாநாட்டில் பணிபுரியும் ஆசிரியர்களுடைய தற்காலிக இணைப்பு இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருடன் நேற்றுத் தொடர்பு கொண்டு பொருத்தமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. என்றும் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஒ-6)

# தனியார் வைத்திய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன 9

சகல தனியார் ஆயுள்வேத நிறுவனங்கள், மேலைத்தேய வைத்திய நிறுவனங்கள் ஆகியவற்றின் வைத்திய உத்தியோகத்தர்களுடனான டெங்கு நோய் தொடர்பான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்களை தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு பிராந்திய பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளா[illegible] (ஒ)


## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இராசா வீதியில் (முடமாவடிச் சந்திக்கு அருகாமையில்) 2¼ பரப்புக் காணியுடன் கூடிய வீடும், 2¼ பரப்பு வெற்றுக் காணியும் விற் பனைக்குண்டு. தொடர்பு தொ.பேசி 0718676483


## மரண அறிவித்தல்கள்

### திருவேங்கடம் வேலுப்பிள்ளை



(வல்வெட்டித்துறை)


வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய காணி உத்தியோகத்தரான திரு. வேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் 06.01.2010 (புதன்கிழமை) இரவு 8 மணிக்கு பனாகொட இராணுவத் தடுப்பு முகாமில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவேங்கடம் - பருவதவர்தனி தம்பதியரின் மகனும் திருமதி. பார்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், திரு. மனோகரன் (டென்மார்க்), திருமதி. ஜெகதீஸ்வரி மதியாபரணம்(தமிழ்நாடு), திருமதி. வினோதினி இராஜேந்திரன் (கனடா), பிரபாகரன் (தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்) ஆகியோரின் அன்புத் தந் தையும்ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.01.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் வல்வெட்டித்துறை தீருவில் சதுக்கத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் வல்வெட்டித்துறை ஊறணி பொது மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: எம்.கே. சிவாஜிலிங்கம்,
நாடாளுமன்ற உறுப்பினர் (யாழ்ப்பாணம்)

### திருமதி வீரசிங்கம் இரத்தினம்



நீர்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் இரத்தினம் (07.01.2010) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும், கந்தையா தம்பதியினரின் அன்பு மருமகளும், சந்திரகுமாரியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் அவர்களின் அன்பு மாமியாரும், பிறேமா(கனடா), பிறேமலதா(கனடா), கௌரி (கொக்குவில்), சுதாகரன் (கனடா), பிரியா(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றஜிதகுமார், மதுஷா, சபீத்தன், பா[illegible] ஆகியோரின் பாசம் மிகுந்த பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுதன்-கௌரி(பேர்த்தி)
கொக்குவில் மேற்கு.

### இராஜேந்திரம் விஜயகுமார் (கண்ணன்)



[மின்.அத்தியட்சகர், மின்சார சபை,சுன்னாகம்]

அரசடிப் பிள்ளையார் கோவிலடி (நாச்சிமார் கோவில்) யாழ்ப்பாணம் என்னும் முகவரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராஜேந்திரப் பத்தர் - விஜயகுமார் (கண்ணன்) நேற்று (08.01.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அன்னார் இராஜேந்திரப்பத்தர் - சூரியகுமாரி தம்பதிகளின் அன்பு மகனும், உதயகுமார் (டென்மார்க்), மனோகரன் (பிரான்ஸ்), விக்னேஸ்வரி, சூரியகலா (ஆசிரியை, வத்.சென்ற். அன்ரனிஸ்), மோகனகலா (மின்சார சபை, சுன்னாகம்), அருட்செல்வி (விரிவுரையாளர், நுண்கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நவநீதன், பாலகிருஷ்ணன், சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகதியின் சிறிய தந்தையும், கஜன், விஷ்ணுப்பிரியன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பி.ப 3 மணி வரை பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைகளுக்காக பொறளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

525/1, கே. கே. எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
T.P.No - 0777619925, 0112472266,0212223198

தகவல்
வே. க. நவநீதன்
(மைத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர் தரப்பின் தீர்மானம் எப்போதோ முடிந்த காரியம்!

'எப்பவோ முடிந்த காரியம்' - என்பது யாழ்ப்பாணம், கொழும்புத்துறையின் தவசீலர் சிவயோக சுவாமிகள் உதிர்த்த நான்கு மகா வாக்கியங்களில் பிரதானமான ஒன்று. சித்தாந்திகளும், வேதாந்திகளும் இந்த வாக்கியங்களுக்குள் ஆழப் பொதிந்து கிடக்கும் உட்பொருள் குறித்துப் பல்வேறு விளக்கங்கள், வியாக்கியானங்களைத் தருவர். ஆனால் சாதாரண வாழ்வியலிலும் இது அதீத கருத்துருவைத் தந்து நிற்பது அவதானிக்கத்தக்து.

இன்றைய அரசியல் நிலைவரத்தின்படி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான சரத் பொன்சேகாவை ஆதரிக்கத் தீர்மானித்துவிட்டது.

அதையடுத்து இப்போது ஆளும் தரப்பிலிருந்து இனத்துவேஷ கருத்துகள் வெளிவரத் தொடங்கிவிட்டன.

தமிழ்க் கூட்டமைப்பு, பொன்சேகாவை ஆதரிக்கத் தீர்மானித்தபோதே, அரசுத் தரப்பு இத்தகைய நிலைப்பாட்டைத்தான் எடுக்கும் என்பது முடிவாகிவிட்டது. அதனால் அரசுத் தரப்பின் இந்தப் போக்கு யோகர் சுவாமிகளின் மகா வாக்கியம் போன்று, எப்பவோ முடிந்த காரியம்தான். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமே இல்லை.

இந்தத் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை வளைத்துப் போடுவதற்காகக் கூட்டமைப்போடு குழைந்து பேசியவர்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அவரும் அவரது சகோதரர்களும் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு இதற்காக வெற்றிலை வைத்துக் காத்திருந்தமையை யாரும் மறைத்து விட முடியாது.

தப்பித்தவறி, அவர்கள் விரித்த வலையில் கூட்டமைப்பினர் விழுந்து, அவர்களுடன் இணக்கப்பாடு கண்டிருந்தால் கூட்டமைப்பினர், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினதும் அவரது அணியினரதும் போற்றுதலுக்கு உரியவர்களாக இருப்பார்கள். தேசியப் பொறுப்புணர்வு மிக்கவர்களாக ஒரேயடியாகப் பாராட்டப்பட்டிருப்பார்கள்.

ஆனால் இப்போது அவர்கள் எதிரணிப் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்துவிட்டதால், நாட்டின் தேசிய நிலைப்பாட்டுக்கும் இறையாண்மைக்கும் ஆபத்தானவர்களாகச் சித்திரிக்கப்படுகின்றார்கள்.

எதிர்க்கட்சிப் பொது வேட்பாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமக்குள் கண்டிருக்கும் உடன்பாடு காரணமாக நாடு பேராபத்தை எதிர்கொண்டிருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முழங்கியிருக்கின்றார்.

வடக்கு - கிழக்கை இணைக்கவும், தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கவும் ஜெனரல் பொன்சேகா உடன்பட்டுவிட்டார் என்றும், இதன் மூலம் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்துத் தமது அரசு வென்றெடுத்த நாட்டின் முழுச் சுதந்திரம் இப்போது ஆபத்துக்குள் மூழ்கும் நிலைமை வந்திருக்கின்றது என்றும் ஜனாதிபதி எச்சரிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

ஜனாதிபதியின் கூற்றில் இரண்டு விடயங்கள் வெளிப்பட்டிருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

ஒன்று - வடக்கு, கிழக்கு இணைப்புக்கு பொன்சேகா சம்மதித்துவிட்டார். மற்றது - தமிழருக்கு சுயாட்சி வழங்கவும் அவர் இணங்கிவிட்டார். இப்படித்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரைத்திருக்கின்றார்.

உண்மையில் இவற்றுக்கு பொன்சேகா உடன்பட்டாரா என்பது சந்தேகத்துக்குரியது. அப்படி அவர் உடன்பட்டார் என்பதை வெளிப்படுத்தும் எந்த ஒரு தகவலும், சமிஞ்ஞையும் எந்தப் பக்கத்திலிருந்தும் வரவேயில்லை. அது வெறும் கட்டுக்கதை என்பதும் தெரிந்ததுதான்.

தமிழர்களின் நீதியான அபிலாஷைகளின் அடிப்படையாக அமையும் இந்த இரண்டு விடயங்களையும் பொன்சேகா வழங்கத் தயாரோ இல்லையோ, அவற்றை இலங்கையின் ஆட்சிப் பீடத்தில் இருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முற்றும் முழுதாக எதிர்க்கின்றார் என்பது அவரது பகிரங்கக் கூற்று மூலம் தெளிவாகிவிட்டது.

தமிழரின் பாரம்பரிய தாயகமான வடக்கு - கிழக்கை நிரந்தரமாகப் பிளந்தே - பிரித்தே - வைத்திருப்பது என்பதில் மிக உறுதியாகவும், தெளிவாகவும், திடமாகவும் இருக்கின்றார் நாட்டின் தலைவர் ராஜபக்ஷ.

அவர் அதிகாரத்தில் இருக்கும் வரை தமிழர் தாயகம் ஐக்கியப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை அண்மைக்காலமாகத் திரும்பத் திரும்பத் தாம் மேற்கொண்டு வரும் அறிவிப்புகள், பிரகடனங்கள் மூலம் அவர் வெளிப்படையாகவே தெளிவுபடுத்தி வருகின்றார்.

- இவ்வாறு நாட்டின் அதிபர் தமிழர்களின் அடிப்படை அபிலாஷை விடயங்களை அடியோடு நிராகரித்து வருகையில், இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் அவருக்குக் காட்டக்கூடிய பிரதிபலிப்பு என்னவாக இருக்கும்? என்னவாக இருக்கவேண்டும்?

அதைத் தமிழர்கள் எப்போதோ தீர்மானித்து விட்டார்கள். யோகர் சுவாமியின் வாக்கியத்தில் கூறுவதானால் 'அது எப்பவோ முடிந்த காரியம்!' அவ்வளவுதான்.

# குடாநாட்டில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த மருந்து விசிறும், புகையூட்டும் பணிகள் மும்முரம்

யாழ்ப்பாணம் ஜன 09

யாழ். குடாநாட்டில் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக மலத்தியோன் விசிறும் பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

அத்துடன் இயந்திரங்கள் மூலம் புகையூட்டும் செயற்பாடுகளும் இடம் பெற்று வருகின்றன.

யாழ். மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பொது இடங்கள்,கழிவு நீர் கால்வாய்கள் போன்ற இடங்களில் சுகாதார பகுதியினர் மலத்தியோன் விசிறும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை உணவு சாலைகள், தேநீர் கடைகள் போன்ற சுற்றாடல் பகுதியிலும் இந்த மலத்தியோன் விசிறப்பட்டு வருவதை காணமுடிந்தது.

## மகேஸ்வரன் மணி மண்டபத்தின் திறப்பு விழா நாளை நல்லூரில்

யாழ்ப்பாணம், ஜன. 9

முன்னால் இந்து கலாசார அமைச்சரும் யாழ்மாவட்டம் மற்றும் கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரனின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் அமைந்துள்ள இந்த மணி மண்டபம் நாளை ஞாயிற்றுக் கிழமை கலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படுகின்றது.

சர்வதேச இந்து மதகுரு பீடாதிபதி சிவஸ்ரீ சம்பு மகேஸ்வரக் குருக்கள் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மணி மண்டபத்தைத் திறந்துவைப்பார்.

அத்துடன் இந்த நிகழ்வில் இரண்டு நூல்களும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. ஈழத்துச் சிதம்பரத் திருத்தல யாத்திரை, முருகப்பெருமான் தோத்திர மாலை ஆகிய இரு நூல்களுமே இந்த வைபவத்தில் வெளியிடப்படுகின்றன. (50-14-224)

## ஆஸ்பத்திரி வளாகத்தில் இனி இராணுவத்தினரின் பாதுகாப்பு இல்லை

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட இராணுத்தினர் நேற்றுமுதல் அகற்றப்பட்டுள்ளனர். கடந்த சில மாதங்களாக யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் இராணுவத்தினரும் பொலிஸாரும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர்.

இவர்களில் வெளிநோயாளர் பிரிவின் நுழைவாசலில் மட்டும் தற் போது பொலீஸார் காவல் கடமையில் ஈடுபடுவதாகவும், ஏனைய இராணுவத்தினர் அகற்றப்பட்டிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (50-16-78)

## மேலும் ஒரு கைதி மயக்கமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ். சிறைச்சாலையில் தமது விடுதலையை நோக்காகக் கொண்டு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் 25 அரசியல் கைதிகளின் போராட்டம் ஐந்தாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. இவர்களில் மேலும் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்

க.ரஜீவன் என்பவரே மயக்கமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். ஏற்கனவே மூவர் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இக்கைதிகளின் நிலை தொடர்பாக தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை. சேனாதி ராஜா, கஜேந்திரகுமார் ஆகியோர் நேரில் சென்று கலந்துரையாடியதுடன் நாளை யாழ்.வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வுடன் இது தொடர்பாக பேசவுள்ளதாகவும் உறுதியளித்தனர். (50-16-78-224)

## மகேஸ்வரனின் நினைவு நிகழ்வு வல்லிபுர ஆழ்வார் ஆச்சிரமத்தில்

வடமராட்சி,ஜன 9

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வாராந்த ஆன்மிக நிகழ்வுடன், முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தி. மகேஸ்வரனின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

ஆச்சிரம செயலாளர் க. அருட்செல்வன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் ஆன்மிக உரை, அமரர் மகேஸ்வரன் ஞாபகார்த்த நினைவுரை, அன்னாரின் நினைவாக வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல், முதியோர்களிற்கு உடுபுடவைகள் வழங்கல் ஆகியனவற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (50-236)

## பிரபாகரனின் தந்தையின் மறைவுக்கு அனைவரும் அஞ்சலி செய்ய வேண்டும்

### மாவை எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.9

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் மறைவு குறித்து அனுதாபங்களையும், அஞ்சலியையும் அனைவரும் செலுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை பனாகொட இராணுவ முகாமில் காலமாகிவிட்டதாக அரசு இராணுவ பேச்சாளர் அறிவித்துள்ளார்.

வேலுப்பிள்ளை என்ன காரணத்திற்காக பனாகொட முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. அவர் மரணத்தின் காரணத்தையும் யாரும் அறிந்திருக்க வில்லை. அவர் மரணமடைந்த தற்கான காரணம், நடுநிலையான மருத்துவர்களின் பூர்வாங்க விசாரணை அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என வற்புறுத்துகின்றோம்.

இந்நாள்வரை 86 வயதுடைய ஓய்வூதியரும் அவர் துணைவியாரும் தடுப்புக் காவலில் வைத்திருந்தமையானது மனிதாபிமானத்தின் பேரால் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும் வேலுப்பிள்ளையின் துணைவியாரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

அரசுத்துறையின் காணி அதிகாரியாகக் கடமைபுரிந்த ஓய்வூதியரான வேலுப்பிள்ளை மிகுந்த மனிதாபிமானமும், மனிதப்பண்புகளும் நிறைந்த ஒருவராக விளங்கி வந்தவர்.

அவர் மரணமடைந்ததற்கான காரணம் அறியப்பட வேண்டியிருந்த பொழுதிலும், அவர் இழப்பின் பொருட்டு அனைவரும் தம் ஆழ்ந்த அனுதாபங்களையும், அஞ்சலியையும் செலுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றோம்- என்றுள்ளது.

## தேர்தல் அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜன 9

ஜனாதிபதித்தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் சிரேஷ்ட தலைமை வகிக்கும் அலுவலர்களாக கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ் செயலக கேட்போர் கூடத்தில் நான்கு கட்டங்களாக நடைபெறுமென சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு யாழ் அரச அதிபர் க.கணேஸ் அறிவித்துள்ளார். (ஒ-207)

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்குப் புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு இவ்வாண்டு புதிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற இணையத்தின் 9 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய நிறைவேற்றுக் குழுவின் தலைவராக சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த சி.வி.கே.சிவஞானமும், உபதலைவராக சேவாலங்காவைச் சேர்ந்த வி.கேசவனும், செயலாளராக லீட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஜேசன் ஜே. செல்வராஜாவும், உபசெயலாளராக வட இலங்கை சர்வோதயத்தைச் சேர்ந்த செல்வி.பி. ஜமுனாதேவியும், பொருளாளராக சர்வோதயத்தைச் சேர்ந்த ஏ.கே.சிவசுப்ரமணியமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன், சொண்ட் நிறுவனத்தைச் சேர்ந்த கே. செந்தூரன், மக்கள் நலன் காக்கும் பிரிவைச் சேர்ந்த கே.சிவசுந்தரமூர்த்தி, கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தைச் சேர்ந்த ஆர்.ஏ. திலகரட்ணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (50-16)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 26 | 10.01.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.ப 08.12 வரை |
| நட்சத்திரம்: | விசாகம் |
| | மு.இ 10.18 வரை |
| சுபநேரம்: | 09.33-11.03 வரை |
| ராகுகாலம்: | 05.03-06.33 வரை |

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்.குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படும் டெங்கு நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபடவுள்ளனர்.

இதன் ஓர் அங்கமாக, யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ள சிரமதானம் மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளன.

விஞ்ஞானபீட மாணவர்கள் முதற்கட்டமாக யாழ். பல்கலைக்கழகச் சுற்றாடலில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவிருக்கின்றனர்.எனவே இந்த இரு நாள் செயற்பாடுகளிலும் விஞ்ஞானபீட மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (50-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையற்ற பட்டதாரிகள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம்,ஜன.9

சமூகவியல், முகாமைத்துவம், வணிகத்துறை பட்டம் பெற்ற வேலையற்ற பட்டதாரிகளுக்கான முக்கிய சந்திப்பு இடம் பெற வுள்ளதனால் இத்துறை சார்ந்தவர்கள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ் பெருமாள் கோவிலடிக்கு சமுகம் தருமாறு கேட்க பட்டுள்ளது. (ஒ)

## அரச அலுவலர், ஓய்வூதியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன 9

அரச ஊழியர்கள் ஓய்வூதியர்கள் ஆகியோருக்கு கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவுப்படி தொடர்பாக சுற்றறிக்கை இணைய தளத்தில் வெளியாகி உள்ளது.

அரச அலுவலர்களுக்கு 2009 நவம்பர் தொடக்கம் இந்தக் கொடுப்பனவு மாதாந்தம் 5ஆயிரத்து 250 ரூபாவாகவும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 2ஆயிரத்து 375 ரூபாவாகவும் திருத்தம் செய்வதற்கும் நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்குரிய நிலுவைப் பணத்துடன் இம் மாதத்தில் செலுத்துவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாளாந்த சம்பளம் பெறும் அரச அலுவலர்களுக்கு 2009 நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் வேலை செய்யும் நாளொன்றுக்கு 175 ரூபா வீதம் வாழ்க்கைச் செலவுப்படி கொடுப் பனவை ஜனவரி மாதத்தில் வழங்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-207)

## மதவாச்சி – தலைமன்னார் ரயில் சேவை; மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன.9

போர்நெருக்கடி காரணமாக பாதிக் கப்பட்டிருந்த மதவாச்சி தலைமன்னா ருக்கு இடையேயான ரயில் சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முன்னேற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் பி.பி. விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதன்படி 106 கிலோமீட்டர் நீளமான இந்த ரயில் பாதை மீளமைக்கப்பட உள்ளது. இதற்கான ஒப்பந்தம் தயாரிக்கப்பட் டுள்ளதோடு இந்திய கம்பனியொன்றி னூடாக நிர்மாணப் பணிகளை முன்னெ டுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக பொது முகாமையாளர் கூறினார்.

சுமார் 30 வருடங்கள் யுத்தம் காரணமாக வட பகுதிக்கான ரயில் சேவைகள் முழு மையாக பாதிக்கப்பட்டன. 'பங்கர்' அமைப்பதற்காக புலிகள் இயக்கம் தண்டவாளங்களை எடுத்துச் சென்ற தனால் புதிதாக முழு ரயில் பாதையையும் ரயில் நிலையங்களையும் அமைக்க வேண்டியுள்ளதாக பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஒ-200)

## இலங்கைத் தமிழரசுக் கட்சி
### வருடாந்த தேசிய மாநாடு

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வருடாந்த தேசிய மாநாடு இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இடம் :- யாழ்ப்பாணம், நல்லூர், சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபம்.
காலம் :- 2010 ஜனவரி 10 ஆம் திகதி.
நாள் :- ஞாயிற்றுக்கிழமை.
நேரம் :- முற்பகல் 10 மணி

**நிகழ்ச்சி நிரல்**

★ மௌனப்பிரார்த்தனை.
★ தமிழ்த்தாய் வாழ்த்து.
★ இலங்கைத் தமிழரசுக்கட்சிக் கீதம்.
★ வரவேற்புரை.
★ தலைமையுரை.
★ பொதுக்குழுத் தீர்மானங்கள்.
★ இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 60ஆம் ஆண்டு மலர் வெளியீடு.
★ விருந்தினர் உரை.
★ நன்றியுரை.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் காலச் சூழ்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் கௌரவ இரா.சம்பந்தன் (பா.உ) அவர்கள் சமகால தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான தமது தலைமை உரையை நிகழ்த்துவார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

கு.சே.குலநாயகம், நிர்வாகச் செயலாளர், தலைமைச் செயலகம், யாழ்ப்பாணம். (C/563997)
மாவை சோ.சேனாதிராசா, பொதுச் செயலாளர்.


COSY HOTEL & RESTAURANT
பதவிவெற்றிடம்
மேற்குறிப்பிட்ட உணவகத்திற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு இத்துறையில் அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.
1. MANAGER (முகாமையாளர்) (சிறந்த ஹொட்டல் அனுபவம் தேவை)
2. COOKS (சமையல்காரர்கள்) (யாழ் உணவு சமைக்கத்தெரிந்தவர்கள்)
3. STEWARD (உணவு பரிமாறுபவர்கள்)
4. CLEANERS / CUTTERS (கழுவுநர்கள் / காய்கறி வெட்டுவோர்)
✵ இப்பதவி வெற்றிடங்களிற்கு தெரிவு செய்யப்பட்டோர் அவர்களின் விருப்பத்தின் படி எமது யாழ்/கொழும்பு நகரங்களில் உள்ள உணவகங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள்.
✵ நல்ல சம்பளம், கொமிசன், உணவு, தங்குமிடவசதி என்பன உண்டு.
புதன் காலை 11.00 மணிமுதல் நேர்முகத்தேர்வு நடைபெறும்.
நேரில் வரவும் (வயதெல்லை கிடையாது)
கோசி
No.15, சிராம்பியடி லேன், Off stantly Road, (ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம்
Tel no : 021-2227100



SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2012 கலை,வர்த்தக, கணிதப்பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.
A/L 2012 CHEMISTRY. ENG MED. Mr. நிரோஜன்
Gr.1 முதல் O/L வரை
Gr.6 To 11 Eng.MED.
Gr.10 + 11 Eng .Lit.
ICT,GIT(செயன்முறைகளுடன்)
புலமைப்பரிசில் Gr. 5 (பரீட்சைகளுடன்)



மணமகள் தேவை
யாழ்.உயர்இந்து 1976 இல் பிறந்த 5' 3'' உடைய டுபாயில் பிரபல International நிறுவனத்தில் முகாமையாளர் தரத்தில் பணி செய்யும் பரணி நட்சத்திரமும் 14 கிரக பாவமும் உடைய மணமகனுக்கு மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு: 0112592706


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் வேலாயுதர்- பாராளன்

யாழ். கரந்தன், நீர்வேலி இராமுப்பிள்ளை வித்தியாலய அபிவிருத்திச் சங்க உறுப்பினராக பணியாற்றிய அமரர் வேலாயுதர் பாராளன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யாழ்/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி (563999)

## இலவச ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், ஜன 9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் இலவச அடிப்படை ஆங்கில வார இறுதி வகுப்புக் கள் இன்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் மட்டும் இதில் பங்கு பற்றலாமென கழகச் செயலாளர் அறிவித் துள்ளார். (ஒ-207)


உடன் விற்பனைக்கு
மறி ஆடுகள் ஐம்பது உடன் விற்பனைக் குண்டு. பார்வையிடும் நேரம் காலை 7மணி - 10மணி வரை.
தொடர்பு:- செபஸ்தி மலக்கியாஸ், நாவற்குழிச்சந்தி, கைதடி.

விற்பனைக்கு
லான்சர் கார் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு இல :-
6, கே.கே.எஸ். றோட், பூநாறி மரத்தடி, கொக்குவில். 0779672650.

கருங்கல் சல்லி விற்பனைக்கு
5 நூல் கருங்கல் சல்லி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு -நிலோ தொலைத் தொடர்பு நிலையம். ஏழாலை தெற்கு , 021 321 2899

வீடு வாடகைக்கு உண்டு
பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0712782745.


### தவறிவிட்டது

இல 82 , கடற்கரை வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த மருசலின் செபமாலைதாசன் என்பவருடைய தே.அ. அட்டை இல. 810656220 V (சுவறிடப்பட்ட போட்டோக் கொப்பி), சர்வோதய மின் ஒட்டுப் பயிற்சி நிலைய அ.அட்டை என்பன மத்தியூஸ் வீதிக்கும் நாவாந்துறைக் குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.


மலிவு விற்பனை
நல்ல இன மறி சணல் ஆடு,Boxer பெண் நாய்க் குட்டி,Fan tail புறாக்கள்,சிறியLove bird's கூடுகள்,3:2 அடி கோழிக்கூடுகள், அக்கூரியத் துக்கான சிமெந்துத் தொட்டிகள், டீசல் China 3Kw ஜெனறேற்றர் என்பன விற்பனைக்குண்டு.
T.P :- 077 6721687


## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி திருநாவுக்கரசு



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி திருநாவுக்கரசு நேற்று (08.01.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசின் அன்பு மனைவியும், பேரின்பநாதன்(SAS ரான்ஸ்போட்), மோகனேஸ்வரன் (பிரான்ஸ்), கருணாராஜன், பிரபாகரன் காலஞ்சென்ற நகுலேஸ்வரன் ஆகியோரின் அருமைத்தாயும், புவனேஸ்வரி, சாந்தினி, சகுந்ததி ( பிரதேச செயலகம், துணுக்காய்), கேதீஸ்வரி ஆகியோரின் அருமை மாமியும், பிரியந்தன், டுஷ்யந்தினி, ரஷிந்தினி, கயானி, றொஷானி, கஜானன், கானுஜன், பபிஜன், கயூரினி ஆகியோரின் அருமை அப்பம்மாவும் மகேஸ்வரி, இந்திராணி, கந்தசாமி (AKB ரான்ஸ்போட்) நவரத்தினம், சற்குணநாதன் (செல்வன் டீசல் எஞ்சினியேர்ஸ்), செல்வரட்ணம் ( ஸ்ரீ விஷ்ணு-கொழும்பு), யோகநாயகி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது மகனின் இல்லத்தில் நாளை (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரிக்கம்பரை, இராஜவீதி, கோப்பாய் வடக்கு. (93592)
தகவல்: தி.பேரின்பநாதன் (மகன்)

## மரண அறிவித்தல்கள்

### கிருஸ்ணபிள்ளை பாலசுந்தரம்
(உரிமையாளர், Asvi/ Sripura Rice Mill, வவுனியா)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாண்ம், கந்தர் மடம் மற்றும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை பாலசுந்தரம் அவர்கள் 06.01.2010 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் விஜயராணியின் அன்புக்கணவரும் முரளி, ஜனார்த்தனன், சுதர்ஷன், சிவஹரன், அஸ்வினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோபனா, சுவர்ணலதா ஆகியோரின் அன்பு மாமனும் கௌசிக், ரிஷான், அக்ஷிதா ஆகியோரின் ஆசைப்பேரனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், நடராஜா, துரைராஜா, பொன்னம்பலம் மற்றும் சிவராஜா, தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் ஸ்ரீபதிநாதன் (அசோகன் அரிசி ஆலை, வவுனியா), ஜெயராணி, விமலநாதன் சுவேந்திர ராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வைத்தியகலாநிதி நிஷாந்தனின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.01.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணி வரை கல்கிசை Mahinda மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 1மணியளவில் தகனக்கிரியைகள் கல்கிசை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P- 0773690333 (சி/563739)

### கந்தசாமி செல்லம்மா
(இளைப்பாறிய ஆசிரியை)

சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த கந்தசாமி செல்லம்மா சிலாபத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா நாகம்மா ரீச்சர், இரத்தினவேலு ஆகியோரின் சகோதரியும், தியாகலிங்கம், கணேசராசா, ஜொஸ்ரி, கயேந்திராணி ஆகியோரின் மாமியாரும், சந்திரவதனா (ஆசிரியை,கொழும்பு), ரஞ்சினி (அவுஸ்திரேலியா), ஜெயமனோகரன் (அவுஸ்திரேலியா), குகதாசன் (ஆசிரியர், விக்னேஸ்வரா வித்தியாலயம்), தியாகேசன், சர்மிளா, நிவேதன், மிதுன், ராகுல், சரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு சுழிபுரத்தில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (09.01.2010) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கி.பூபாலசிங்கம் (சகோதரன்).
சுழிபுரம். (சி/563996)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் ஐ.நடராசா, சிறப்பு விருந்தினரான திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன் நிற்பதையும் முதல் படத்திலும் பிரதமவிருந்தினர் சி.சத்தியசீலன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி ஆகியோர் மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதை இரண்டாவது மூன்றாவது படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை அடுத்த படத்திலும் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

# அரச நியமனத்துக்குள் உள்வாங்கும் நோக்குடன் குடாநாட்டில் முன்பள்ளி ஆசிரியர் விபரம் திரட்டல்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.9

முன்பள்ளி குறித்த செயற்பாடுகள் தொடர்பான சட்டத்தை உருவாக்கும் நோக்குடனும், முன்பள்ளி ஆசிரியர்களை அரச நியமனத்திற்குள் உள்வாங்குவதனை நோக்காக கொண்டு யாழ் மாவட்டத்திலுள்ள முன்பள்ளிகள் தொடர்பாக தரவுகள் மற்றும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி.எம். வசந்தகுமார் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

யாழ். மாவட்டத்தில் 785 முன்பள்ளிகள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. பதிவு செய்யப்படாமலும் அதிக முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன.

அவை குறித்தும் விபரங்கள் திரட்டப்படவேண்டியுள்ளது.

அரச நிர்வாகத்தினுள் உள்வாங்கப்படாத காரணத்தால் முன்பள்ளிகள் அனைத்தும் பொது அமைப்புகளின் நிர்வாகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

முன்பள்ளிகள் புதிதாக ஆரம்பிப்பதும், இயங்கிய முன்பள்ளிகள் மூடு விழாக் காண்பதும் அதிகரித்து வருகின்றது. பிரதேசத்தில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை தொடர்பான விடயங்களைக் கருத்தில் எடுக்காமல் முன்பள்ளிகள் ஆரம்பிப்பதனாலேயே இயங்கிய முன்பள்ளிகள் சில மூடவேண்டியேற்படுகிறது.

அது மட்டுமன்றி, முன்பள்ளிகளை நடத்திவரும் பொது அமைப்புக்களின் நிர்வாகங்களுக்கும் முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகளால் புதிய ஆசிரியைகளை இணைக்க வேண்டிய நிலைமை உள்ளது.

இதனால் ஏற்கனவே பயிற்றப்பட்டு அனுபவம் பெற்றுள்ள ஆசிரியர்களை இழக்க வேண்டியுள்ளதுடன், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான தகுதிகளைக் கொண்டிராதவர்களை நியமித்து முன்பள்ளி நடத்தும் நிலைமை உருவாகிறது.

அது மட்டுமன்றி ஆசிரியைகளுக்கு வழங்கப்படும் ஊதியம் குறித்தும் கவனமெடுக்கவேண்டியுள்ளது.

இவை காரணமாகவே யாழ். மாவட்டத்திலுள்ள முன்பள்ளிகளதும், ஆசிரியைகளதும் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்த விபரங்களை வடமாகாண ஆளுநர் ஊடாக மாகாண சபைக்கு அனுப்பி வைப்பதற்கு தீர்மானித்திருக்கிறோம். இதன் மூலம் முன்பள்ளி தொடர்பான சட்டம் ஒன்றை உருவாக்க முடியும். இவ்வாறு உருவாக்குவதன் மூலம் முன்பள்ளி செயற்பாட்டை சிறப்பான முறையில் முன்னெடுக்க முடியும். இதன் மூலம் இது வரை காலமும் முன்பள்ளி தொடர்பாக இருந்து வந்த பிரச்சினைகளுக்கான தீர்வாக அமை யும் -என்றார். (50-14)

# நெடுந்தீவில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.09

நெடுந்தீவில் இலவச மருத்துவ முகாமும், சுகாதார விழிப்புணர்வு நிகழ்வும் இன்று சனிக்கிழமை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளன.

யாழ். சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் வழிகாட்டல் அனுசரணையுடன் சர்வதேச மருத்துவக் குழுவினர் இந்த சேவையை வழங்கவுள்ளனர்.

இதில் யாழ்.போதனாவைத்தியசாலை மருத்துவர்களும், பெண்நோயியல் மற்றும் மகப்பேற்றியல் நிபுணர் டாக்டர். பு.பவானியும் கலந்துகொள்வர்.

இவர்களுடன் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை மற்றும் நெடுந்தீவு வைத்தியசாலை மருத்துவர்களும் துணை மருத்துவக் குழுவினரும் இணைந்து செயலாற்றவுள்ளனர்.

இந்த இலவச மருத்துவ முகாமில் நெடுந்தீவு மக்களைக் கலந்து கொண்டு பயன் பெறுமாறு சர்வதேச மருத்துவக் குழுவினர் கேட்டுள்ளனர். (ஒ-10)




# நயினாதீவில் இரண்டு நாள்களாக மின் விநியோகம் முற்றாக ஸ்தம்பிதம்

நல்லூர், ஜன.9

நயினாதீவுக்கான மின்விநியோகச் சேவை கடந்த இரண்டு தினங்களாக ஸ்தம்பிதமடைந்துள்ளதால் நயினாதீவு இருளில் மூழ்கியது.

தீவின் மின்விநியோகச் சேவைக்கென இரண்டு மின் பிறப்பாக்கிகள் உள்ளன. எனினும் இவை அடிக்கடி பழுதடைவதால் மின்விநியோகமும் திடீர் திடீரென தடைப்பட்டு வருவதாகவும் இதனால் பொதுமக்கள் குறிப்பாக மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் நயினாதீவு மக்கள் கூறுகிறார்கள்.

மின்விநியோக இயந்திரங்களின் பழுதுகள் குறித்து மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பலதடவைகள் தொடர்பு கொண்ட போதும் அது குறித்து எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக இல்லை எனமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (50-111)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தோருக்குக் கொடுப்பனவு

நல்லூர், ஜன.9

நலன்புரி நிலையங்களிலிருந்து நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கான 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நல் லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

12ஆம் திகதி ஜே/91 முதல் ஜே/100 வரை 530 குடும்பங்களுக்கும், 13ஆம் திகதி ஜே/101 முதல் ஜே/110 வரை 528 குடும்பங்களுக்கும், 15ஆம் திகதி ஜே/111 முதல் ஜே/122 வரை 529 குடும்பங்களுக்கும், 19ஆம் திகதி ஜே/123 முதல் ஜே/128 வரை 210 குடும்பங்களுக்கும் மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

உரியவர்கள் குடும்ப அட்டை, அடையாள அட்டை இலங்கை வங்கியில் உள்ள தமது கணக்குப் புத்தகம் என்பவற்றைக் கண்டிப்பாகத் தம்முடன் எடுத்து வரவேண்டும் எனவும், இலங்கை வங்கியில் கணக்கு இல்லாதவர்கள் உடன் கணக்கு ஒன்றை ஆரம்பித்து உரிய புத்தகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தார். (50-111)

# நீர்வேலி, கோப்பாய்ப் பகுதிகளிலுள்ள நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டி நோய்

யாழ்ப்பாணம்,ஜன.9

நீர்வேலி, கோப்பாய் தரவை வயல் நிலங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் மடிச்சு கட்டி நோயினால் பாதிக்கப்பட் டுள்ளன.

இந்த மடிச்சு கட்டி நோயைக் கட்டுப்படுத்துவதற்காக விவசாயிகள் கிருமிநாசினி களை விசிறி வருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் விவசாயிகள் இம்முறை அதிகளவில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். முன்னர் நெற்செய்கையின்றித் தரிசு நிலங்களாகக் காணப்பட்ட வயல் நிலங்களும் தற்போது சீர் செய்யப்பட்டு நெல் விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (50-224)

# புல்லுக்குளத்தில் வளரும் சல்பீனியா; இதனால் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.09

யாழ்.முனீஸ்வரன் வீதியில் உள்ள புல்லுக்குளத்தில் சல்பீனியா தாவரத்தின் பெருக்கம் அதிகரித்துள்ளது.



குளத்தை முற்றாக மூடி இந்தத் தாவரம் அடர்ந்து வளர்ந்து காணப்படுவதால் இப்பகுதியில் நுளம்பின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் இந்தத் தாவரத்தின் பெருக்கம் ஆரிய குளத்தில் அதிகமாகக் காணப்பட்டது.

பின்னர் மாநகர சபையின் தொழிலாளர்கள் இவற்றை அகற்றிக் கட்டுப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுகாதாரத்திற்கு சீர்கேடாகவும் நுளம்பின் பெருக்கத்திற்குச் சாதகமாகவும் காணப்படும் இத்தாவரத்தை மாநகராட்சி மன்றம் அழித்து அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-224)

# டெங்கு ஒழிப்பு சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜன.9

டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி பிரிவு அலுவலக ஊழியர்கள் அலுவலக வளாகத்தில் நேற்றுமுன்தினம் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (ஒ-207)

# தும்புத்தொழிற்சாலை மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜன.9

தென்மராட்சிப் பகுதியில் உள்ள அல்லாரை தும்புத்தொழிற்சாலை நவீன வசதிகளுடன் மீண்டும் இயங்கவுள்ளது.

இந்த தும்புத் தொழிற்சாலை தும்பு இல்லாத காரணத்தினால் பல வருடங்கள் மூடப்பட்டிருந்தது.

வடக்கின் வசந்தம் துரித வேலைத் திட்டத்தின் கீழ் இந்த தொழிற்சாலை புனரமைக்கப்பட்டு உற்பத்திக்கு தேவையான கருவிகள் போன்றவை கைத்தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன. (ஒ-207)

# 400 குடும்பங்களுக்கு ரூ. 5000 கொடுப்பனவு.

யாழ்ப்பாணம், ஜன. 9

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக்குடியேறிய குடும்பங்களில் ஒரு தொகுதியினருக்கான வதிவிட உதவு தொகையான ரூபா 5ஆயிரம் கொடுப்பனவு இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்படும். இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு 400 குடும்பங்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கவுள்ளார். (ஒ-207)

# வேலையற்ற பட்டதாரிகள் கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம்,ஜன.9

வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஒன்று கூடலொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் தவறாது சமுகம் தருமாறு பட்டதாரிகள் சங்கச் செயலாளர் கே.ஜசீதன் அறிவித்துள்ளார். (50-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகை அலங்கார நிலையங்கள் நாளை திறந்திருக்கும்

எதிர்வரும் 14 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமது நிலையங்கள் திறந்திருக்கும் என வடபிராந்திய சிகை ஒப்பனையாளர்கள் சங்கத் தலைவர் அ.அல்பேட் தெரிவித்தார்.

ஆயினும் தைப்பொங்கல் தினமான 14 ஆம் திகதி வியாழக்கிழமை மேற்படி நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (50-160-236)

## 31 ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 05 ★ 03 ★ 1949



உதிர்வு 10 ★ 12 ★ 2009

### அமரர் ஐயம்பிள்ளை பத்மநாதன்

கடந்த (10.12.2009) அன்று சிவபதமடைந்த எங்கள் குல விளக்கு அமரர் ஐயம்பிள்ளை பத்மநாதன் அவர்களின் துக்கதினத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் சாவகச்சேரி ப.நோ.கூ.ச, யாழ். மாவட்ட பாரஊர்தி சங்கம், வர்த்தக சங்கம், நிறுவனங்கள், மாதர் சங்கம், நண்பர்கள், சனசமூக நிலையம், கண்ணீர்அஞ்சலி செலுத்தி, மலர்வளையம் அனுப்பியோருக்கும், தொலைபேசி , தந்தி மூலமாக அனுதாபம் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும். உற்றார், உறவினர்,நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்பிற்கும் பண்புக்கும் பிறப்பிடமா
தண்ணீரை விட்டகன்ற மீனைப்போல்
துத்தளித்து தவிக்கிறோம் உம்மை நாடி.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 10.12.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.01.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (சி/563986) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் சின்னத்துரை



பளையைப் பிறப்பிடமாகவும், 159, மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சின்னத்துரை 07.01.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் பத்மாவதி (கனடா) இராமலிங்கம் (அதிபர் யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்) கமலாதேவி (புலோப்பளை) அரியதேவி (கனடா), பாலசுந்தரம் (கிராம உத்தியோகத்தர் கோப்பாய் மத்தி), விமலாதேவி (திருவையாறு), அன்னலட்சுமி (இரத்தினபுரம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அழகரத்தினம் (கனடா), இராகினி (கிராம உத்தியோகத்தர், நல்லூர் தெற்கு), கந்தசாமி புலோப்பளை, பரமசாமி (கனடா), பவளராணி, பத்மநாதன் (திருவையாறு), தர்மலிங்கம் (இரத்தினபுரம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தெய்வானைப்பிள்ளையின் அன்பு மைத்துனரும் வினாசித்தம்பி, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் சிறியதந்தையும் ஜெயக்குமார், சாந்தி (கனடா), உதயகுமார், சுதா (கனடா), ஜெயரஞ்சினி, யோகநாதன் (ADP கொழும்பு), றஜேன், நிர்மலா (லண்டன்), றிஷான் (மருத்துவ மாணவன் சீனா), நிமலரஞ்சினி, சிறிஸ்கந்தராசா, நிமலரஞ்சன், தயாநிதி, விமலரூபன், பர்சனா, விமலதர்சினி, சதீஸ்வரன் (முல்லைத்தீவு), சசிகலா, குணபாலசிங்கம் (அதிபர் பளை மத் திய கல்லூரி இந்தியா), சசிதரன் சீத்தா (கனடா), சசிகரன் பந் துஷா (கனடா), பாஸ்கரன், அனுசா (கனடா), கோகிலநாத்துஜா, மேகலநாத் (சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்), சர்மிலா தீசன் (லண்டன்), வினுதா, சிவகுமார் (பிரான்ஸ்), பிரசாத் பாமிலா (ஆசிரியை), துஷ்யந்தினி, அனுகரன் (ஆசிரியர் உருத்திரபுர மகாவித்தியாலயம்) ஆகியோரின் பேரனும் வினோதிகா, தர்சினி, கஜன், லக்ஷன், லதுசன், இலட்சுமி (கனடா), குகா, நரேன், கிசாளினி, மேனுசன், தனுசன், லதுசன், கனுசன், அபினாப், றக்சயா, வர்மியா, திவிசன், நிதர்சனா, குகபாலன், மதுஷன், தனிற்ரா, அபிக்கா, சிலக்ஷா, கையித், கபிலன், சயன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு இல, 159, மானிப்பாய் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.ச.இராமலிங்கம் அதிபர் (யா/பெரியபுலம் ம.வி)
திரு.சி.பாலசுந்தரம் கிராம உத்தியோகத்தர் (கோப்பாய் மத்தி)
மகன்மார்.

இல 159, மானிப்பாய் வீதி,
(வணிகர் கழகத்துக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (93581)

## வாடகைக்குத் தேவை

யாழ். மாநகர எல்லைக்குக் கடை அல்லது வீடு உடன் வாடகைக்குத் தேவை.
(வியாபார பொருள்கள் வைத்து விற்பனை செய்வதற்கு)
T.P. 0770591511, 0774113305 (93570)

## விற்பனைக்கு

பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொ.பே:- 0779641991
றோசாத்தோட்டம்
தலங்காவல் பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி மேற்கு. (93589)

## போட்டோக் கொப்பி இயந்திரங்கள் பழுதுபார்க்கும் சேவை

சகலவிதமான போட்டோக் கொப்பி இயந்திரங்கள், டுப்புலோ கொப்பியர் பிறின்டிங் இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் திருத்துவதற்கும், சேவிஸ் செய்து கொடுப்பதற்கும் மிகத்தேர்ச்சி பெற்ற தொழில்நுட்பவியலாளர்கள் கொழும்பில் இருந்து வருகைதந்துள்ளனர். ஒரு சில தினங்கள் மட்டுமே அவர்களின் சேவை நடைபெறவுள்ளதால் உங்கள் தேவைகளுக்கு உடனடியாகத் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0779404833 (93571)

## காணி விற்பனைக்கு

கொக்குவில், பொற்பதி வீதியில் கத்தோலிக்க தேவாலயம் அருகில் 3 பரப்பு 5.38 குளி விஸ்தீரணமான கிணறு, சுற்றுமதிலுடன் அமைந்த காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : - T.P. 0779264353 (93574)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்டிய பிரதேசத்தில் அல்லது திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் கொம்பனியொன்றின் ஊழியர்கள் தங்குவதற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புக்கு: - T.P. 0215671702
0772487101 (93573)

## ஆண் வேலையாள் தேவை

வயோதிபர்ஒருவரைப் பகுதிநேரமாகவோ அல்லது முழுநேரமாகவோ பராமரிப்பதற்குரிய சேவை மனப்பாங்குள்ள ஆண் வேலையாள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.
உடன் தொடர்பு கொள்க.
0773086894 (93575)

## உடன் தேவை

எமது நிறுவனத்துக்கு கொம்பியூட்டர் ரைப்பிங் (தமிழ், ஆங்கிலம்) அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும்.
தொடர்புகளுக்கு : பிரகாந்த்
56 B, பலாலி வீதி, திருநெல்வேலி.
021 222 3184 (93578)

## 'பாஷையூரும் நாட்டுக்கூத்தும்' நூல் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.9

மு.சிங்கராயர் எழுதிய ''பாஷையூரும் நாட்டுக் கூத்தும்'' என்ற நூல் இன்று சனிக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்துகொள்வார்.

மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா.அகிலன் நிகழ்த்துவார். (50-16)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.9

வல்வெட்டித்துறை வல்வை ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு வல்வை தென்மேற்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

வல்வை ஒன்றியத் தலைவர் மு.தங்கவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வல்வை மக்களைக் கலந்து கொள்ளும்படி அதன் செயலர் கேட்டுள்ளார். (50-10)

## பிரத்தியேக வகுப்பு

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
தொடர்பு :
0779919609

## இரவு சொகுசு வான் சேவை



10.01.2010 ஞாயிறு ஆரம்பம்

முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்

சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி, காரைநகர் பயணிகளுக்கு.....

யோகாஸ் கொமினிக்கேசன்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
0213215270

அச்சுவேலி, பருத்தித்துறை, உடுப்பிட்டி, நெல்லியடி, யாழ்.பயணிகளுக்கு....

பதிவு அலுவலகம்
ஞானம்ஸ் புடைவையகம்,
18A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
0212225679

★ சகல பயணிகளும் அந்தந்த இடங்களில் ஏற்றப்படுவர். (சி/563982)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியை திருமதி
பத்மினிசசிகரன் அவர்களின்
அன்புத் தந்தை
**பொன்னையா குமாரசாமி**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ கைதடி குருசாமி வித்தியாலயம். (93576)

## அருட்பணி. மேரி பஸ்ரியன் அடிகளாரின் 25ஆம் ஆண்டு நினைவு இரங்கல் திருப்பலியும் அஞ்சலி நிகழ்வும்



இடம் : திருக்குடும்ப ஆலயம் - மல்வம், உடுவில்.
காலம் : நாளை (10.01.2010)ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 6.30 மணி, யாழ் ஆயர் தலைமையில்

அனைவரையும் இந்நிகழ்வில்
கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்
நன்றி.

நல்லாயனின் பணிக்காலம் (1975 - 1985)
மல்வம் பங்கின் பணிக்காலம் (1977- 1981) பங்குத்தந்தை,
ஆலய அருட்பணிப்பேரவை
மல்வம்- பங்கு மக்கள்.
(93572)

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 801 திகதி: 07.01.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| I | 36 | 54 | 60 | 65 | 19 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 11,727,092.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 02 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 03 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 325 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 15500 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 217614 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 10,852,280.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 11,727,092.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயுர்வேத வைத்தியர் வ.சின்னையா

(சென்றவாரத் தொடர்ச்சி)

நான் 1927ஆம் ஆண்டு பிறந்தேன். ஆரம்பக் கல்வியை நுணாவில் கணேசா வித்தியாலயத்தில் கற்றேன். சிறுவயதிலேயே ஆயுள்வேத மருத்துவராக வரவேண்டுமென அவா என் மனதில் இருந்ததால் பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் சித்த ஆயுள்வேதப் பாடசாலையில் இணைந்து படித்தேன். அங்கு படித்த காலத்திலேயே தமிழ்நாடு கும்பகோணத்தில் உள்ள ஹோமியோபதி ஆயுள்வேதக் கல்லூரியில் அஞ்சல் வழிக்கல்வியை ஒருவருடம் மேற்கொண்டு சித்திபெற்று அந்தக் கல்லூரியிலும் கல்வி பயின்று பட்டம் பெற்றேன்.

1952ஆம் ஆண்டு ஆயுள்வேத வைத்திய சேவையினை சாவகச்சேரி நகர்ப் பகுதியில் ஆரம்பித்தேன். ஆரம்பக் காலத்தில் வாடகைக்குக் கட்டடங்கள் பெற்று விடுதி வசதியுடன் மக்களுக்குச் சேவையாற்றி வந்தேன். பின்னர் நோயாளர்களும் அவர்களுடன் தாங்குபவர்களும் தங்கக்கூடிய விதத்தில் இக்கட்டடத்தினை அமைத்து 25 வருடங்களுக்கு மேலாக நடத்தி வருகிறேன்.

எனது வைத்திய சேவையினைப் பாராட்டி இலங்கை ஆயுள்வேதத் திணைக்களத்தின் சித்த மருத்துவத் துறையினர் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 'எங்கள் வைத்திய நிலையம்' என்னும் நிலையத்தினை அமைத்துத் தரவுள்ளனர். யாழ். மாவட்டத்தில் இத்திட்டத்திற்கு ஐந்து பரம்பரை ஆயுள்வேத வைத்தியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தில் மருந்து உற்பத்திப்பிரிவுக்கு வருகைச் செய்முறைப் பயிற்சியாளராகப் பணியாற்றியுள்ளதுடன் சித்த மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு உள்ளகப் பயிற்சியினையும் இவ்வைத்தியசாலையில் வழங்கியுள்ளேன்.

எனது வைத்திய சேவையைப் பாராட்டி 1994 ஆம் ஆண்டு சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத்தினர் 'வைத்திய இரத்தினம்' என்னும் பட்டத்தினை யாழ்ப்பாணத்திலும் 2002 ஆம் ஆண்டு சுகாதாரப் போசாக்கு மற்றும் நலன்புரி அமைச்சினால் 'சகஸ்டாபிஷேக வைத்திய சூரி' என்னும் பட்டத்தினை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கிடைக்கக் கூடிய மூலிகை வகைகளைக் கொண்டு மருந்துகள் தயாரித்து மக்களுக்கு சேவையாற்றி வருகிறேன். எனது வைத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த மூலிகைத் தோட்டம் நிஷாவின் போது முற்றாக அழிந்துள்ளது.

ஆயுள்வேத மருத்துவத்திற்கு முக்கியமெனக் கருதப்படும் தாதுச்சரக்குகளும் கற்சரக்குகளும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டே எமக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இப்பொருள்களின் விலைகள் அதிகமாக உள்ள போதிலும் நோயாளர்களைப் பாதிக்காத வகையில் சேவையாற்றி வருகின்றோம். ஆயுள்வேத மருந்தகத் திணைக்களக் கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது எமது சேவைக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. ஏனெனில் எமக்குத் தேவையான மருந்து உற்பத்திக்குத் தேவையான பொருள்களை இங்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதால் மாவட்டத்தில் ஆயுள்வேத மருத்துவம் மென்மேலும் விருத்தி பெறும். எனது மகளும் மருமகனும் ஆயுள்வேத மருத்துவர்களாக உள்ளனர். இதனால் என்னால் மேற்கொள்ளப்பட்ட ஆயுள்வேத மருத்துவ சேவை மேலும் மக்களுக்குக் கிடைக்கும் என நம்புகிறேன் என்று கூறினார்.

இவர் மருத்துவத்துறையில் மட்டுமல்ல ஆன்மீகத்துறையிலும் அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார்.

திருப்புகழ் சுவாமிகளை ஆன்மீகக் குருவாகக் கொண்ட இவர் பல இடங்களில் ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் நடத்தி வருகிறார்.

மட்டுவில் ஜெகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகள் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளும், உடுவில் கடவுள் சந்நிதானத்தில் மாதம் இருமுறையும் கைதடி சச்சிதானந்த ஆச்சிரமத்திலும் ஆன்மீகச் சொற்பொழிவுகளை இவர் நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(முற்றும்)

# புதிய ஆண்டில் புதிய கட்டடத்தில்...



சொந்தக்காணி இருந்தும் நெருக்கடிக்கு மத்தியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலயம் பற்றி இன்று ஆராய்வோம்.

1998 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி மாவட்ட கல்விச் செயற்பாடுகள் வலயக் கல்வி முறைக்கு மாற்றப்பட்டது. யாழ். மாவட்ட கல்விச் செயற்பாடுகள் ஐந்து கல்வி வலயங்களாகப் பிரிக்கப்பட்டது. அவ்வேளையில் தென்மராட்சிக்கான கல்வி வலயம் 1999 ஜனவரி முதலாம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் விடுதிக் கட்டடத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. வலயக்கல்விப் பணிப்பாளர், மூன்று பிரதிக் கல்விப் பணிப்பாளர், உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பணிகளுக்கு மகளிர் கல்லூரி அதிபர் விடுதிக் கட்டடம் போதாதிருந்தமையால் மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள தனியார் கட்டட மொன்றுக்கு இடம் மாறியது அங்கும் போதிய இடவசதியின்மையால் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு பிரதிக் கல்விப் பணிப்பாளர்களின் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தன.

2000 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த வேளையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கியது. 2002 ஆம் ஆண்டு மீண்டும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள இருதனியார் கட்டடங்களில் வலயக் கல்விச் செயற்பாடுகள் இடம் பெற்றன. 2004 ஆம் ஆண்டு தற்போது வலய அலுவலகம் இயங்கும் சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள கட்டடத்தில் இயங்கி வருகிறது.

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆரம்ப வலயக் கல்விப் பணிப்பாளராக பொறுப்பேற்ற வ.செல்வராசா வலயத்திற்கு நிரந்தர கட்டடம் தேவை என்ற நல்நோக்குடன் காணியொன்று கொள்வனவு செய்வதற்கு ஆரம்ப நடவடிக்கையினை மேற்கொண்டார். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மாறிய போதிலும் கல்வி அலுவலகத்தினரின் கடும் முயற்சியின் பயனாக 2007 ஆம் ஆண்டு வலயக் கல்வி அலுவலகத்திற்கென சாவகச்சேரி ஹென்ஸ்மன் ஒழுங்கையில் உள்ள 11 பரப்பு காணி காணி அமைச்சினால் சுவீகரிக்கப்பட்டு வலயக் கல்வி அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டது. இக் காணிக்குள் வலயத்திற்கு அனைத்து அலகுகளும் உள்ளடக்கிய கட்டடம் அமைக்க எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை இதுவரை எதுவித பயனையும் கொடுக்கவில்லை. வலய அலுவலகம், கல்வி நிர்வாகம், அபிவிருத்தி முகாமைத்துவம் நிதி உட்பட்ட பிரிவுகளில் 72 உத்தியோகத்தர்கள் தற்போது பணி புரிகின்ற போதிலும் போதிய கட்டட வசதிகள் இல்லாததால் உத்தியோகத்தர்கள் பெரும் நொருக்கடிக்கு மத்தியில் பணிபுரிகின்றனர். மூன்று மேசைகள் ஒரே வரிசையில் வைக்கப்பட்டு அதில் ஐந்து உத்தியோகத்தர்கள் பணிபுரிவதைக்காண முடிகிறது. வெளிக்கள உத்தியோகத்தர்கள் வெளி விறாந்தையிலும், சிற்றுண்டிச்சாலை ஒரு கொட்டிலிலும் கடமையாற்றுவதையும் காணமுடிகிறது.

தென்மராட்சி பிரதேசத்தின் கிழக்கே எழுதுமட்டுவாழ் தொடக்கம் மேற்கே நாவற்குளி வரையும் தெற்கே தனங்கிளப்பு தொடக்கம் வடக்கே வடவரணி வரையான பகுதிகளில் உள்ள பாரிய பிரதேசத்தில் 55 அரச பாடசாலைகளையும் 1தனியார் பாடசாலையையும் உள்ளடக்கிய தென்மராட்சி கல்வி வலயத்தின் தேவைகளோ நிறைய உள்ளன. இவற்றுள் ஒரு தேசிய பாடசாலை, 2 1 ஏபிபாடசாலைகளையும் நவோதய, இசுறு பாடசாலைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

வருடாந்தம் வாடகைக் கட்டணம் அதிகரித்த நிலையில் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலயத்திற்கு களஞ்சிய வசதி, கேட்போர்கூடம் போன்றவை இல்லாதது பெரும் குறையாக உள்ளது. வலயத்திற்கு வரும் இலவச பாடநூல்கள் மற்றும் இலவச சீருடைத் துணிகள் போன்றவை சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி போன்றவற்றின் வகுப்பறைகளில் வைக்கப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கப் படுகின்றன. இவற்றின் விநியோகம் முடியும் வரை அந்தப் பாடசாலை வகுப்புகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்புறுகின்றன. நிரந்தர கேட்போர் கூடம் இல்லாததால் மாதாந்தம் நடாத்தப்படும் அதிபர்கள் கூட்டம் உட்பட்ட செயலமர்வுகள் அனைத்தும் அருகில் உள்ள மகளிர் கல்லூரி , டிறிபேக் கல்லூரி ஆகியவற்றில் நடாத்தப்பட்டு வருகிறது.

வலயக் கல்விப் பணிப்பாளர்களாக திரு வ. செல்வராசா திருமதி ம.இருதயநாதன், திருமதி அ.வேதநாயகம், திரு.கு.பிறேமகாந்தன் ஆகியோர் கடமையாற்றியுள்ளனர்.

வலயத்திற்கென கொள்வனவு செய்யப்பட்ட காணி பனை வடலிகளாலும் பற்றைகளாலும் நிறைந்து காணப்படுகின்றன.

நிரந்தரமான காணி இல்லாததால் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற அரச திணைக்கள அலுவலகங்களின் மத்தியில் சகல வசதிகளுடன் கட்டடம் கட்டக்கூடிய காணி இருந்த போதிலும் சில காரணங்களால் வாடகைக் கட்டடத்தில் தென்மராட்சி கல்வி வலயம் இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு:
ஜயந்தன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் நம்மவரிடமே வசதிகள் இருக்கும்போது எமது வளங்களை வெளியாரிடம் ஒப்படைக்கலாமா?




'யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான வாடி வீடு அமைந்திருந்த காணியை லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனிக்கு 99 வருட குத் தகைக்கு வழங்குவதற்கு யாழ் மாநகர சபை திட்டமிட்டுள்ளது' என்ற தகவல் ஒன்று வெளிவந்துள்ளது. அது உண்மை யானது என்றும் அறியப்படுகிறது. இது முதல்வரினால் தனிப்பட்ட முறையில் எதேச்சதிகாரமாக எடுக்கப்பட்ட முடிவுமாகும்.

அவ்விடயம் தொடர்பாக மாநகர சபை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறா னதொரு தீர்மானத்தை நிறைவேற்ற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத் தகவல் யாழ். மாநகர சபை உறுப்பினர் களாகிய எம்மை அதிர்சிக்குள்ளாக்கியுள் ளது. அத்துடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினராகிய மாநகரசபை முதல்வர் மூலம் குறித்த கட்சியினர் உயர் அதிகாரங்களைப் பயன் படுத்தி மாநகர சபைக்கு வெளியில் வைத்து மாநகர சபை தொடர்பாக எடுக் கின்ற முடிவுகளை எதேச்சாதிகாரமான முறையில் நடைமுறைப்படுத்தி வருகின்ற செயற்பாடுகளின் ஓர் அங்கமாகவே இது அமைகின்றது. மேலும் மாநகர சபையின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு மிகவும் உயர்ந்தளவிலான தலையீடாகவும் இதனைக்கருத வேண்டியுள்ளது.

கடந்த மாநகரசபை மாதாந்த கூட்டத்திற்கு அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நான் இல்லாததினால் சமூகம் அளிக்க முடியாமல் போயிருந்தது. குறித்த செய் தியை அறிந்த யாழ்.மாவட்டத்தின் பல சிரேஷ்ட பிரஜைகள் என்னிடம் இவ்வா றான ஒரு தீர்மானத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறும்பினர்கள் ஏன் ஒத் துழைப்பு வழங்கினார்கள் எனக் கேட் டனர் எனவே நான் அவ்விடயம் தொடர் பாக எமது அங்கத்தவர்களிடம் என்ன நடைபெற்றது என்று வினவினேன். அவ் வாறான ஒரு தீர்மானம் மாநகர சபையால் எடுக்கப்படவில்லை' என்றும், அன்றைய கூட்டத்தில் முதல்வரினால் குறித்த காணியை குறித்த நிறுவனத்திற்கு 99 ஆண்டுகளிற்கு குத்தகைக்கு வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டதாகவும், குறித்த கம்பனி நவீன வசதிகள் கொண்ட பிரமாண்டமான விருந்தினர் விடுதியை அமைப்பதற்குப் பெருந்தொகையான பணத்தினை முதலீடு செய்ய உள்ளதாகவும் இதன் மூலம் 125 பேருக்கு வேலைவாய்ப்பு பெறக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதாகவும் கூறிய வேளை, தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் சேர்ந்து வேறும் சில உறுப்பினர் கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாகவும் அவ்வாறு குத்தகைக்கு வழங்க வேண்டுமாயின் கேள்விப்பத்திரங்கள் கோரப் பட்டு அதன் அடிப்படையில் மிக அதிகமான தொகையினைச் செலுத்தத் தயாராகத் இருப்பவர்களிற்கே குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்க வேண்டுமெனப் பிரே ரிக்கப்பட்டுள்ளது என அவர்கள் தெரிவித் தனர்.

அதன் பிற்பாடு இவ் விடயம் தொடர் பாக இன்று வரை மாநகர சபையில் எந்த விதச் கேள்விப்பத்திரமும் கோரப்படாத நிலையில் மாநகர சபை முதல்வர் தனது வழமையான பாணியில் எதேச்சாதிகார மான முறையில் இவ்வாறானதொரு அறி வித்தலை விட்டிருப்பது மிகவும் கவலைக் குரிய விடயமாகும். முக்கியமாக கடந்த மாதாந்த கூட்டத்தில் முதல்வரின் இவ்வா றான செயற்பாடுகளினால் அங்கத்தவர்க ளால் பல எதிர்வாதங்கள் முன் வைக்கப் பட்ட போதிலும் அவர் தொடர்ந்தும் இவ் வாறு செயற்படுவது எந்த வகையிலும் ஆரோக்கியமான விடயம் அல்ல.

### மாநகரசபைக்குத் தேவையற்ற சுமை

மேற் குறித்தவாறு தீர்மானம் எடுக்கப் படவில்லை என்பது ஒரு புறம் இருக்க அவ் வாறு மாநகரசபையால் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டால் மக்களால் அதிகூடிய வாக்குகள் அளிக்கப்பட்டு தெரிவு செய் யப்பட்டவர் என்ற முறையில்அதன் சாதக பாதக நிலையைத் தீர்மானிக்கும் ஓர் உய ரிய பொறுப்பு எனக்குள்ளது. அந்த வகை யில் இவ்வாறு 99 வருடங்களிற்கு குத்த கைக்கு கொடுப்பது என்பது மிக நீண்ட காலம் என்பதுடன் அது ஓர் விற்பனைக் குச் சமமான செயற்பாடாகும். அவ்விட யம் 10 தசாப்தங்களுக்கு தொடர்ந்து வரப் போகின்ற சபைகளிற்கு தேவையற்ற ஓர் சுமையை ஏற்படுத்துகின்றது. இங்கு உண் மையில் யாழ். மாநகர சபையே அரசாங் கத்திடம் இருந்தோ அல்லது ஏனைய நிதி வழங்குனர்களிடம் இருந்தோ நிதியினை பெற்று வாடிவீட்டினை காலத்தின் தேவைக் கேற்ப வடிவமைத்து கட்டி முடித்து அத னைக் குறுகிய கால அடிப்படையில் குத் தகைக்கு வழங்கி அதன் மூலம் வருமா னத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும்.

தற்போது அரசாங்கம் வடமாகாண அபிவிருத்தியென்று கூறி அந்த அபிவி ருத்தி திட்டத்திற்கு வடக்கின் வசந்தம் என பெயரிட்டு பல நூறு கோடிரூபாய் களை ஒதுக்கியுள்ளது எனக் கூறிவருகின் றது. அவ்வாறாயின் அரச கட்சியினால் யாழ். மாநகர சபையை ஆட்சியதிகாரம் செலுத்துபவர்கள் ஏன் இந்த 200 மில் லியன் ரூபாவினை தமது அரசிடம் இருந்து பெற்று இக் கட்டடத்தினை அமைத்து தொடர்ந்து அந்த வளவினையும் கட்டடத் தினையும் யாழ். மாநகர சபையின் உடமை யாக வைத்திருக்க முயற்சி எடுக்காமல் இருக்கிறார்கள்?

தேர்தலில் வெற்றி பெற்றவுடன் யாழ்ப் பாணத்தை சிங்கப்பூர் ஆக்குகின்றோம். யாழ். மாநகரசபையின் அபிவிருத்திப் பணிக்கு பல நூறு கோடி ரூபா பெறுமதி யான செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தப் போகின்றோம் எனக் கூறிய மாந கரமுதல்வர், இச் சிறிய தொகைக்காக ஏன் இவ்வாறான ஓர் செயற்பாட்டைச் செய்ய முன்வந்துள்ளார் என்பதை நோக் கும் போது வியப்பாக உள்ளது.

யாழ். அபிவிருத்தி, நிதியுதவி மற்றும் வேலைவாய்ப்பு என்ற சொற்களைப் பயன்படுத்தி எமது யாழ்.வளங்களை வெளியாருக்கு கண் மூடித்தனமாக தாரை வார்ப்பதை நாம் அனுமதிக்க முடியாது. கடந்த காலத்தில் வடக்கின் வசந்தம் என கூறிக் கொண்டிருந்த வேளையெல்லாம் இடம் பெற்ற வர்த்தக மற்றும் நிர்வாக கட்டுப்பாட்டு செயற்பாடுகளை அவதா னித்தால் அது வடக்கின் வசந்தம் எனக் கூறு வதை விட தெற்கின் வசந்தம் என கூறு வதே பொருத்தமானதாகும். ஏனெனில் இக் [illegible] வளங்கள்- முக்கிய மாக [illegible] கையிருப்பு - இங்கிருந்து வடக் கிற்கு வெளியேயே கை மாற்றியது என் பதை யாரும் மறுக்க முடியாது. அதன் ஓர் அங்கமாகவே குறித்த காணியை குறித்த நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்ற விடயமும் அமைந் துள்ளது.

### யாழ். முதலீட்டாளர்களின் கோரிக்கை விட்டிருக்கலாமே

அதாவது மாநகர சபையால் நிதியினை பெற்று வாடி வீட்டினை கட்டி முடிப்ப தற்கு முடியாத நிலைகாணப்பட்டால் அதற்கான முதலீட்டைச் செய்யுமாறு யாழ். முதலீட்டாளரிடம் கோரிக்கை விடப்பட் டிருக்க வேண்டும்.

எமது யாழ். முதலீட்டாளர்களின் பலத்தை அனைவரும் அறிவர். யாழ்ப்பாணத்தில் இக்கட்டான சூழ்நிலை உருவாகிய வேளை யில் யாழ்ப்பாணத்திற்கான கப்பல் சேவைகளை வழங்கிய பல முதலீட்டா ளர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். அது மட்டுமன்றி இலங்கையின் முழுப்பகுதி யிலும் - இலங்கைக்கு வெளியில் கூட யாழ். முதலீட்டாளர்கள் பெருமளவு முதலீட் டைச் செய்துள்ளமையை அனைவரும் அறிவர். இவ்வாறான வளங்கள் இருக்க எமது உள்ளூர் முதலீட்டாளர்களிற்கு சந்தர்ப் பம் அளிக்காமல் முதல் தோற்றத்திலேயே லங்கா ஏரிக்ஸ் லீசிங் கம்பனிக்கு வழங்கு முயற்சி எடுப்பது எமது முதலீட்டாளர்க ளுக்கான சந்தர்ப்பதை மறுப்பதாகவே அமையும்.

இதேவேளை எந்தவிதமான கேள்விப் பத்திரமும் கோரப்பட்டிருக்காத நிலை யில் குறித்த நிறுவனத்திற்கு வழங்குவதற் கான எண்ணத்தை வெளிப்படுத்தியி ருப்பது பலவித சந்தேகங்களைத் தோற்று விக்கின்றது. அதிலும் எமது பிரதேசங்க ளில் கால் பதித்து ஆதிக்கம் செலுத்துவ தற்கு முயற்சி எடுப்பவர்களின் நோக்கத்தை அடைவதற்கான ஒரு செயற்பாடாகவே இது அமையும்.

125 பேருக்கு வேலைவாய்ப்பு என்ற விடயத்தை நோக்கும்போது அது நடை முறைக்கு எவ்வாறு சாத்தியம் என் பதும் கேள்விக்குறியே? ஏனெனில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் உருவாகிய 'சதொச' போன்றவற்றில் நிர்வாகப் பொறுப்பை வகிப்பவர்கள் யார் என்பதை அவதா னித்தால் இவ் விடயம் நன்கு புரியும்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் வெளி யாள்களின் வரவு அதிகரித்திருப்பதனால் அதிக விடுதி வசதிகள் தேவை என்பது உண்மைதான். அத் தேவையினை நிறை வேற்றுவதற்கு உண்மையில் ஆர்வம் இருந்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஞானம்ஸ், சுபாஸ் மற்றும் அசோக் போன்ற ஹொட்டல்களைப் பெற்று அதனைத் திறம்படச் செயற்பட வைப்பதற்கு முயற்சி எடுத்தல் சிறந்ததாக அமையும். தற்போது யுத்தம் முடிவடைந்த நிலையில் நகரின் மத்தியில் இவ்வாறான படைத் தலைமை அலுவலகம் அவசியம்தானா? ஏன் மாந கரசபை இது தொடர்பாகக் கரிசனை கொள் ளாமல் இருக்கின்றது.

மேற்குறித்தவாறு குறித்த கட்டடத்தை குறித்த கம்பனிக்கு ஒப்படைப்பதற்கான தீர்மானம் யாழ்.மாநகரசபையில் கொண்டு வரப்படுமாயின் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் உறுப்பினர்களால் அதனை தடுத்து நிறுத்த முடியாது. ஏனெனில் அத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு வேண் டிய பெரும்பான்மைப்பலம் ஆறும் ஐக் கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு இருப்பதனால் அவர்கள் அதனை இலகு வாக நிறைவேற்றுவர். எனவே இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய பலம் யாழ். மக் களிடையே உள்ளது. எனவே யாழ்ப்பா ணத்தின் சிரேஷ்ட பிரஜைகள், தொழில் அதிபர்கள், கல்விமான்கள், இந்த விட யத்தில் விழிப்பாக இருந்து எமது வளங் களை வெளியாருக்கு ஒப்படைப்பதை, தடுப்பதற்கு தமக்கு இயலக் கூடிய எல்லா வழிகளிலும் செயற்படவேண்டும் என உரிமையுடன் வேறும் நடவடிக்கைகளையும் என கேட்டுக் கொள்கின்றேன். ★

**மு.றெமிடியாஸ்,**
மாநகரசபை உறுப்பினர்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.





**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 701146337 முதல் 701163651 வரை. சீட்டிழுப்பு இல. 612 திகதி 07-01-2010

**வெற்றி எண்கள்**

**08 21 27 59 X** (ஆங்கில எழுத்து)

**ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,000,000/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 2,000/= | 38,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 386 | 1,000/= | 386,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 600 | 1,000/= | 600,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15415 | 60/= | 924,900/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7361 | 40/= | 294,440/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 181341 | 20/= | 3,626,820/= |
| | | மொத்தம் ரூ. | 6.670.160/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்

தங்கக்காசு வெற்றியாளர் - J.L. பிரபாத் மதுசங்க லியனகே - பொரலஸ்கமுவை.

கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - K.G.C. வசந்த பெரேரா - பாணந்துறை.

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **7,070,160/=**

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 701153929-1-04 |
| நுவரேலியா | 701149256-4-45 |
| களுத்துறை | 701151740-4-44 |
| அநுராதபுரம் | 701147252-7-08 |
| கொழும்பு | 701148069-1-05 |
| கம்பஹா | 701162288-1-24 |
| மொனராகலை | 701150302-7-35 |
| மட்டக்களப்பு | 701159793-1-09 |

**எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்**

**ரூ. 10,490,890/=**

தொடர் இல. 601169844 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஜனவரி 11 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வாராந்த நீரிழிவு சிகிச்சை நிலையத்தினை அண்மையில் கைதடியில் ஆரம்பித்துவைத்தனர்.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.ஜெயவத்சலன் கட்டடத்தினை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் பிராந்தியத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் உட்பட கழக உறுப்பினர்கள் நிற்பதையும் காணலாம். (50-207)



சுன்னாகம் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலைய மண்டபத்தில் குழந்தைகளுக்கான 'கொமேட்' வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வலி.தெற்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபைத் தலைவர் வைத்திய கலாநிதி ந.கிருஷ்ணராசா பயனாளி ஒருவருக்கு 'கொமேட்' வழங்குவதையும் அருகில் நிலையச் செயலாளர் ச.கனகசபாபதி, மருத்துவ மாது திருமதி ப.சசிகலா ஆகியோர் நிற்பதையும் காணலாம்.



தேசிய சேமிப்பு வங்கி வடமாகாண அஞ்சல் வங்கிக் கிளையினரின் ஏற்பாட்டில் 2009 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண் மையில் வங்கி வளாகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் கௌரவித்த மாணவர்களுடன் பாடசாலை அதிபர்கள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.



சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் அண்மையில் இலவச பாடநூல் வழங்கும் நிகழ்வு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி சி.சதாசிவம் மாணவி ஒருவருக்கு பாடநூல் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் செல்வி நா.ஜெயராணி நிற்பதையும் படத்தில் காணலாம். (50-29)




நவாலி சென்.பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலையைச் சேர்ந்த தரம் 5 மாணவர்கள் தமது சுற்றாடல் செயற்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்ட காகித உறைகளை மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஏ.புஸ்பராணியிடம் கையளிப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் பங்கிராஸ், ஆசிரியை செந்தினி மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள், மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (50-100)



யாழ்.வண்.சிவன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் ஜே/82 கிராம சேவகர் சபாரத்தினம் தலைமையில் டெங்கு ஒழிப்பு தினத்தை முன்னிட்டு யாழ்.வண்ணார்பண்ணை சிவன் கோயில் வடக்கு வீதியில் சிவன் விளையாட்டுக் கழகமும் அப்பகுதி வாழ் மக்களும் இணைந்து சிரமதானப் பணிகளில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம். (50-16)



சமூக அபிவிருத்தி மன்றத்தில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வி.கே. சிவஞானத்துடன் மன்றத்தின் தலைவி திருமதி ஜெயமணி யோசப், மன்றக் [illegible] ஆனந்தவேல், மன்ற உப தலைவர் க.முதலியார், மன்றத்தின் இணைப் [illegible] ஜெக தீசன், மன்றச் செயலாளர் பொ.சண்முகசுந்தரம் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.(50-224)



நாவலி வடக்கு-பெத்தனாச்சியம்மன் ஆலயத்திற்கு கடந்த 50 வருடங்களுக்குப் பின்னர் [illegible] முழு முயற்சி மேற்கொண்ட ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இ.சபாரத்தின [illegible] பரிபாலனசபை உப தலைவர் சி.ஆனந்தர் மாலை அணிவித்து-பொன்னாடை போர்த்து கௌரவிப்பதனைக் காணலாம். (படம்: இரா.சுதர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளூக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளூக்கோஸ் வாங்கும்போது குளூக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளூக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ நறுமணைப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## டெங்கு நோய் விழிப்புணர்வு ஒருங்கிணைப்புக் கூட்டம்

நல்லூர், ஜன.9

நல்லூர் பிரதேச டெங்கு நோய் கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர்ப் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார பணிமனை உத்தியோகத்தர்கள் உட்பட சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச செயலக, பிரதேசசபை உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அணைத்து பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(50-111)

# நினைவஞ்சலி

மூன்றாம் ஆண்டு — இரண்டாம் ஆண்டு



மலர்வு: 01.01.1929
உதிர்வு: 21.01.2007

மலர்வு: 16.04.1953
உதிர்வு:03.01.2008



அமரர் நாகநாதபிள்ளை பரமலிங்கம்
(நந்தன் ஸ்ரோர்ஸ், கொழும்பு)
திதி: 18.01.2010

அமரர் பரமலிங்கம் உதயகுமாரன்
(லிங்கன் செரமிக்ஸ், யாழ்ப்பாணம்)
திதி: 09.01.2010


"எம் வாழ்விற்கும் உயர்ச்சிக்கும் அச்சாணியாய், ஜீவநாடியாய் இறுதிவரை எமக்காகவே யாவையும் அர்ப்பணித்து வாழ்வாங்கு வாழவைத்த வானுறையும் தெய்வங்களே!
ஆண்டுகள் எத்தனைதான் கடந்தாலும் ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக மாறாத நினைவுகளுடனும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளுடனும் எம் விழிகளில் கண்ணீர் மல்க ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

160, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர். — 4A, மல்வத்த குறுக்கு வீதி, தெகிவளை.

(93548)

# 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 . 08 . 1937



சிவபதம் 07 . 01 . 1994

அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்
(உரிமையாளர், அம்பிகா டிஸ்பென்சறி)

எங்கள் குடும்பத் தலைவரே!
நீங்கள் பகிர்ந்து கொண்ட அன்பு
அறிவு, அறம், ஆற்றல் அனுபவங்களில்
நாம் வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
நுணாவில் சிதம்பர விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்பிகா டிஸ்பென்சறி, சாவகச்சேரி. — குடும்பத்தினர், சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

(93540)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும்
மீசாலையை வசிப்பிடமாகவும்
கொண்ட
அமரர் பொன்னையா
கணபதிப்பிள்ளை
(பிரபல மேஷ்திரியும், கட்டட ஒப்பந்தகாரரும்)

தோற்றம்: 19.06.1947
மறைவு: 10.12.2009

பெற்றெடுத்தோர் செல்போனில் கூக்குரலிட
பேரமக்கள் பெரும் துயரில் ஆழ்ந்திட
மைத்துனிமார் துடிதுடிக்க
தாய் மாமனின்றி மருமக்கள் ஏங்க
தாயோ தீயிட மகனின்றி வாட
தங்கையவளைத் தனியே விட்டு
சகலனையும் பொறுப்பாய் விட்டு
சொர்க்கம் காணப்போனீரோ? ஐயா
வெள்ளைமாவடியானிடம்
சரணடைகின்றோம்.
உம் ஆத்மா சாந்தியடைக.

கட்டட கலையில் நிபுணர் ஐயா நீர்...
கட்டட வடிவமைப்பில்
கற்காத மேதையே!
ஊரார் வாழ மனையமைத்த
மனைப் பொறியியலாளரே!-உம்
மனை பூர்த்தியாக முன்னே
மனையாளைத் தனியே
பரிதவிக்க விட்டதேனோ?

என்றென்றும் உம் நினைவில்:
மனைவி,
பிள்ளைகள்.

மாவடிப்பிள்ளையார் கோயிலடி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

(93523)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
# நன்றி நவிலலும்



மலர்வு
21.02.1923

உதிர்வு
10.12.2009

## அமரர் நாகமுத்து கந்தசாமி

(முதலாளியப்பா)
(உரிமையாளர்,செல்வா இன்டர்ஸ்ரீஸ்-வல்வெட்டி.)

அன்பிற்கோர் இலக்கணமாய் விளங்கியவரே!
அனைவரையும் பாசத்தோடு அணைத்த அப்பாவே!
அறிவும் உழைப்பும் எம் சொத்தென உணர்த்தியவரே!
அனைவரும் இங்கு உங்கள் பிரிவால் துடிக்கின்றோம்
அன்றொரு நாள் மாலைப் பொழுதில் காலன் உங்களைக் கவர்ந்தாலும்
அனைவர் மனதிலும் நீங்காது நீங்கள் வாழ்வீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கார்த்திகைத் திங்கள் 24ஆம் நாள் (10.12.2009) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் மறைவையொட்டி நேரிலும், தொடர்பு சாதனங்கள் மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்ட அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (09.01.2010) சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனையடுத்து மு.ப.11 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரிக்காடு வீதி,
வல்வெட்டி.

(91966)

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

# நெஞ்சகலா நினைவலைகள்
# அந்தியேட்டி அழைப்பு

9ஆம் ஆண்டு — 31ஆம் நாள் நினைவு

பிறப்பு 04.05.1917



இறப்பு 22.01.2001



பிறப்பு 04.05.1924

இறப்பு 11.12.2009

அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை — திதி: சதுர்த்தசி

திருமதி கணபதிப்பிள்ளை முத்துப்பிள்ளை — திதி: ஏகாதசி

எங்கள் அன்புத் தெய்வம் அமரர் கணபதிப்பிள்ளை முத்துப்பிள்ளை அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து உற்ற நல்லுதவிகள் புரிந்த அயலவர்கள், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி, கடிதமூலம் எமது துயரில் பங்குகொண்டோருக்கும் மரணச் சடங்கினை நல்ல முறையில் நடத்திய ஆச்சாரியப் பெருந்தகைகளுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, அன்னாரின் சபிண்டீகரண சிரார்த்தக் கிரியைகள் நாளை (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும்வருகை தந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(93542)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்குள் சிக்கித் தவிக்கும் அரசியல் கைதிகள்

**நாள்கள், மாதங்கள், ஆண்டுகளாக அல்லாது தமது முழு வாழ்நாள்களையே சிறைகளில் கழிக்கும் அரசியல் கைதிகள் தொடர்பாக மனிதாபிமான நடவடிக்கையொன்று அவசிய மாகிறது என்று சாரப்பட அமைகிறது இக்கட்டுரை.**

**சுரேக்கா சமரசேன என்பவரால் எழுதப்பட்ட இக்கட்டுரை, டிசெம்பர் 27 ஆம் திகதிய 'ராவய' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.**

**அதன் தமிழ் வடிவமே இது.**



2009 ஆம் ஆண்டின் மே 19 ஆம் திகதியென்பது இந்நாட்டில் நிலவிய யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட தினமாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கையென்பது பயங்கரவாதம் வேருடன் களைந்தெறியப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பௌத்திரமானதொரு பூமி என்பதாகவும், இன்று இந்நாட்டில் பயங்கரவாதமென்ற அச்சுறுத்தல் நிலை இல்லையென்பதால் நாட்டின் பிரஜையொருவருக்குப் பயமின்றியும் 'மகிழ்ச்சியுடனும்' 'சுதந்திரமாகவும்' வாழ்க்கையைக் கொண்டுசெல்ல முடியுமென்பதாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. அத்தோடு, சிங்களவர், தமிழரென்ற வேறுபாடற்று நாட்டின் அனைத்து மக்களும் ஒரு குடும்பமாக ஒத்து வாழவேண்டியுள்ளனர் என்பதும் புரியவைக்கப்பட்டது.

அதையடுத்து இந்த 'ஆச்சரிய கருமத்தை' நிகழ்த்தி முடித்த 'உண்மையான வீரர் யார்?' என்பதை உறுதிப்படுத்திக்கொள்வது தொடர்பான பிரச்சினை மட்டுமே எஞ்சியிருந்தது. வெகுவிரைவில் அந்த வினாவுக்கும் 'தீர்ப்பொன்று' கிட்டக்கூடும். அது, ஜனவரி 26 ஆம் திகதியன்று நடத்தவிருக்கும் மக்கள் தீர்ப்புக்கு அமையவேயாகும். இதுவே, யுத்தத்தில் வெற்றியீட்டிக்கொண்ட தரப்பு வெற்றியை ஜீரணித்துக் கொண்டுள்ள விதமாகும்.

யுத்தத்தில் தோல்வியடைந்த தரப்பின் தலைமைத்துவம் நந்திக்கடல் என அழைக்கப்படும் குடாக்கடல் அல்லது கலப்புக்கடலில் உயிரிழந்து வீழும்போது, அன்றைய அளவிலும் அவர்களது போராட்டத்தைத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு வெற்றிபெறும் தரப்புடன் இணைந்து கொண்டிருந்த கருணா அம்மான்கள், பிள்ளையான்கள் போன்றோர் அமைச்சர்களாகவும், முதலமைச்சர்களாகவும் உபசரிப்புகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். இறுதிப் போருக்கு முன்னரான தினத்தில் இறுதிச் சந்தர்ப்பத்தில் இராணுவத்திடம் சரண டைந்த ஜோர்ஜ் மற்றும் தயா மாஸ்ரர்க ளும் கூடத் தொடர்ந்தும் புலிகளாக அல்லாது, செல்லப் பூனைக்குட்டிகளாக உருமாற்றம் பெற்றனர்.

**திஸநாயகம்**

இதற்கிடையில்,வான் பரப்பிலிருந்து விழும் குண்டுகளுக்கு இரையாகி நிராயுததாரிகளான வடபுலத்தின் அப்பாவிக் குடிமக்கள் மாண்டு போகின்றனர் என்றும், அவ்விதம் யுத்த மோதல்களுக்கு மத்தியில் சிக்குண்டு காயப்படும் குடிமக்களுக்கு மருந்து வகைகள் கிட்டுவதில்லையெனவும் குறிப்பிடும் இரு கருத்துகளை எழுதிய ஊடகவியலாளரான ஜே.எஸ்.திஸநாயகம் விடுதலைப்புலி உறுப்பினரென முத்திரை குத்தப்பட்டு, நீதிமன்றத் தீர்ப்பொன்றிலும் கூட, குற்றவாளியாக்கப்பட்டு, கடூழியச் சிறைவாசம் என்றவாறு இருபதாண்டுகால சிறைத்தண்ட னைக்கு உள்ளாக்கப்பட்டார்.

திஸநாயகத்துக்கு எதிராக வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக ஒருசிலர் எழுதுவதற்கு, கருத்து வெளிப்படுத்துவதற்கு மற்றும் வீதிப் போராட்டங்களில் இறங்க ஆரம்பித்த மைக்குக் காரணம், அவர் அரசியல் கைதி யொருவர் என்பதும் அவரை விடுவிப்பது தொடர்பாகப் போராட்டங் களை நடத்த வேண்டியுள்ளது ன்பதையும் முன்னி லைப்படுத்திக் கொண்ட காரணத்தினாலேயே யாகும். ஆனாலும், அப்போராட் டங்களும் கூடப் படிப் படியாகச் சூடுஆறிப் போய் குளிர்ந்து வருவது தெரிகிறது.



**'சந்தேக' நபர்கள்**

அது எவ்வாறான போதிலும், திஸநாயகத்துக்காகப் போராடி நிற்பதற்கு - ஒருசிலராவது முன்வரும்போது, தமக்காகப் போராடி நிற்பதற்கு - குரல் எழுப்புவதற்கு, எவருமேயில்லாது, விசாரிக்கப்படும் வழக்கு ஒன்றோ, வழக்குகளுக்கான அறிகுறியொன்றோ கூடத் தென்படாத, குற்றச்சாட்டு எதுதானும் தாக்கல் செய்யப்படாதுள்ள, அரசினது/ இராணுவத்தினது அல்லது இரகசியப் பொலிஸாரின் சந்தேகத்துக்குப் பாத்திரமாகியுள்ளதால் மட்டுமே சிறைக்கூடங்களுக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளோராக ஏறத்தாழ ஆயிரத்துத் தொழாயிரம் பேர் வரையில் சந்தேக நபர்கள் என்ற முத்திரையின் கீழ் இன்றைய அளவில் வெலிக்கடை, யாழ்ப்பாணம், அநுராதபுரம், மட்டக்களப்பு, பூஸா மற்றும் போகம்பரை சிறைச்சாலைகளில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

உள்நாட்டு, வெளிநாட்டுச் சட்ட நிபுணர்களுக்கு அமைய 'காட்டுத் தர்பார் சட்டம்' என்பதாகக் குறிப்பிடப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் நியமங்கள் மற்றும் 'அவசரகாலச்சட் டத்தின்' கீழ் குற்றச்சாட்டுகளைத் தாக்கல் செய்வதையும் விடுத்து, வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள மற்றும் அந்தளவில் மட்டும் 'புலிகளேயென' முத்திரை குத்தப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட சிறைக்கைதிகளுக்கு சிறைக்கூடங்களினுள்ளே ஏனைய சிறைக்கைதிகளுக்குச் சமமாகக் கிட்டும் கவனிப்புகள் கிட்டாததோடு, பலதரப்பட்ட துன்புறுத்தல்களுக்கும் அவர்கள் உள்ளாக நேர்வதும் இரகசியமொன்றல்ல.

**சிறைச்சாலைகளின் உள்ளே...**

மேற்குறிப்பிட்ட சந்தேக நபர்கள் சிறைச்சாலைகளின் உள்ளே 'புலிகள்' என அடையாளப்படுத்தப்படுவதோடு, சிறைச்சாலைகளின் உள்ளே சாதாரணமாக இடம்பெறும் வாய்த்தர்க்கங்கள் நீண்டு செல்லும்போது, புலிகள் மீது பகையுணர்வு கொண்டிருக்கும் 'நாட்டுப்பற்று மிக்க' சிறைக்கைதிகளின் கடும் தாக்குதல்களுக்கும் உள்ளாகின்றனர். அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் கூட, அத்தகையதொரு சம்பவம் நிகழ்ந்துள்ளதோடு, அச்சிறைச்சாலையின் 'எல்' பிரிவில் இருந்த விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் அதை அண்டியிருந்த பிரிவுகளில் இருந்த சந்தேக நபர்களின் தாக்குதலுக்கு உள்ளானமை, வெளிவராது மூழ்குண்டு போனதொரு விடயமாகும்.

இந்த விடுதலைப்புலிச் சந்தேக நபர்களுக்கு அவர்களைக் கண்டு செல்லவரும் பார்வையாளர்களின் வருகை வரையறுக்கப்படுவதோடு, அவர்களது குடும்ப உறுப்பினர்களின் தொடர்ச்சியான ஆதங்கமாகியிருப்பது அவர்களுக்கு ஏற்பட்ட இடைஞ்சல்களோ, விபத்துகளோ அன்றியும் அவர்களை விடுவித்துக் கொள்வதற்கான கோரிக்கை வேண்டுதல்களோ அல்ல, அவர்களைச் சந்தித்து உரையாடுவதற்கு வாய்ப்பேற்படுத்தித் தருமாறு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் முன்னால் யாசித்து இரைஞ்சி நிற்க வேண்டியிருப்பதேயாகும்.

**சட்டத்தின் புகலிடம்**

முதற்கட்ட நடவடிக்கையாக நீதிவான் நீதிமன்றில் நிறுத்தப்படும் இச் சந்தேகநபர்கள் சம்பந்தமான ஆவணங்கள் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்படு வதோடு, சட்டமா அதிபரின் கவனத்துக்கு உள்ளாகாத அந்த ஆவணங்கள், சட்டமா அதிபர் திணைக்களத்தில் குவிந்துள்ளன. அடுத்த கட்ட நடவடிக்கையாக அவர்கள் சிறைச்சாலையின் உள்ளே செயற்படும் விசேட நீதிமன்றத்திடம் பாரப்படுத்தப்படு வதோடு அங்கு நிகழும் ஒரே நிகழ்வு, அவர்கள் நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டு அடுத்த தவணையொன்று வழங்கப்பட்டு, எந்தவொரு விசாரணைக்கும் உள்ளாக்கப்படாது காலத்தை இழுத்தடித்துச் செல்லப்படுவதாகும்.

அதுபோன்றே, உலகில் அங்கீகரிக்கப்பட்டுள்ள நீதிமன்ற சம்பிரதாய மரபுகள் கூட மீறப்படும் அந்த மன்றங்களில் சந்தேக நபர்கள் இரு கரங்கள் பிணைக்கப்பட்ட கைவிலங்குகளுடனேயே விசாரணைக் கூண்டினுள் நிறுத்தப்படுகின்றனர். அதுபோன்றே, அவர்களுக்கு சட்டத்தரணியொருவரின் அனுசரணையுடன் பகிரங்க நீதிமன்றத்தின் முன்னிலையில் எந்தவொரு கருத்தைத்தானும் வெளிப்படுத்துவதற்கு அவகாசம் அற்றுப்போவதும் கூட புதுமையான நீதிமன்றச் சம்பிரதாயமாகும்.

**தமிழில் : சரா**

எவ்வாறானபோதிலும், 'பகிரங்க நீதிமன்றம்' என்ற அடிப்படைக் கோட்பாட் டுக்காக முரண்பட்டதான இவ்விதமான நீதிமன்றங்களை அடையாளப்படுத்து வதற்கு சிறைக் கைதிகளின் [illegible] கலாசாரப் பாஷையில் உருப்பெற்றுள்ள நாமம் 'பாதாள நீதிமன்றம்' என்பதாகும்.

**நியாயமற்றது**

விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டப் பிரிவில் தலைமைத்துவம் வகித்த கருணா அம்மான் 'குற்றமற்ற வராவது' சட்டத்தின் முன்னிலையில் அல்லவெனில், அவருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்புரிமை கிட்டியதால் அது அவ்வாறாகியிருக்கக் கூடும் எனக் கருதவேண்டியுள்ளது.

பிள்ளையானுக்கும் கூட அது அவ்வாறே பொருந்தும். அதாவது, அவர் 'குற்றமற்றவ'ராவது கிழக்கு மாகாணத்தை வென்றெடுத்து வழங்கியதே காரணமாகியிருக்க வேண்டியுள்ளது. இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த மற்றும் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலிருந்து இனங்காணப்பட்டுள்ள விடுதலைப்புலிப் போராளிகள் மற்றும் விடுதலைப்புலிகளுக்கு உதவி, ஒத்தாசைகளை வழங்கியுள்ளோரெனக் கருதப்படுவோர் போன்ற தரப்பினரைத் திறந்தவெளிப் புனர்வாழ்வு முகாம்களுக்கு உள்ளீர்த்துக் கொள்ளும் கருமத்தின் போது, 'விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் சட்டப்படியல்லாத' அதாவது, 'புறம்பான தண்டனைகளுக்கு' உள்ளாவதானது உண்மையில் 'அநீதியொன்று' அல்லவெனில் வேறு எதுவாக இருக்கமுடியும்?

**பொதுமன்னிப்பு**

உலகளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்பட்ட - பலதரப்பட்ட கெரில்லாப் போராட்டங்களின் இறுதியில் மற்றும் கிளர்ச்சிகள் அடக்கப்பட்டதன் இறுதியில் 'குற்ற விசாரணைச் சபைகள்' கூட்டப்பட்டு, சம்பவங்கள் விசாரிக்கப் பட்டு குற்றவாளிகளுக்குத் தண்டனைகள் வழங்கப்படும் மற்றும் ஏனையோருக்குப் 'பொதுமன்னிப்பு'(Amnesty) போன்ற சர்வதேசத்தின் (ஐ.நா.சபையும் கூட உள்ளடங்கிய) அங்கீகரிக்கப்பட்ட முறைமைகள் நிலவுகையில் இலங்கை யானது தனது சிவில் யுத்தம் முடிவுக்கு வந்துள்ளபோதிலும் அத்தகைய முயற்சியைக்கூட இன்னமும் மேற்கொண்டிருக்கவில்லை.

1971 இல் ஜே.வி.பி. கிளர்ச்சி அடக்கப்பட்டதன் பின்னர், விரைந்து கூட்டப்பெற்ற குற்றவியல் நீதி விசாரணை ஆணைக்குழு மற்றும் ஆபிரிக்கா சிவில் யுத்தத்தின் முடிவில் உண்மை விளம்பல் ஆணைக்குழு (Truth Commission) போன்ற குற்ற விசாரணைச் சபைகள் கூட்டப்படுவது வழமை. எவ்வாறான போதிலும், விடுதலைப் புலிகள் அமைப்பின் உயர்மட்டத் தலைவர்களுள் உயிருடன் பிடிக்கப்பட்ட ஒரே தலைவரான கே.பி. கூட இன்னமும் நீதிமன்றமொன்றின் முன்னிலையில் கொண்டுவரப்படாதுள்ளதொரு 'சட்டப்படியல்லாத' நிலைப்பாடுகளின் மத்தியில், ஒரு விதத்தில் அத்தகைய 'விசாரணைச் சபைகள்' அல்லது 'பொதுமன்னிப்பொன்று' பெறுவது தொடர்பாகக் குரலெழுப்புவதே முக்கியத்துவம் பெறாதிருக்கக்கூடும்.

இருந்தபோதிலும், நாள்கள், மாதங்கள், ஆண்டுகளாக அல்லாது தமது வாழ்நாள் முழுவதும் வெறும் 'சந்தேகம்' என்பதால் மட்டுமே தண்டனைகளை அனுபவிக்கும் சந்தேக நபர்கள் தொடர்பாக தேசிய மட்டத்தில் ஏதோ விதத்திலான தீர்வொன்று எட்டப்பட வேண்டியுள்ளது. அவ்வாறில்லாதபோது அரசு, கருணாவுக்கு, பிள்ளையானுக்கு மற்றும் திஸநாயகம் விடயத்தில் நடந்து கொள்ளும் இருவிதப் போக்குத் தொடர் பாக முரண்பாடொன்று தலைதூக்கு வதைத் தடுத்துநிறுத்த இயலாது.

திஸநாயகம் சம்பந்தமாக அல்ல, மேலும் ஆயிரத்துத் தொழாயிரம் வரையி லான பயங்கரவாதத்தின் போர்வையில் சட்டத்தின் இரும்புப் பிடிக்குள் அகப்ப டுத்தி விடப்பட்டுள்ள தரப்பினருக்கு நியாயம் கிட்டும் விதத்தில் அரசு ஏதோ விதத்திலான மனிதாபிமான நடவ டிக்கையொன்றை மேற்கொள்ளாதிருப்பது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அண்மையில் பனிப்புலம் முத்துமாரி அம்பாள் ஆலய முன்றலில் டெங்கு ஒழிப்புக் கருத்தரங்கு நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்ட இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டிபிள்யூ.எம்.ஏ.ஜே.விஜயரட்ண, பனிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.சபாநாயகத்தினால் மலர்மாலை அணிவித்து வரவேற்பதை முதலாவது படத்திலும் மக்கள் சிரமதானம் மூலம் ஆலயப் பிரதேசத்தை துப்புரவு செய்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். (50-130)

# சுனாமி நிதியில் 47 கோடி அமெ.டொலர் மாயம்; இந்தக் கையாடலுக்குக் காரணமானவர்கள் யார்?

## கேள்வி எழுப்புகிறது 'டிரான்ஸ்பரன்ஸி இன்ரநஷனல்'

கொழும்பு, ஜன.9

நாட்டிலுள்ள பல்வேறு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசசார்பற்ற ஏனைய நிறுவனங்கள் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றினால் ஆழிப்பேரலை அனர்த்த மீள்நிர்மாணப்பணிகளுக்கும், மீள்குடியேற்றப் பணிகளுக்குமெனப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிதிகளில் 47 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான பணம் மாயமாகிவிட்டது.

இலங்கை 'டிரான்ஸ்யன்ஸ் இன்ரநஷனல்' அமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தப்பணம் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளில் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால் 2005 முதற்கொண்டு கணக்காளர் நாயகத்தினால் இப்பணம் தொடர்பான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இப்பணத்தில் இவ்வளவு பெரிய தொகை காணாமல் போயிருப்பதற்கான சரியான காரணம் கண்டு பிடிக்கப்படாமல் இருந்து வருகிறது என்று 'டிரான்ஸ் பெரன்ஸி இன்ரநஷனல்' அமைப்பைச் சேர்ந்த ருக்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கையில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளும் நிதிகள் தொடர்பாக முழு அளவில் ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டியது கணக்காளர் நாயகத்தின் கடமைகளில் முதன்மையானதாகும். அரசு அங்கீகரித்துள்ள விதிமுறைகளில் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளும் நிதிகளும் இதற்குள் அடங்கும் என்று நாணயக்கார குறிப்பிட்டார்: இந்த நிதிகளுக்கு அரசே முழுப்பொறுப்பு என்றார் அவர்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்குக் கிடைக்கின்ற நிதிகள் தொடர்பாகக் கண்காணிக்க செயற்றிறன்மிக்க பொறிமுறையொன்று இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

வெளிநாட்டுக் கொடையாளிகளால் இலங்கைக்கு வழங்குவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த தொகை 2,126, 771, 858 அமெரிக்க டொலர் என்றும், உண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையின் மதிப்பு 1, 075, 375, 348 அமெரிக்க டொலர் என்றும் இதில் செலவுக்குட்பட்ட தொகை 603,443, 908 அமெரிக்க டொலர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தக் கொடுப்பனவுகள் தொடர்பாக 'டிரான்ஸ் பெரன்ஸி இன்ரநஷனல்' அமைப்பு சமீபத்தில் வெளியிட்டிருந்த சில தகவல்களையடுத்து ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல விடுத்த அறிக்கையில் இப்போதைய அரசின் நிதி அமைச்சையும் தன் பொறுப்பில் கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ காணாமல் போயுள்ள நிதி தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

டிரான்ஸ் பெரன்ஸியின் அறிக்கையானது அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுவதற்காக விடுக்கப்பட்ட ஒன்று. ஜனாதிபதித் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெறவிருக்கும்வேளையில் அரசாங்கத்தைச் சிக்கலில் மாட்டிவிடுவதற்காக இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாக அரசசார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)


## காணியும், வீடும் விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, மானிப்பாய் வீதியில் 5 ½ பரப்புக் காணியுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- S.T.தர்சனி, கல்வியங்காடு. தொ.பே: 0771994926


## கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தின் பெயரில் பணம் சேகரிக்கும் போலிக் குழுக்கள்

யாழ்ப்பாணப் பகுதியில் கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தின் சமூக மட்டக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்றும் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் பொருட்டு தாம் நிதி சேகரிப்பதாகவும் கூறிக்கொண்டு சில போலிநபர்கள் வீடு வீடாகச் சென்று நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றமை பற்றிய தகவல் தெரியவந்துள்ளது.

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனமானது இன, மத, சாதி வேறுபாடின்றி மக்கள் மத்தியில் பல ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம். தற்போது யாழ்.குடாநாட்டு மக்களில் அனேகமானவர்கள் கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் பயனாளிகளாகவும் பங்கேற்பாளர்களாகவும் உள்ளனர்.

இத்தகைய போலி நிதி சேகரிப்பவர்களின் நடவடிக்கை எமக்கு கவலை அளிப்பதாகவும், எமது நிறுவனத்தின் செயற்பாடுகளைக் களங்கப்படுத்துவதாகவும் உள்ளதால் , இத்தகையவர்களை மக்கள் இனம்கண்டு அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்கின்றார்.

இயக்குநர்
கரித்தாஸ்-கியூடெக்,
யாழ்ப்பாணம்.

(சி/563984)

## காயமுற்ற படையினருக்காக மக்கள் தானம் செய்த இரத்தத்தை இந்தியாவுக்குத் தானம் செய்தது அரசு!

கொழும்பு, ஜன. 9

விடுதலைப் புலிகளுடனான மோதல்கள் இடம்பெற்றவேளை காயமுற்ற படையினருக்காக சேகரிக்கப்பட்ட இரத்தம் இந்திய நிறுவனங்களுக்கு விற்கப்பட்டது என ஜே.வி.பியின் தொழிற்சங்கங்களை மேற்கோள் காட்டி 'த சண்டே ரைம்ஸின்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

படையினருக்காகத் திரட்டப்பட்ட 750 லீற்றர் இரத்தத்தை (பிளாஸ்மா) தேசிய குருதி மாற்று நிலையமும் சுகாதார அமைச்சும் இணைந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளன என ஜே.வி.பியின் தொழிற்சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

படையினருக்காகப் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஐயாயிரம் பைந்த் இரத்தத்தை ஏழு லட்சம் ரூபாவிற்கு மேல் விற்றுப் பணம் சம்பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 19 ★ 10 ★ 1935



இறப்பு 13 ★ 01 ★ 2007

திதி: அபரபக்க தசமி

### செல்லையா பத்மநாதன்

(முன்னாள் V.C.உறுப்பினர், கொக்குவில்)

இவ்வுலகை விட்டு மூன்று ஆண்டுகள் ஆனதோ அப்பா!
ஆறுதல் சொல்ல வார்த்தைக்குவழியில்லையே அப்பா!
எல்லோருக்கும் நல்லவரே
என்றென்றும் உங்கள் நினைவுகளேஅப்பா
உங்கள் முத்தான சிரிப்பையும்பேச்சையும் நினைத்தால்
நெஞ்சம் வலிக்கிறதே

என்றும் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வங்கியடி,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(93380)

## ஓராண்டு நினைவில்.....

தோற்றம் 17 ★ 06 ★ 1907



மறைவு 21 ★ 12 ★ 2009

### அமரர் சரவணை பூரணம்

திதி: தசமி (09.01.2010)

எமது குல விளக்கு
பாசத்தின் பிறப்பிடமாய்
அன்பின் திருவுருவமாய்
அறிவின் வடிவமாய்
என்றும் எம் கூடவே
இருக்கிறீர்கள் பாட்டி
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
நீங்கா நினைவில் நீங்கள்......

அல்லாரை தெற்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

(934879)


## விற்பனைக்கு

எமது சங்கத்தில் வெற்று உரப்பைகள் 12310 விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு 18.01.2010 ஆம் திகதிக்குப் பிந்தாது மூடிய கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும்.

கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வெற்று உரப் பைக்கான கூறுவிலை' எனக் குறிப்பிடவும்.

[illegible],
[illegible] (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி/563983)


## மரண அறிவித்தல்

### மரியஜெயசீலன் கிருபாநிதி (நித்தி)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட மரியஜெயசீலன் கிருபா நிதி (06.01.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூவிலிங்கம்- நாகம்மா (புஸ்பம்) தம்பதியரின் அன்பு மகளும் மரியஜெயசீலனின் அன்பு மனைவியும் சற்குணநாதனின் (சுதன்) அன்புத் தாயும் சங்கீதாவின் அன்பு மாமியும் சந்திரகுமார், விஜயகுமாரி, கிருபாகரன், கலாநிதி, விஜயகரன், தயாநிதி, சதீஸ்குமார் மற்றும் காலஞ்சென்ற சந்திரமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.01.2010) சனிக்கிழமை 81/12, புகையிரத வீதி, கச்சேரியடி என்னும் விலாசத்தில் அவரின் சகோதரியின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தில் பி.ப. 2.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்- சற்குணநாதன் (சுதன்),
சகோதரர்கள்.

81/12, புகையிரத வீதி,
கச்சேரியடி.

(93568)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் கூட்டமைப்பில் பிளவாம்;
# சம்பந்தன் அணி மஹிந்தவை பழிவாங்க முயல்கிறது; குற்றம் சுமத்துகிறார் ஊடகத்துறை அமைச்சர் யாப்பா



கொழும்பு, ஜன.9

பல பிரிவுகளா கச் சிதறுண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் உள்ள சம்பந்தன் அணியினர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பழி வாங்க முயல்கின்ற னர் என ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல பிரிவுகளாகச் சிதறுண்டுள்ளது.

இதில் சம்பந்தன் பிரிவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பழிவாங்க முயல்கின்றது.

வடக்கு - கிழக்கில் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டியவர் ஜனாதிபதியே. அவரே சமாதானம், ஸ்திரத்தன்மை, தமிழ் மக்களுக்கு வாழ்வதற்கு உள்ள உரிமை போன்றவற்றை மீட்டுக் கொடுத்தார்.

விடுதலைப் புலிகளிடம் சிக்கித் தமது உரிமைகளை இழந்த தமிழ் மக்களுக்கு அந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு சம்பந்தன் என்ன செய்தார்?

யுத்தம் முடிவடைந்ததும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது, முதலீடு, அபிவிருத்தி உட்பட தமிழ் மக்களின் அனைத்துத் தேவைகள் குறித்தும் கவனம் செலுத்தினார்.

காங்கேசன்துறைத் துறைமுகத்தை மீள அபிவிருத்தி செய்வதற்குப் பல பில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளோம்.

இது அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் முதலீடு செய்துள்ளதை விட அதிகமான தொகையாகும்.

-இப்படி அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

# எதிரணித் தரப்பு மீது தொடர்ந்து தாக்குதல்

கொழும்பு, ஜன.9

மினுவாங்கொட மற்றும் திவுலுப்பிட்டிய பகுதிகளில் எதிர்க்கட்சி ஆதரவாளர்களின் வீடுகள் மற்றும் அலுவலகங்கள் மீது கடந்த புதன்கிழமை இனந்தெரியாத நபர்கள் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இனந்தெரியாத ஆயுததாரிகள் குழு ஒன்று மினுவங்கொடவில் உள்ள ஜே.வி.பியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டின் மீது தாக்குதலை மேற்கொண் டதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இதேவேளை திவுலுப்பிட்டியவில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரின் பிரசார அலுவலகமொன்றும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. (சி)

# அமைச்சர் செல்லச்சாமியும் பொன்சேகா பக்கம் 'பல்டி'

கொழும்பு, ஜன.9

தபால், தொலைத்தொடர்புகள் பிரதி அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எம்.எஸ். செல்லச்சாமி அமைச்சுப் பதவியையும், கட்சியில் வகித்த பதவியையும் இராஜிநாமாச் செய்துவிட்டு எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் காலை கொழும்பு சிலோன் கொண்டினென்டல் ஹோட்டலில் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென அங்கு வந்து பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குவதை அவர் உறுதிப்படுத்தினார்.

நிகழ்வின் அதிதிகளாக அங்கு அமர்ந்திருந்த சரத் பொன்சேகா, ரணில் விக்கிரமசிங்க, சோமவன்ஸ அமரசிங்க, கருஜயசூரிய ஆகியோரும், ஷம்.பிக்களும் கைதட்டி செல்லச்சாமியை வரவேற்றனர்.

செல்லச்சாமி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து செயற்படுவார் என்று ஏற்கனவே இ.தொ.காவில் இருந்து பிரிந்துவந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டுள்ள முன்னாள் பிரதிக் கல்வி அமைச்சர் முருகன் சச்சிதானந்தன் கூறியிருந்தார் (சி)

# அம்பாறையில் தாம் படித்த பாடசாலைக்கு 50 வருடங்களின் பின் பொன்சேகா விஜயம்

அம்பாறை, ஜன. 9

அம்பாறைக்கு தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக விஜயம் செய்த எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளரான முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா அவருக்கு ஆரம்பக் கல்வியை வழங்கிய அம்பாறை மதவலலந்த மகாவித்தியாலயத்துக்கு சுமார் 50 வருடங்களின் பின் மறக்காமல் சென்றுள்ளார்.

பொன்சேகாவின் பெற்றோர் ஆசிரியர்கள் ஆவர். அவர்கள் இப்பாடசாலைக்கு 1955 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று வந்தனர். பொன்சேகா அந்த வருடமே அப்பாடசாலையில் மாணவனாகச் சேர்ந்து கொண்டார். அப்போது அவருக்கு மூன்று வயது. அவருடைய பதிவு இலக்கம் 115 ஆகும். கார்டி ஹேவ சரத் சந்திரலால் பொன்சேகா என்று அவரின் முழுப் பெயரில் பதிவு இடம்பெற்றுள்ளது.

இப்பாடசாலைக்கு கடந்த புதன்கிழமை திடீர் விஜயம் செய்த பொன்சேகா அங்கு அவருடைய பதிவு இலக்கம் அடங்கியுள்ள ஆவணக் கோவையையும் பார்வையிட்டார்.

அப்பாடசாலையில் பயின்ற காலத்தில் அவருடன் ஒரே வகுப்பில் கல்வி கற்ற சகபாடியான சுவண்டரலக சுது அப்பு என்பவர் இப்போது அப்பாடசாலையின் அதிபராக உள்ளார். ஜெனரல் பொன்சேகா அவரின் மகிழ்ச்சியைப் பால்ய நண்பருடன் பகிர்ந்து கொண்டார். பொன்சேகாவைக் காண்பதற்குச் சுது அப்புவின் சகோதரியும் அங்கு வந்திருந்தார். பொன்சேகா அவரின் ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் பொன்சேகாவின் திடீர் வரவினால் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனார்கள்.

இப்பாடசாலை கடந்த 60 வருடகால வரலாற்றில் உருவாக்கிய மிகப்பெரிய சாதனையாளரான மாணவன் சரத்பொன்சேகா தான் என்று தெரிவிக்கப் படுகிறது. (சி)






பிரதியமைச்சர் செல்லச்சாமி சரத்பொன்சேகாவுடன் இணைந்துகொண்டவேளை...

# முஸ்லிம்களின் நலனைப் பாதுகாப்பவருக்கு ஆதரவளிக்க மயோன் முஸ்தபா யோசனை
## முடிவை 15 ஆம் திகதி அறிவிப்பாராம்

கொழும்பு, ஜன.9

இலங்கை வாழ் முஸ்லிம்களின் குறிப் பாக கிழக்கு மாகாண முஸ்லிம்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய பிர தான வேட்பாளர் ஒருவருக்கு தார்மீக ஆத ரவு வழங்குகின்றமை தொடர்பில் பரிசீ லனை செய்து வருகின்றார் என எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை யாகப் போட்டியிடக் களம் இறங்கியிருக் கும் முன்னாள் உயர் கல்வித்துறைப் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா அறிவித்துள்ளார்.

இத் தேர்தல் தொடர்பான அவரின் அடுத்த கட்ட நகர்வுகள், பிரதான வேட்பாளர்களில் யாரையாவது ஆதரிப்பாரா? என்ற முடிவு ஆகியன குறித்து எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகி ரங்கமாக மக்களுக்கு அறிவிப்பார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் நலன்களைப் பேணக் கூடிய விடயங்களை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள பிரதான வேட்பாளர்களில் ஒருவராவது மனப் பூர்வமாக முன்வருவார் கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (சி)

# ஈழத்தைப் பெற்றுக் கொடுப்பாரென சரத் பொன்சேகா தமிழ்க் கூட்டமைப்புக்கு வாக்குறுதி வழங்கியுள்ளாராம்!
## அமைச்சர் அதாவுல்லா கண்டுபிடிப்பு



கொழும்பு, ஜன. 9

வடக்குக், கிழக்கு மாகாணங்களை இணைத்து எவ்வித நிபந்தனைகளும் இன்றி ஈழத்தைப் பெற்றுக் கொடுப்பார் என பொன்சேகா தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார். ஆகவேதான், புலிகளுக்கு வக்காலத்து வாங்கும் கூட்டமைப்பினர் சரத் பொன்சேகாவை ஆதரிக்க முன்வந்துள்ளனர்.

-இவ்வாறு தேசிய காங்கிரஸின் தலைவரும் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அடங்கிவிட்ட போதிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அடங்கவே இல்லை - புலிகளின் ஊது குழல்களான கூட்டமைப்பினர் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை எடுத்தமை ஆச்சரியத்தைத் தரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து கிழக்கு மாகாண சபையின் தேசிய காங்கிரஸ் [illegible] எல்.துல்சர் [illegible] தலைமையில் மருதமுனையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் அதாவுல்லா இவ்வாறெல்லாம் கூறினார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

விடுதலைப்புலிகளின் ஊது குழல்களாக இருந்தவர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர். விடுதலைப்புலிகள் பேசுகின்றதையே அவர்களும் பேசினர். ஆனால், புலிகள் அடங்கி விட்ட போதிலும் இந்தக் கூட்டமைப்பினர் அடங்கவே இல்லை.

வடக்கையும், கிழக்கையும் இணைக்க வேண்டும் படையினரை மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றமையில் இருந்து விலக்க வேண்டும், புலிகளை திரும்பக் கொண்டு வரவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்து இவ்வாறு எல்லாம் செய்தால் தான் எதிர்வரும் ஜனாதி பதித் தேர்தலில் அவரை ஆதரிப்பார்கள் என்று கூறிவிட்டனர். ஆனால், இத் தேர்தலில் தோற்றாலும் பரவாயில்லை. வடக்கையும், கிழக்கையும் இணைக்கவே மாட்டார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகக் கூட்டமைப்பினருக்குக் கூறி விட்டார். அதனாலேயே நோர்வேயின் தரகர்களான ரணில், ஹக்கீம் ஆகியோருடன் இப்புலித்தரப்பினரும் இணைந்துள்ளார்கள்.

இந்த நாட்டில் பள்ளிவாசல்களுக்கும், மக்கள் வாழும் இடங்களுக்கும் சென்று கொடூரமான முறையில் வெறியாட்டம் செய்த, இறந்த பெண்கள் மீது கூட துப்பாக்கிகளை நீட்டிய பயங்கர வாதத்தை இல்லாதொழித்தவர் மஹிந்த ராஜபக்ஷவே. அவருக்கு முன்னால் 40 நாளைய 'புரோயிலர்' கோழியான பொன்சேகா நின்று பிடிக்கவே மாட்டார்- என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தொழில்நுட்ப நிறுவனக் கற்கை நெறிகள் இம்மாத இறுதியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப வியல் நிறுவனத்தின் மாலை நேரக் கற்கைநெறிகள் யாவும் எதிர்வரும் 30ஆம் திகதியும் பகல்நேரக் கற்கை நெறிகள் யாவும் அடுத்த மாதம் 2 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளதாக உயர் தொழில் நுட்பவியல் நிறுவன இயக்குநர் எஸ். ஜெ.எம். சகாஜன் அறிவித்துள்ளார்.

அத்துடன் HND A 3ஆம்,4ஆம் வருடம், HNDM 3ஆம் வருடம், HNDBS 3ஆம் வரு டம், HNDIT3ஆம் வருடம் ஆகிய கற்கை நெறிகளுக்கான விளக்கப்பட்டறை எதிர்வரும் 20ஆம் திகதி காலை 8.30 மணிக்கு உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (50-16)

## புலமைப்பரிசிலில் சித்திபெற்ற மாணவர் கௌரவிப்பு

வடமராட்சி, ஜன.9

கடந்த வருடம் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வடமராட்சிப் பிரதேச மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் நடைபெற வுள்ளது.

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கிளை முகாமையாளர் எம்.பரமானந்தம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், இக் கிளையில் ஏதாவது கணக்கு ஒன்றை வைத்திருக்கும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வடமராட்சிப் பிரதேச மாணவர்களே கௌரவிக்கப்படவுள்ளனர். (50-236)

# டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த வணக்கஸ்தலங்களை உடன் துப்புரவு செய்யுங்கள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணத்தில் தற்போது பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த வணக்கஸ்தலங்களைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது. பொது மக்கள் செறிவாகக் கூடும் வணக்கஸ்தலங்களில் டெங்கு நோயைப்பரப்பும் நுளம்புகள் காணப்பட்டால் ஒரே நாளில் பலருக்கு இந்நோய் பரவலாம். எனவே சகல வணக்கஸ்தலங்களும் இவ்வாரத்திற்குள் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

இதற்காகப் பிரதேச மக்களின் உதவியுடன் சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் வணக்கஸ்தலத்தின் வளாகத்திலும், சுற்றாடலிலும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்பட்டு பூரணமாகமத் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

ஆலயங்களில் வெற்று இளநீர் கோம்பைகளில் தண்ணீர் தேங்காதவாறு நான்கு துண்டுகளாக வெட்டப்படவேண்டும்.

கழிவுநீர் தேங்கி நிற்காதவாறு தினமும் துப்புரவு செய்யப்பட வேண்டும். திண்மக்கழிவுகள் கிரமமாக அகற்றப்பட வேண்டும்- என்றுள்ளது. (50-16)

## யாழ்.நகரின் பலபகுதிகளிலுள்ள கழிவு நீர் வாய்க்கால்களில் பொலித்தீன் பைகள் தேக்கம்

### உடன் அகற்றுமாறு டாக்டர் யமுனானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ். நகரின் பலபகுதிகளில் உள்ள வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாமலும், புல் பூண்டுகளுக்கு மருந்துகள் விசிறப்படாமலும் உள்ளமையால் டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளதாக வைத்திய கலாநிதி எஸ்.யமுனானந்தா தெரிவித்தார்.

தற்போது யாழ்.குடாநாட்டில் டெங்கு நோய் விரைவாகப் பரவுவதால் உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றன. இதனால் மேற்படி விடயம் தொடர்பாக மாநகரசபை அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வைத்திய கலாநிதி கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையாக உள்ள இருவாய்க்கால்களிலும் பொலித்தீன்கள் தேங்கியுள்ளன. மடம் வீதிக்கு அண்மையிலுள்ள வாய்க்கால்களிலும் கழிவுகள் தேங்கியுள்ளன. அத்தோடு வீடுகளிலுள்ள கழிவுகள் உடன் அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

திருநெல்வேலி சிவகாமி அம்மன் கோவிலுக்கு முன்னுள்ள வளவில் புல்லுகள் முளைத்து மருந்துகள் விசிறப்படாமல் மூன்று கிழமைக்கு மேலாக எவ்வித கவனிப்பும் இல்லாமல் உள்ளன. அத்துடன் ஆரிய குளத்துக்கு முன் உள்ள வாய்க்கால்களில் புல் பூண்டுகள் வளர்ந்து காணப்படுகின்றன. இவற்றையும் உரிய முறையில் துப்புரவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயைக்கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (50-16)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான 44பேர் கடந்த மாதத்தில் விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு, ஜன.9

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும் அவசரகாலச் சட்டத்தின் கீழும் காவலில் வைக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பகுதிகளைச் சேர்ந்த 44பேர் கடந்த மாதம் விடுவிக்கப்பட்டனர்.

நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, மாளிகாவத்தை, மாத்தளை, ஹற்றன் ஆகிய நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்ட இவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் அறிவித்ததைத் தொடர்ந்து இவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக ஆராய்வதற்கென சட்டமா அதிபர் திணைக்களத்தில் இதற்கென விசேட பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவு மேற்கொண்ட நடவடிக்கைக்காக கடந்த மூன்று மாதங்களில் கணிசமான எண்ணிக்கையினர் நீதிமன்றுகளின் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர். மற்றும் பலர் குறித்த விசாரணைகளையும் விசேட பிரிவு துரிதகதியில் பரிசீலனை செய்து வருவதாகவும் நீதிஅமைச்சின் பத்திரிகை அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. (அ)

### மல்லாகம் நீதிமன்றப் பரிபாலன எல்லைக்குள்

# போக்குவரத்து ஒழுங்குகளை மீறுவோருக்கு எதிராக உடன் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

### பொலிஸாருக்கு நீதிபதி க.அரியநாயகம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.9

மல்லாகம் நீதிமன்ற நீதி பரிபாலன எல்லைக்குள் சேவையில் ஈடுபடும் மினிபஸ்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் பயன்பாடுகள் சட்டத்திற்கு அமைவாக இல்லாத சந்தர்ப்பத்தில் உரிய வாகனங்களின் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொலிஸாருக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற கூட்டத்தில் வைத்துப் பொலிஸாருக்கு இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நீதிபதி க.அரியநாயகம் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:

வீதிகளில் சேவையில் ஈடுபடும் மினிபஸ்கள் உரிய தரிப்பிடங்களில் மட்டுமே நிறுத்தப்பட்டு பயணிகளை இறக்கவும் ஏற்றவும் வேண்டும். அதனை மீறும் மினிபஸ்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மினிபஸ்கள் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றி மக்களுக்குச் சிரமம் கொடுப்பதைத் தவிர்க்கும் வகையில் அவ்வாறு பயணிகளை ஏற்றும் மினிபஸ்கள் மீது சட்ட நடவடிக்கையெடுக்க வேண்டும்.

வழி அனுமதிப்பத்திரம் இன்றிச் சேவையில் ஈடுபடும் மினிபஸ்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மினிபஸ்கள் உரிய சைகைகள், ஒலி, தரம்மிக்க ரயர்கள் இன்றிச் சேவையில் ஈடுபட்டால் அவற்றின் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேபோன்று மோட்டார் சைக்கிளில் இரண்டுக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்தல், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துதல் வயதில் குறைந்தவர்கள் மோட்டார் சைக்கிள் செலுத்துதல், அதிகவேகமாகவும், பிரதான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளில் வீதி விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் வாகனங்களைச் செலுத்துதல் போன்றவற்றுக்கு எதிராகவும் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என நீதிபதி தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அச்சுவேலி, மானிப்பாய், வட்டுக்கோட்டை, உடுவில், தெல்லிப்பழை, காங்கேசன்துறை, இளவாலை, பலாலி பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டனர். (50-86)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 17 . 01 . 1952



மறைவு 26 . 11 . 2009

26.11.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் இராசையா மகேஸ்வரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (09.01.2010) சனிக்கிழமை நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் மண்டபத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.*

கலைமணி வீதி, கட்டப்பிராய். (93582) குடும்பத்தினர்.

## STEEL FURNIMART



தரமும் உறுதியுமிக்க STEEL CUPBOARD முதலானவற்றை கொழும்பிலுள்ள "STEEL FURNIMART" யாழிலும் அறிமுகப்படுத்தவுள்ளது

தரம் நாடுவோர் 077 5817518ஐ தொடர்பு கொள்ளவும்.

STEEL FURNIMART பம்பலப்பிட்டி

325, காலி வீதி, புதிய கதிரேசன் மண்டபமருகே, கொழும்பு 04

257, காலி வீதி, HFC முன்பாக கொழும்பு 04 Tel/Fax: 011-2555469, 0777673570

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக சந்திரபுரம் (J/315) பிரிவு கிராம அலுவலர் கு.பரமானந்தம் அவர்களின் பாசமிகு தந்தை

பொன்னையா குமாரசாமி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி. (சி/563990) நலன்புரிக்கழக உறுப்பினர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 07.01.2010 அன்று இராமாவில் C-Dபகுதி கிராமசேவையாளர் குமாரசாமி பத்மநாதன் அவர்களின் தந்தை அமரர் பொன்னையா குமாரசாமி அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இராமாவில் நலன்புரி நிலையம், இராமாவில். (சி/563988) C-Dபகுதி நிர்வாகத்தினரும் மக்களும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




01.02.1987

* மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இந்திய அரசத் தரப்பு மத்தியஸ்தர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தொடர்பு கொண்டுள்ளனர்.
* திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் குடும்பத் தலைவர்களும் குடும்ப உழைப்பாளிகளுமாக நாலாயிரம் பேர் வரை கொலையுண்டுள்ளதால்கிழக்கில் பட்டினிச் சாவுகள் ஏற்படக் கூடிய அபாயம் தோன்றியுள்ளதாக மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவிப்பு.

02.02.1987

* இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தருணத்தில் இலங்கை அரசு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பது ஏமாற்றம் அளிப்பதாக இந்திய இணை அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு.
* எனது பதவியில் இன்று வேறு எவராவது இருந்தால் நாட்டின் நிலைமை வேறாக இருந்திருக்கும் என ஜனாதிபதி ஜே.ஆர், இந்திய சஞ்சிகையொன்றுக்குப் பேட்டி.

03.02.1987

* இந்திய அரசு உத்தியோகபூர்வமாக அழைத்தால் மட்டுமே விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் இந்தியா திரும்புவார் என விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.
* வடக்கில் வாகனப் போக்குவரத்தைத் தடைசெய்யும் நோக்கில் வாகனங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள், கம்பி வகைகளை குடாநாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசு தடைவிதிப்பு.

04.02.1987

* ஸ்ரீலங்கா அரசின் சுதந்திரதினத்தை ஈழம் வாழ் தமிழ் மக்கள் துக்கதினமாக அனுஷ்டிக்க வேண்டுமென அன்னையர் முன்னணி உட்பட பல அமைப்புக்கள் வேண்டுகோள்.
* கொக்கட்டிச்சோலை படுகொலைகள் தொடர்பாக அப்பகுதியில் தொழில் புரிந்த அமெரிக்கப் பிரஜை ஒருவர் மீது வழக்குத் தொடரப் போவதாக விடுத்த பயமுறுத்தலிலிருந்து அரசு பின்வாங்கியது; அவரை நாடு கடத்த அரசு முடிவு.

05.02.1987

* தமிழீழ இராணுவம் அமைப்புக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தடை விதிப்பு.
* சுதந்திர தினத்தையொட்டி யாழ். குடாநாட்டில் உள்ள அரச அலுவலகங் களில் தேசியக் கொடி எதுவும் ஏற்றப்படவில்லை.
* யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட 'ஷெல்'லால் சேதமடைந்த யாழ். ஆஸ்பத்திரிக் கட்டடங்களை யாழ். அரச அதிபர் நேரில் சென்று அவதானிப்பு.

06.02.1987

* சுவிஸ் அதிகாரிகளினால் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் இளைஞர் கொழும்பில் கைது செய்யப்பட்டு நான்காம் மாடியில் வைத்து பொலிஸாரால் சித்திரவதை.
* ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்ட தமிழர்களின் நிலைகுறித்து எதுவித விளக்கமும் அளிக்கஇயலாத நிலையில் அரசு இருப்பதாக ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் விவரிப்பு.

07.02.1987

* பலாலி, வயாவிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளுடாக இருமுனைகளால் வெளியேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகள் போராளிகளுக்கும் இடையில் கடும் மோதல்.
* தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு இராணுவ, பொருளாதாரத் தாக்குதல்களை ஒருசேர மேற்கொண்டு வருவதாக இந்திய இணை அமைச்சர் சிதம்பரத்திடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் சுட்டிக்காட்டு.

08.02.1987

* பாரமில்லாத பெரிய விமானங்கள் இலங்கை வான் பிராந்தியத்தில் பறப்பதற்கு இலங்கை அரசு தடை. அப்படிப் பறக்கும் விமானங்கள் சுட்டுத்தள்ளப்படும் எனவும் எச்சரிக்கை.
* இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தமது மத்தியஸ்த முயற்சி களைத் தொடரவேண்டுமானால் தாம் விதிக்கும் மூன்று முக்கிய நிபந்தனைகளை ஏற்று இலங்கை அரசு செயற்படவேண்டுமென இந்தியஅரசு நிபந்தனை விதிப்பு.
* அரச படைகளால் கைதாவோர் அதிகமாக சித்திரவதை செய்யப்படும் 39 நாடுகளில் இலங்கையும் ஒன்று என அரசியல் கடத்தல்கள், காணாமல் போவோர் குறித்து விசாரணை மேற்கொண்ட ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்த விசேட குழவின் அறிக்கையில் விவரிப்பு.

09.02.1987

* அம்பாறை மாவட்டத்தின் 'அரம்பாவல' சிங்களக் கிராமத்தில் 27 சிங்களப் பொதுமக்கள் இனந்தெரியாதோரால் வெட்டிக்கொலை.
* இராணுவம் நினைத்தால் யாழ். கோட்டையில் இருந்தபடியே அரை மணித்தியாலத்தில் யாழ். நகரைச் சுடுகாடு ஆக்கிவிட இயலும் என பலாலி முகாம் பிரிகேடியர் தம்மிடம் தெரிவித்ததாக சுவிஸ் பத்திரிகையாளரொருவர் தகவல்.
* நாம்நினைத்தால் ஒரு நிமிடத்தில் கொழும்பில் ஆயிரக் கணக்கான சிங்களவர்களைக் கொல்ல முடியும். ஆனால் அப்படிச்செய்ய மாட்டோம் என ஈரோஸ் இயக்கப் பிரமுகர் பாலகுமார் தெரிவிப்பு.

10.02.1987

* மடு தேவாலயத்தினுள் நேற்று ஆயுதப் படையினர் உட்புகுந்து தேடுதல் நடத்தி 22 தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.
* கொக்கட்டிச்சோலைப் பகுதியில் அப்பாவித் தமிழரை ஆயுதப்படையினர் சுட்டுக் கொன்றது உண்மையே என 'அத்த' சிங்கள நாளிதழின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிப்பு.
* கிழக்கு மாகாண சிங்களக் கிராமங்களின் பாதுகாப்புக்கு ஆயுதக் காவலர்களை அனுப்பி வைக்க அரசு முடிவு.

11.02.1987

* இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, இந்தியத் தூதுவர் டிக்ஸிற் ஊடாக ஜனாதிபதி ஜே.ஆருக்கு அவசரச் செய்தி அனுப்பி வைப்பு.
* மன்னார் மாவட்டத்தில் ஐந்து தினங்களாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக ஐயாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் காடுகளில் தஞ்சம்.

12.02.1987

* கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரில் 36 மணிநேர ஊரடங்கு.பரந்தன் பகுதியில் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையில் கடும் மோதல். பயணிகள் பஸ்மீது இராணுவம் சுட்டதில் நால்வர் உயிரிழப்பு, பலர் படுகாயம்.
* கேரதீவு-சங்குப்பிட்டி ஊடான வாகனப் போக்குவரத்துக்களுக்கு இராணுவத்தினர் தடைவிதிப்பு. மீறுவோர் கண்ட இடத்தில் சுடப்படுவர் என இராணுவத்தினர் அறிவிப்பு.
* ஒரு பிரஜையைக் குறிப்பிட்ட இடமொன்றில் வசிக்குமாறு நிர்ப்பந்திப்பது அரசமைப்புச் சட்டத்தின் கீழான அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என வழக்கொன்றில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு.

13.02.1987

* தமிழர் பகுதிகள் மீதான சகலஇராணுவ நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்தாவிட்டால் இனப் பிரச்சினை தொடர்பான மத்தியஸ்தப் பணியிலிருந்து இந்தியா விலகிக் கொள்ளுமென இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஜனாதிபதி ஜே.ஆருக்கு கடித மூலம் தெரிவிப்பு.
* இந்தியப் பிரதமரின் அறிவிப்பு இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாகக் கொள்ளத்தக்கது என இலங்கை அமைச்சரவையில் சிரேஷ்ட அமைச்சரொருவர் சீற்றம்.
* கிளிநொச்சி, பரந்தன், மன்னார் பகுதிகளில் நடைபெற்று வரும் இராணுவத்தாக்குதல்களில் 150 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிப்பு.

14.02.1987

* மலையகத் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டால் 'மலையகம்' மற்றொரு 'யாழ்ப்பாணம்' ஆக மாறிவிடும் என அமைச்சர் தொண்டமான் அரசுக்கு எச்சரிக்கை.
* பிரதமர் ராஜீவ் காந்தியிடம் மத்தியஸ்த முயற்சியைத் தொடருமாறு ஜனாதிபதி ஜே.ஆர்.கோரிக்கை. இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கான காரணம் குறித்தும் தமது கடிதத்தில் விளக்கம்.

15.02.1987

* வானொலியிலும் ரூபவாஹினியிலும் வெளியான செய்தி யொன்றுக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில், யாழ்.குடாநாட்டில் உள்ள சகல இராணுவ முகாம்களும் தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவிப்பு.
* வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்று வரும் சிவில் யுத்தத்துக்கு நாட்டின் வருமானத்தில் 25 சதவீதம் செலவாகும் நிலையிலும் நாட்டில் ஒருவராவது பட்டினியால் உயிரிழக்கவில்லை என நிதி அமைச்சர் றொனி டி.மெல் தெரிவிப்பு.
* யாழ்ப்பாணம், மன்னார் பட்டினங்களை ஆயுதப்படையினர் சுற்றிவளைத்து விட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி தெரிவிப்பு.

# மக்கள் முகம்



கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற திருமதி அகிலன் காயத்திரி கடந்த மாதம் 17ஆம் திகதி மூன்று நீதிபதிகள் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

மல்லாகத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம் மகாவித்தியாலயம் மற்றும் வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியாவார். (9)

★ ★ ★



வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோ கத்தராகக் கடமையாற்றிய எஸ்.கே.சிவலிங்கம் அண்மையில் ஓய்வுபெற்றுள்ளார்.

இவருக்கான சேவை நலன் பாராட்டுவிழா அண்மையில் வலி.மேற்குப் பிரதேச செயலகத்தின் ஊழியர் நலன்புரிச்சங்கத் தலைவர் ந.ஸ்ரீறஞ்சன் தலைமையில் நடைபெற்றது. (9-28)

# புத்தகசாலை




## மக்கள் மருத்துவன்

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் மாணவர் மன்றத்தின் ''மக்கள் மருத்துவன்'' நூல் வெளிவந்துள்ளது.

யாழ். லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் வரலாறு முதற்பக்கத்தை அலங்கரிக்க தொடர்ந்து சித்த ஆயுள்வேத வைத்தியத்தின் சிறப்புகள் என்பன ''மக்கள் மருத்துவன்'' நூலில் இடம் பிடித்துள்ளன.

''மக்கள் மருத்துவன்'' மக்களின் மருத்துவக்கையேடு என்று குறிப்பிடக்கூடியவகையில் மருத்துவத் தகவல்கள் நிறையவே பொதிந்துள்ளது.

# நீத்தார் நயப்புரை

## வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார்



தெல்லிப்பழையில் காசிப்பிள்ளை யார் கோயிலடியில் வாழ்ந்த பெரியார் ஆறுமுகம் திருச்சிற்றம்பலம் ஆவார். அவரது மூன்றாம் மகனாகப் பிறந்தவர் சுந்தரமூர்த்தி வாத்தியார். பெற்றோரினால் நல்ல பழக்க வழக்கங்களில் பயின்றும் நீதி நூல்க ளைக் கற்றதல்லாமல் அதன்படி நின்றும் வாழ்ந்த வர் ஆவர்.

தனது வாழ்விலே ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டு தனது கடமையே கண்ணாக, மாணவர்களைக் கற்பித்து அக்கல்லூரி அதிபராலும் ஆசிரியர்களாலும் பாராட்டப்பட்டவர். ஆசிரியத் தொழிலிருந்து ஓய்வு பெற்றபின் வீணே சும்மா காலங்கழிக்காமல் அண்மையிலுள்ள துர்க்காதேவஸ்தானத்தில் அவ்வாலய அறங்காவல் தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியால் அழைக்கப்பட்டு பாரிய தொண்டுகளைத் தோள் கொடுத்துச் செய்தார். சுமார் பன்னிரெண்டு வருடங்களுக்கு மேலாக பன்னிரு திருமுறை ஓதுவித்தலுக்குத் தலைமை தாங்கினார். புராண படனம் ஒவ்வொன்றையும் தலைமை தாங்கி நடத்தினார்.

வருடந்தோறும் சைவ விரதங்களையும் தளராது பிடித்து வந்தார். ஆசிரியரது குணத்துக்கேற்றபடி நல்ல வாழ்க்கைத் துணையும் வாய்த்ததனால் சிறந்த பல பிள்ளைகளையும் பெற்றெடுத்தார். தம்மைப் போலவே பிள்ளைகளையும் வளர்த்து உயர் கல்வியாளராக்கியதன்றி ஏற்ற மருமக்களையும் தமது நிலைக்கொப்ப சேர்த்துக் கொண்டார். ஒழுக்கசீலராகிய உபாத்தியார் கோயில் வழிபாடுபோக, வீட்டிலும் சும்மா இருக்கவில்லை. பல சித்தாந்த நூல்களிலும் கவனஞ் செலுத்தினார். தமது வாழ் நாளில் நல்ல மனமுடையவராகவும் எல்லோர்க்கும் நல்லுரை வழங்குபவராகவும் காலை தோறும் பூ எடுத்து கோயிலுக்குக் கொடுப்பவராகவும் வாழ்ந்த உபாத்தியார் முப்பேறும் இறை பக்தியை விட்டாரல்லர். இவ்வாறு நூறு வயதுடைய உபாத்தியார் தாமிருக் கும்போதே,

'மண்ணிற் பிறந்தார் பெரும்பயன் மதிசூடும்
அண்ணலார் யடியார்க் கமுது செய்வித்தல்'

என்ற ஒரே நோக்கோடு தமது பிள்ளைகளை நோக்க பிள்ளைகளும் அவர் மனம் மகிழுமாறு அடியார் கூட்டத்தை அழைத்து அமுது செய்வித்தனர். இவ்வாறு மன மகிழ்ச்சி கொண்ட உபாத்தியார் மேலும் மூன்று மாதங்களே சீவித்து இறைவன டியுற்றுச் சாந்தி பெற்றார்.

புலவர்மணி: வை.க.சி.

# வாசகர் திருமுகம்

## யாழ்.நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க இப்படி ஒரு யோசனை

தற்போது யாழ்ப்பாண நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகக் காணப்படுகிறது. பல கனரக வாகனங்கள் யாழ் நகரில் பொருள்களை ஏற்றுவதும் இறக்குவதுமாக உள்ளன. கழிவுப்பொருள்களும் தினமும் அதிக அளவில் அகற்றப்படுகின்ன. இந் நிலையில் நாம் சில மாற்றங்களைச் செய்தால் அடுத்த 100 ஆண்டுகளுக்கு போக்குவரத்துத் தொடர்பாக யாழ். நகரில் இடநெரி சல் ஏற்பட வாய்ப்புக் குறைவாகும். இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டின் மக்களில் பெரும் பாலானோர் யாழ். மாநகர சபை, கோப்பாய், நல்லூர், கொக்குவில் பிரதேசங்களில் வசிக்கின்றனர்.

திருநெல்வேலிப்பகுதி பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி எனக்கல்விக்குரிய பிரதேசமாக உள்ளன. யாழ்ப்பாணத்தில் போதனா வைத்தியசாலை பிரதான இடத்தினை வகிக்கின்றது. பிரதானமான பாடசாலைகளும் யாழ். நகரிலேயே உள்ளன. இந்நிலையில் யாழ்ப்பாண நகரில் உள்ளே உள்ள பலசரக்கு மொத்த விற்பனை நிலையங்கள் அனைத்தையும் நாவற்குழிப்பகுதிக்கு மாற்றினால் கனரக வாகனங்களால் நகரின் உள்ளே ஏற்படும் இடநெருக்கடி குறைக்கப்படும்.

அடுத்து வாகனவிற்பனை நிலையங்கள், வாகன உதிரிப்பாகங்களின் விற்பனை நிலையங்கள் என்பவற்றினை கொடிகாமப் பகுதிக்கு மாற்றலாம்.

விவசாய உள்ளீட்டு விற்பனை நிலையங்கள், இரசாயனப் பதார்த்தங்கள், உபகரணங்கள் என்பவற்றினை கோப்பாய் பகுதிக்கு மாற்றலாம்.

மீன்பிடி உபகரண விற்பனை நிலையங்கள், கடற்றொழில் சார்ந்த பொருள்களின் விற்பனை நிலையங்கள், கடல் உணவுகளின் மொத்த விற்பனை நிலையங்கள் என்பவற்றினை அல்லைப்பிட்டிப் பகுதிக்கு மாற்றலாம்.

யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தினை முற்றவெளிப்பகுதிக்கு மாற்றலாம். அதற்கு அருகில் ஒரு நவீன சந்தைக் கட்டத்தொகுதியினையும் அமைக்கலாம். தற்போதைய பேருந்து நிலையத்தினையும் அதனோடு அண்டிய கட்டங்களையும் யாழ்.போதனா வைத்தியாலையின் விஸ்தரிப்புக்கு உபயோகிக்கலாம்.

காரைநகரில் இருந்து கல்லுண்டாய் வெளி வரை நெடுஞ்சாலையினை பண்ணை யின் தற்போதையை கடற்கரை வீதியுடன் இணைத்து போக்குவரத்தினை விரைவுபடுத்தலாம்.

சனத்தொகை அதிகரிக்கும்போது, சன நெரிசலைக் கட்டுப்படுத்தச் சிறந்த திட்டமிடல்கள் தேவை.இவற்றை நாம் இப்போதே சிந்தித்துச் செயற்பட்டால் நகரங்களில் இட நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்ப்பதுடன் நகரில் சேரி வாழ் தன்மையையும் இல்லாது செய்யலாம். இதனால் பல நோய் கள் பரவுவதையும் உருவாகுவதனையும் கட்டுப்படுத்தலாம். விபத்துக்கள் பலவற்றைத் தவிர்க்கலாம.

டாக்டர் .சி. யமுனாநந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெ. பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு தெற்காசிய அமைப்புகள் கண்டனம்

வாஷிங்ரன், ஜன. 09

அமெரிக்கா, 'போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு நிர்வாகம்' (டி.எஸ்.ஏ.) காட்டும் பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு தெற்காசிய நாடுகளில் உள்ள பல்வேறு அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

கடந்த டிசெம்பர் 25 ஆம் திகதி, அமெரிக்க விமானத்தை வெடிகுண்டு மூலம் தகர்க்க முயன்ற நைஜீரிய பயங்கரவாதியின் கைதுக்குப் பின்னர் அமெரிக்காவின், 'போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு நிர்வாகம்' (டி.எஸ்.ஏ) தனது பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் அனைத்து விமான நிலையங்களிலும் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சமீபத்தில், ஒருவரின் உடல் , அவரது பொருள்கள் ஆகிய அனைத்தையும் ஊடுருவி ஸ்கேன் செய்யும் புதிய கருவிகளையும் விமான நிலையங்களில் அமெரிக்கா பொருத்தியுள்ளது.

இந்த விடயத்தில் இஸ்ரேல் பின்பற்றும் நடைமுறையை அமெரிக்காவும் பின்பற்ற முன்வந்துள்ளது. இதுதொடர்பாக உரிய விதிமுறைகள் வகுக்கப்படுகின்றன. அதேவேளை, தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திட்டத்தின் மூலம் ஆப்கான், அல்ஜீரியா, கியுபா, ஈராக், ஈரான், லெபனான், லிபியா, நைஜீரியா, பாகிஸ்தான், சவூதி அரேபியா, சோமாலியா, சூடான், சிரியா, ஏமன் ஆகிய 14 நாடுகளிலிருந்து வரும் பயணிகள் மட்டும் பலத்த பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதற்குக் கண்டனம் தெரிவித்து இந் நாடுகளிலுள்ள சாயா சி.டி.சி., மைத்திரி, சக்தி பியர் குழுமம், சீக்கியக் கூட்டமைப்பு, தெற்காசிய் அமெரிக்கர்களின் முன்னணி, தெற்காசியர்களின் கூட்டமைப்பு, ஐக்கிய சீக்கியர்கள் உள்ளிட்ட அமைப்புகள் ஆகியவை கூட்டறிக்கை விடுத்துள்ளன.

இந்த அறிக்கையில், ''அமெரிக்காவின் இந்தப் பாதுகாப்புக் கெடுபிடிகள் குறிப்பிட்ட மத நம்பிக்கை உள்ள நாடுகளிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் வரும் விமானப் பயணிகளிடையே இன, மத வேறுபாடுகளைப் புகுத்துவதாக உள்ளன'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நேபாளத்தில் முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வளிக்கும் பணிகள் ஆரம்பம்

நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் அமைப்பின் சார்பில் போராடிய ஆயிரக்கணக்கான முன்னாள் சிறார் போராளிகளை படையணிகளிலிருந்து விடுவிக்கும் நடவடிக்கையை நேபாள அரசு ஆரம்பித்துள்ளது.

நேபாளத்தின் மத்திய பகுதியில் வியாழக்கிழமை நடந்த ஒரு வைபத்தில் இருநூறு இளம் போராளிகள் படையணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படும் அல்லது பள்ளிகளில் படிப்பதற்கான வாய்ப்புகள் அளிக்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட சமாதான ஒப்பந்தப்படி பத்தொன்பதாயிரம் முன்னாள் மாவோயிஸ்ட் போராளிகளில் ஒரு தொகுதியினர் நேபாள இராணுவத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

ஆனால், இது எப்படி நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பது தொடர்பாக உருவான கருத்து மோதல் காரணமாக நேபாள அரசியலில் மோதல்களும் தேக்க நிலையும் உருவாகியுள்ளன.

# தென் சூடானில் இனமோதல் 140 பேர் பலி; பலர் காயம்

கார்ட்டூம், ஜன. 9

தென் சூடானில் இடம்பெற்ற இன மோதல்களில் சுமார் 140 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சூடானில் மீண்டும் யுத்த சூழ்நிலை உருவாகியுள்ளது என தொண்டு நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

நியூர் கோத்திர மக்களுக்கும் தின்டாகோத்திர மக்களுக்கும் இடையில் இந்த மோதல்கள் ஏற்பட்டுள்ளன என சூடானின் சபினோ மாநில பிரதி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

நியூர் கோத்திர மக்கள் தின்டா கோத்திர மக்களை தாக்கி அவர்களுடைய கால்நடைகளைக் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கால்நடை வளர்ப்புத் தொடர்பாக சூடானில் கோத்திரங்களுக்கு இடையில் நீண்டகாலமாக கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மிகவும் பின்தங்கிய கிராமங்களில் இவ்வாறான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டில் மட்டும் தென் சூடானில் கோத்திரங்களுக்கு இடையிலான மோதல்களில் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

உலக அரங்கில்

# வளைகுடா நாடுகளில் அல்-குவைதா தாக்குதல் நடத்துவதற்குத் திட்டம்

## வெளிநாட்டுப் புலனாய்வுத்துறை எச்சரிக்கை

வாஷிங்ரன், ஜன.9

எரிசக்தி வளம் நிறைந்த வளைகுடா நாடுகளில் அல்-குவைதா பயங்கரவாத இயக்கத்தினர், தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்புள்ளது என வெளிநாட்டுப் புலனாய்வுத்துறை எச்சரித்துள்ளது என வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து குவைத் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் குறிப்பிடுகையில், ''வளைகுடாப் பகுதியிலும் அரபிக் கடல் பகுதியிலும் செல்லும், போர்க் கப்பல், வர்த்தகக் கப்பல், பயணிகள் கப்பல் ஆகியவற்றை தாக்க அல்-குவைதா பயங்கரவாதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது'' எனத் தெரிவித்துள்ளன.

கப்பல்களுக்கு குறிப்பாக, எண்ணெய், எரிவாயு ஆகியவற்றைக் கொண்டுசெல்லும் தாங்கிகளைக் கொண்ட கப்பல்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்குமாறு, வெளிநாட்டுபுலனாய்வுத்துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

''ஏமன் பகுதியிலும், சோமாலியா பகுதியிலும் நிலவும் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, கடந்த சில மாதங்களாக அல்-குவைதா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், ஒன்றிணைய ஆரம்பித்துள்ளனர். சோமாலியா பகுதியிலுள்ள அல்-குவைதா இயக்கத்தினர், சமீபத்தில், அரசுப் படைகளிடமிருந்து நவீன ஆயுதங்களைக் கைப்பற்றி, ஏமனில் உள்ள தங்கள் ஆள்களுக்கு கொடுத்துள்ளனர்'' என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

சோமாலியா பகுதியில் அல்- குவைதாவினர் உள்ள இடங்கள், அவர்களின் பெயர்கள் ஆகிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் வெளிநாட்டுப் புலனாய்வு துறையினர் தெரிவித்துள்ளனர்.

# சிக்காகோவில் பனிப்புயல்: 500 விமான சேவைகள் ரத்து

சிக்காகோ, ஜன. 9

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் கடும் பனிப்புயல் வீசி வருகிறது. இதையடுத்து, அங்கு 500 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அங்கு தற்போது 8 முதல் 12 அங்குல அளவுக்கு பனி கொட்டி வருகிறது. இதனால் நகரமே கிட்டத்தட்ட உறைந்து போய்க் கிடக்கிறது.

வடக்கு இல்லினாய்ஸ், வட கிழக்கு இன்டியானா மாநிலங்களுக்குத் தேசிய வானிலை சேவை மையம் பனிப்புயல் எச்சரிக்கையை விடுத்துள்ளது. இன்று சனிக்கிழமை பிற்பகல் வரை இது அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடர் பனி காரணமாக சிக்காகோ நகரம் மற்றும் வடக்கு புறநகர்ப் பகுதிகளில் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் பனி மற்றும் பனிப்புயல் காரணமாக ஓஹாரே சர்வதேச விமான நிலையம், மிட்வே விமான நிலையம் ஆகியவற்றில் 500 விமானச் சேவைகள். இரத்துச் செய்யப்பட்டுள்ளன. 150 இற்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டுள்ளன.



மட்டுநகர் மேயர் சிவகீதா, ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோது.....

# மட்டு மேயர் சிவகீதா பொன்சேகா பக்கம்!

## நேற்று ரணில் முன்னிலையில் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 9

மட்டக்களப்பு மேயர் சிவகீதா பிரபாகரன் தாம் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சோகாவுக்கு ஆதரவு வழங்கப் போகிறார் என்று அறிவித்துள்ளார்.

இதன் காரணமாக அவரது மேயர் பதவியைப் பறிக்க அரசு நடவடிக்கை ஏதும்எடுத்தால் அதற்கு எதிராகத் தாம் சட்ட நடவடிக்கை எடுப்பார் என்றும் அவர் சொன்னார்.

அவர் நேற்று ஐக்கிய தேசிய முன்னணிப் பிரமுகர் மனோ கணேசனுடன் சேர்ந்து ஊடக வியலாளர் சந்திப்பொன்றை நடத்தித் தமது இந்தப் புதிய நிலைப்பாட்டை அறிவித்தார்.

அங்குஅவர்மேலும்கூறியவை வருமாறு:-

எனது மறைந்த தந்தை இராஜன் சத்யமூர்த்தியின் ஆதரவாளர்களினதும் ஆலோசனைபடியே நான் அரசியலுக்குள் நுழைந்தேன். 2004 ஆம் ஆண்டு எனது தந்தை பயங்கரவாதிகளால் சுட்டுக்கொல்லப் பட்டதன் பின்னர் நாங்கள் குடும்பத்தாருடன் நாட்டைவிட்டு வெளியேற முற்பட்டோம்.

எனது பிரதேச மக்கள் அதற்கு இடம் தரவில்லை. அந்த மக்களின் ஆலோசனைப் படியே நான் அரசியலுக்குள் நுழைந்தேன்.

அதே மக்களின் ஆலோசனையின்படி தான் நான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளேன்.

பொருளாதாரத்தை உயர்த்துவதன் மூலம்தான் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். சரத் பொன்சேகா அதைச் செய்வார் என்று நான் நம்புகிறேன்.

பாலங்களையும், பாதைகளையும் அமைப்பதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்துவிடமுடியாது. பொருளாதாரத் தைக் கட்டியெழுப்புவதே முக்கியம்.

நான் தொடர்ந்தும் மட்டக்களப்பு மாவட்ட மாநகர சபை மேயராக இருந்து கொண்டு பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குவேன். எனது பதவியைப் பறிக்க அரசு நடவடிக்கை எடுத்தால் நான் சட்ட நட வடிக்கை எடுப்பேன்.

எனது பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த 15 இராணுவத்தினரும் அரசால் மீள அழைக்கப்பட்டுள்ளனர். நான் இப்போது பாதுகாப்பு குறைக்கப்பட்ட நிலையில் உள்ளேன். - என்றார்.

# லஸந்த கொலையுண்டு 1 வருடமானாலும் அதனால் எழுந்த சீற்றம் தணியவில்லை

## எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 9

'த சண்டே லீடர்' பிரதம ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலை குறித்த விசாரணைகளை அரசு தடுத்து வருவதால் அப்படுகொலையால் உண்டான சீற்றம் இன்னமும் தணியாமலுள்ளது என எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் முடிவடைந்துள்ளதைக் குறிக்குமுகமாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

'த சண்டே லீடர்' பிரதம ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு ஒரு வருடம் நிறைவடைந்துள்ள போதிலும் அவரின் கொலை காரணமாக உண்டான சீற்றம் இன்னமும் தணிந்து விடவில்லை.

அரசு வேண்டுமென்றே விசாரணைகளைத் தடுத்து வருவதால், இது குறித்த சீற்றம் தொடர்கின்றது.

லஸந்த விக்கிரமதுங்கவின் பெயரும் நினைவும் எப்போதும் மறையப்போவதில்லை. இதனடிப்படையில் நோக்கினால் அவரது கொலைக்குக் காரணமானவர்கள் பாரிய தவறிழைத்துள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவர்கள் இந்தக் கொலை குறித்த மர்மங்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும், கடந்த வருடங்களில் ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஏனைய தாக்குதல்களின் பின்னால் உள்ளவர்களை அம்பலப்படுத்துவோம் என அவர்கள் உறுதியளிக்கவேண்டும் என்றும் கோரியுள்ளோம்.

சில வேட்பாளர்கள் உண்மை வெளிவரும் என உறுதியளித்துள்ளனர். எனினும், இது வெற்று வாக்குறுதியாக அமையக் கூடாது - என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

படுகொலை குறித்து பத்து மாதங்களாகப் பொலிஸார் விசாரணை செய்த பின்னர் தற்போது அதனை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர் என லஸந்தவின் சகோதரர் லால் விக்கிரமதுங்க தெரிவித்தார்.

என்னை ஒருமுறை விசாரணைக்கு அழைத்தனர். பின்னர் அழைக்கவில்லை. நீதிமன்ற விசாரணைகள் 24 தடவைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. படுகொலையைக் கண்ணால் கண்டவரும் பல மாதங்களாகக் காணாமற் போயுள்ளார் - என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களுக்கு இலவசக்கல்வி சென்னையில் ஆலோசனைக் கூட்டம்

## 18ஆம் திகதி பல்கலையில் நடத்த ஏற்பாடு

சென்னை, ஜன. 09

இலங்கைத் தமிழர்களுக்கு இலவச கல்வி அளிப்பது தொடர்பாக, இம்மாதம் 18ஆம் திகதி சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கனிமொழி எம்.பி., இந்தியாவுக்கான இலங்கைத் தூதர், தமிழக அரசின் மறுவாழ்வுத் துறை இயக்குநர், பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு வாசகம் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையில் வாழும் தமிழர்களின் குழந்தைகளுக்கும், தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களில் வசிக்கும் அகதிகளின் குழந்தைகளுக்கும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் இலவசக் கல்வி அளிக்கப்படும் என்று துணை வேந்தர் கடந்த மாதம் அறிவித்திருந்தார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் துணைவேந்தர் திருவாசகம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கூறியவை வருமாறு-

இலங்கைத் தமிழர்களுக்கு இலவச கல்வி அளிக்கும் திட்டத்திற்கு 2010 - 2011 ஆம் ஆண்டில் 2 கோடி ரூபா ஒதுக்கப்படும்.

இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளை வரும் 2010 - 2011ஆம் கல்வி ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழக மாணவர்களாக சேர்க்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டு, அரசு அனுமதியோடு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த விவகாரம் குறித்து இலங்கை துணைத் தூதர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி, தமிழக அரசின் மறுவாழ்வு இயக்குநர் கலைவாணன் போன்றோருடன் அண்மையில் விவாதிக்கப்பட்டது.

இதன்படி வரும் 18 ஆம் திகதி சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இலவச கல்வித் திட்டத்தைச் செயற்படுத்த மத்திய, மாநில அரசுகள் மற்றும் இலங்கை அரசின் அனுமதியைப் பெறுவது, இலங்கையில் உள்ள அகதிகள் முகாம்களைப் பார்வையிடுவது உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்படும்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் 152 ஆவது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழகத்தில் எதிர் வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# இலங்கைப் பிரச்சினையை அடியோடு கை கழுவி விட்டுள்ளது தமிழக அரசு

## நெடுமாறன் குமுறல்

சென்னை, ஜன.9

இலங்கைப் பிரச்சினையை தமிழக அரசு கை கழுவி விட்டது - என்று மக்கள் உரிமைக் கூட்டமைப்பின் அமைப்பாளர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் உரை தேர்தலை மட்டுமே கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. தொலைநோக்குடன் மக்களின் எதிர்கால நலனுக்கான திட்டங்கள் எதுவுமில்லை. இலவசங்களை வாரி இறைத்து மக்களை ஏமாற்றும் முயற்சி.

இலங்கையில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதைக் கண்டிக்கவோ அவர்களுக்குக் குறைந்த பட்சம் இரங்கல் தெரிவிக்கவோ கூட ஆளுநர் உரையில் எதுவும் இல்லை.

இந்த அரசு அந்தப் பிரச்சினையை அடியோடு கை கழுவி விட்டது என்று தெரிவித்துள்ளார் நெடுமாறன்.

# தமிழகத்தில் வீதி விபத்துகளில் தினமும் 35 பேர் உயிரிழப்பு!

## டி.ஜி.பி. கே.பி.ஜெயின் கவலை

சென்னை, ஜன. 9

தமிழகத்தில் தினமும் வீதி விபத்துகளில் 35 பேர் உயிரிழக்கின்றனர் என டி.ஜி.பி. கே.பி.ஜெயின் கவலை தெரிவித்தார்.

தமிழகத்தில் கடந்த முதலாம் திகதி முதல் வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு வார விழா கொண்டாடப்பட்டது. இதன் நிறைவு விழா மெரினா கடற்கரையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவில் டி.ஜி.பி. பங்கேற்று வாகன சாரதிகளுக்கு வீதிப் பாதுகாப்பு தொடர்பான துண்டுப் பிரசுரங்களை வழங்கினார். இதன் பின்னர் சைக்கிள் பேரணியைத் தொடக்கி வைத்து, செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

தமிழகத்தில் வீதி விபத்துகளில் தினமும் 35 பேர் உயிரிழக்க நேரிடுகிறது. இது கவலை அளிக்கிறது. ஆனால், குற்றச் சம்பவங்களில் தினமும் 5 பேர் உயிரிழக்கின்றனர்.

பாடசாலை மாணவ, மாணவிகளிடம் வீதிப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பிரசாரம் செய்தால் அது பெரியவர்களையும் சென்று சேரும். எனவே, இத்தகைய பிரசாரங்களை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும் - என்றார்.

# தேர்தலில் மஹிந்தவைத் தோற்கடிக்க பொன்சேகாவை ஆதரிப்பதே ஒரேவழி

## திராவிடர் கழகம் தெரிவிப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்காக பொன்சேகாவை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை - என்று திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தற்போது ஜனாதிபதியாகவுள்ள மஹிந்த ராஜபக்ஷவும், அவரிடத்தில் இராணுவ தளபதியாக இருந்து, பதவிவிலகிப் போட்டியிடும் சரத் பொன்சேகாவும் தேர்தலில் முக்கிய வேட்பாளர்களாகக் களம் இறங்கியுள்ளனர்.

இந்த நிலையில், ஈழத்தமிழர்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதை மிகவும் ஆழமாகச் சிந்தித்து முடிவு எடுக்கவேண்டிய தருணம் இது.

இப்போது தமிழர்கள் இரண்டு தீமைகளில், எது தவிர்க்க முடியாத குறைந்த தீமை என்பதைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இருவரில், யாரையுமே ஆதரிக்கமாட்டோம் என்றால், அது அங்குள்ள ஈழத் தமிழர்களின் பாதுகாப்புக்கு எதிராக அமைந்துவிடும் ஆபத்து உண்டு.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக சரத் நிறுத்தப்பட்டிருக்கிறார்; அவர் தமிழர்களின் வாக்குகளைக் கேட்க, அவர்களின் முக்கிய கோரிக்கைகளை ஏற்கத் தயாராக உள்ளார் என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருடன் பேசி அதில் பல அம்சங்கள் ஏற்க இசைவு தெரிவித்துள்ளார். அந்த நிபந்தனைகளோடு அவருக்கு ஆதரவு தரும் முடிவுதான் சரியானது - என்றுள்ளது.

# வடமாநிலங்களில் குளிருக்கு இதுவரை 226 பேர் உயிரிழப்பு

## கடும் பனியால் டில்லியில் விமானப் போக்குவரத்து பாதிப்பு

புதுடில்லி, ஜன. 9

வட மாநிலங்களில் கடுமையான குளிர் வாட்டி எடுக்கிறது. குளிர்ந்த காற்று வீசுவதுடன் காலையில் நீண்ட நேரம் பனி மூட்டமும் நீடிக்கிறது. காஷ்மீர் மாநிலத்தில் கடந்த புதன்கிழமை இரவு உறைபனி நிலைக்கும் கீழே வெப்பம் குறைந்தது.

வட மாநிலங்களில் குளிருக்கு இதுவரை 226 பேர் பலியாகியுள்ளனர். உத்தரப் பிரதேச மாநிலத்தில் கடந்த புதனன்று இரவு பல்வேறு இடங்களில் குளிர் தாங்க முடியாமல் 9 பேர் உயிரிழந்தனர். இதனால் அந்த மாநிலத்தில் குளிருக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 180 ஆக உயர்ந்தது.

பனி மூட்டத்தின் காரணமாக 58 இற்கும் அதிகமான ரயில்கள் புறப்படுவதிலும், ரயில் நிலையங்களுக்கு வந்து சேருவதிலும் தாமதம் ஏற்பட்டது.

இதேபோல் புதுடில்லியிலிருந்து விமானங்கள் கிளம்புவதும், வந்து சேருவதும் பாதிக்கப்பட்டது. 36 வீமானங்கள் ரத்து செய்யப்பட்டன. 26 விமானங்கள் வேறு ஊர்களுக்குத் திருப்பிவிடப்பட்டன. 12 விமானங்களின் நேரம் மாற்றியமைக்கப்பட்டது.

கடந்த சில நாள்களாக கடும் பனியும் குளிரும் நிலவுகிறது. புதுடில்லியில் நேற்றுமுன்தினம் இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் ஓடுபாதையில் பனி மூட்டம் காரணமாக 50 மீற்றர் தூரத்துக்கு அப்பால் பார்க்க முடியாதபடி புகை மண்டலம் போல பனிப் பொழிவு காட்சியளித்தது.

இதனால், புதுடில்லிக்கு வர வேண்டிய மற்றும் டில்லியில் இருந்து புறப்பட வேண்டிய சுமார் 50 விமானங்கள் பல மணி நேரம் தாமதமாகச் சென்றன.

டில்லியில் இருந்து புறப்பட வேண்டிய 20 விமானங்கள் குறிப்பிட்ட நேரத்தை விட பல மணி நேரம் தாமதமாக புறப்படும் என்று அறிவிக்கப்பட்டது. 3 சர்வதேச விமானங்கள் உட்பட பல விமானங்கள் ஜெய்ப்பூர், அகமதாபாத், மும்பை, கொல்கத்தா, போபால் நகரங்களுக்கு திருப்பி விடப்பட்டன. மலேஷியா செல்ல வேண்டிய விமானம் உட்பட பல விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

பீகாரிலும் கடும் பனியும் குளிரும் நிலவுகிறது. பாட்னாவில் நேற்றுமுன்தினம் வெப்பநிலை 4.9 டிகிரி செல்சியஸாகக் குறைந்தது. பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. குடிசைகளில் வாழும் ஏழைகளுக்கு அரசு சார்பில் போர்வைகள் வழங்கப்பட்டன. நிவாரணப் பணிகளை முதல்வர் நிதிஷ்குமார் பார்வையிட்டார். பீகார் மாநிலத்தில் இதுவரை குளிருக்கு 21 பேர் பலியாகியுள்ளனர்.

# தெலுங்கானா அமைச்சர்கள் 2 பேரின் ராஜினாமா வாபஸ்

நகரி, ஜன. 09

தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கையை வலியுறுத்தி கடந்த மாதம் 23 ஆம் திகதி தெலுங்கானாப் பகுதியைச் சேர்ந்த 13 காங்கிரஸ் அமைச்சர்கள் தங்களது பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

இந்த நிலையில் தனிதெலுங்கானா பிரச்சினை பற்றி ஆந்திர அரசியல் கட்சிகளுடன் மத்திய அரசு ஆலோசனை நடத்தியது.

இதன் காரணமாக மத்திய அரசு தனித் தெலுங்கானா அமைக்கும் பிரச்சினையில் முதல் கட்ட நடவடிக்கை மேற்கொண்டது எனக் கூறி ஏற்கனவே ராஜினாமா செய்த 13 அமைச்சர்களில் 11 பேர் தங்களது ராஜினாமாவை வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிலையில் மேலும் இரு அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் தங்களது ராஜினாமாவை வாபஸ் பெற்றுக்கொள்கின்றனர் என அறிவித்தனர். அத்துடன், தெலுங்கானாப் பகுதியைச் சேர்ந்த 11 காங்கிரஸ் எம்.பிக்களும் தங்கள் ராஜினாமாவை வாபஸ் பெற்றுக் கொண்டார் என பொன்னம் பிர பாகர் எம்.பி. அறிவித்தார்.

# இந்தியச் செய்திகள்

# ரஜினியின் மகள் சௌந்தர்யாவுக்கு பெப். 17 ஆம் திகதி நிச்சயதார்த்தம்

## தொழிலதிபர் மகனை மணக்கிறார்

சென்னை, ஜன. 9

ரஜினிகாந்தின் இரண்டாவது மகள் சௌந்தர்யாவுக்கு திருமணம் பேசி முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அவருக்கு, அடுத்த மாதம் (பெப்.) 17 ஆம் திகதி நிச்சயதார்த்தம் நடைபெறவிருக்கிறது. மணமகன், சென்னையை சேர்ந்த தொழில் அதிபரின் மகன் ஆவார்.

ரஜினிகாந்துக்கு ஐஸ்வர்யா, சௌந்தர்யா என்ற 2 மகள்கள் இருக்கிறார்கள். மூத்த மகள் ஐஸ்வர்யா, நடிகர் தனுஸை காதலித்து மணந்தார். இவர்களுக்கு 3 வயதில், யாத்ரா என்ற மகன் இருக்கிறார்.

சௌந்தர்யா, தனது தந்தை ரஜினிகாந்தை வைத்து 'சுல்தான் தி வாரியர்' என்ற அனிமேஷன் படத்தை 2 வருடங்களுக்கு முன்பு தயாரிக்கத் தொடங்கினார். அந்தப் படம் முடிவடையும் நிலையில் இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் சௌந்தர்யாவுக்கு நிதிப் பிரச்சினை ஏற்பட்டது. அவருடைய நண்பர் வருண்மணியன் தன்னிடம் வாங்கிய கடனை திரும்ப செலுத்த வேண்டும் என்று சௌந்தர்யா மீது வழக்கு தொடர்ந்தார். இது, ரஜினிகாந்தை வருத்தப்பட வைத்தது.



உடனடியாக மகளுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்தார். மாப்பிள்ளை பார்த்தாகிவிட்டது. அவருடைய பெயர், அஸ்வின்குமார். சென்னையில் உள்ள கட்டுமான தொழில் செய்து வரும் ராம்குமாரின் மகன் ஆவார்.

அஸ்வின்குமார், சென்னையில் உள்ள ஒரு கல்லூரியில் பொறியியலாளராகப் படித்தார். பின்னர் அமெரிக்கா சென்று ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில், 'எம்.எஸ்.' முடித்தார். தற்போது தந்தையுடன் கட்டுமான நிர்வாக பணிகளுக்கு உதவியாக இருந்து வருகிறார்.

# ஜோதிபாசுவின் நிலை கவலைக்கிடம்; பிரதமர், பிரணாப் சென்று பார்த்தனர்

கொல்கத்தா, ஜன. 9

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ஜோதிபாசுவின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது. வைத்திய சாலையில் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் அவரை பார்த்தார். ஜோதிபாசுவின் உடல்நிலை பற்றி அவருடைய மகனிடம் ஜனாதிபதி பிரதீபா பாட்டீலும் விசாரித்தார்.

மார்க்சிஸ்ட் மூத்த தலைவரும், மேற்கு வங்க முன்னாள் முதல்வருமான ஜோதி பாசு (வயது - 95) கடுமையான சளி மற்றும் மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்டு உள்ளார். கொல்கத்தாவில் உள்ள தனியார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவருக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு உள்ளது. நேற்றுமுன்தினம் அவருடைய உடல்நிலையில் சிறிய முன்னேற்றம் ஏற்பட்டது. நேற்றுமுன்தினம் வேறு எந்த மாற்றமும் இல்லை.

ரத்த அழுத்தம் படிப்படியாக குறைந்து கொண்டு வருகிறது. மார்புச் சளியை நீக்குவதற்காக அவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு குழாய் மூலமாக சிறிய அளவில் திரவ உணவு அளிக்கப்படுகிறது.

பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுமுன்தினம் காலை டில்லியில் இருந்து மருத்துவமனைக்கு வந்து ஜோதிபாசுவை பார்த்தார். ஜோதிபாசுவுக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரங்களை பிரதமரிடம் டொக்டர்கள் குழு விளக்கியது.

பிரதமருடன் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியும் வந்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சிறைச்சாலை உண்ணாவிரதிகளுடன் மாவை, கஜேந்திரன் நேற்றுச் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன 9

யாழ். சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசியல் கைதிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, கஜேந்திரன் ஆகியோர் நேற்றுச் சென்று சந்தித்து உரையாடினர்.

இது குறித்து மாவை சேனாதிராசா உதயனுக்கு தகவல் தருகையில்:-

உண்ணா விரதம் இருக்கும் அரசியல் கைதிகள் தமக்கு அரசிடம் இருந்து உறுதியான பதில் கிடைகக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இது குறித்து நீதி அமைச்சரின் கருத்தை அறியவும் அவர்கள் விரும்புவதாக எம்மிடம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தாம் நீதி அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியதாகவும் அவர்களை விரைவில் விடுதலை செய்ய ஆவன செய்வதாகவும் அவர் அப்போது உறுதியளித்ததாகவும் மாவை சேனாதிராசா குறிப்பிட்டார். (ஒ-6)

# பொன்னாலை வரதராஜர் ஊர்வல உற்சவம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெரு மாள் ஆலயத்தின் வருடாந்த மார்கழிப் பஜனை ஊர்வல உற்சவம் நாளை ஞாயிறு நடைபெறவுள்ளது.

நாளை காலை 7மணிக்கு ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் மூளாய் வீதி, வட்டு மாவடிச் சந்தி ஆகிய பகுதிகள் ஊடாக சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தை அடையவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் ஆலயம், சுழிபுரம், மூளாய் ஆகிய இடங் கள் ஊடாக மீண்டும் ஆலயத்தை அடையவுள்ளது. இந்த உற்சவம் 39வது வருடமாக நிகழ்கின்றது. (ஒ-6)

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2196ஆவது நேற்றைய சீட்டிழுப்பில் "W" என்ற ஆங்கில எழுத்தும் இடமிருந்து வலமாக 6/1/2/7/6/2 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்திற்குரியவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. இந்த ஒழுங்கில் 6/1/2/7/6/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இரண்டு பேருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/2/7/6/2 என்ற இலக்கமுடைய சீட்டுக் களை வைத்திருக்கும் 15பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கும்.

2/7/6/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 140பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/6/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1468 பேருக்கு நான்காம் பரிசாக தலா ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

6/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14634பேருக்கு ஐந்தாம் பரிசாக தலா நூறு ரூபாய் கிடைக்கும்.

வலமிருந்து இடமான வடிவமைப்பில் 6/1/2/7/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 16பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபாய் கிடைக்கவுள்ளது.

6/1/2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 157பேருக்கு எட்டாம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

6/1/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1466 பேருக்கு ஒன்பதாம் பரிசாக தலா நூறு ரூபாய் கிடைக்கவுள்ளது.

6/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14497 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபாய் கிடைக்கும்.

இந்த ஒழுங்கில் "W" என்ற எழுத்தை உடைய சீட்டை வைத்திருக்கும் 60191 பேருக்கு பதினோராம் பரிசாக தலா இருபது ரூபாய் கிடைக்கும். (6)

# நாட்டை மீட்ட சரத் பொன்சேகா அதைக் காட்டிக் கொடுப்பாரா?

## இப்படிக் கேட்கிறார் ரணில்

கொழும்பு, ஜன. 9

''நாட்டைப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுத்த ஜெனரல் சரத் பொன்சேகா அதைக் காட்டிக்கொடுப்பாரா? மஹிந்தவைப் போல் நாட்டைச் சூறையாடுவாரா? கே.பியுடன் ஒப்பந்தம் செய்வாரா?''

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார். அவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரிக்க மட்டக்களப்பு மேயர் சிவகீதா பிரபாகரன் முன்வந்துள்ளார். இதுதொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இதுபோல் பல தமிழ் அமைப்புகள் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

அகதிகள் தொடர்பாக பொன்சேகா நல்ல திட்டங்களை வைத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம அவற்றை அவர் தெரிவித்துள்ளார். ஆனால், பொன்சேகா வடக்கு, கிழக்கை மீண்டும் இணைப்பார், பிரிப்பார் என்று கூறுவதில் அர்த்தமில்லை.

பொன்சேகா ஜனாதிபதியானதும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பார். அதன் பிறகு அரசியல் யாப்பை உருவாக்குபவர் பொன்சேகா அல்லர். புதிய நாடாளுமன்றமே அதை உருவாக்கும்.

பொன்சேகா பெரும் தியாகம் செய்து இந்நாட்டைப் பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து மீட்டிருக்கின்றார். அவர் நாட்டைக் காட்டிக்கொடுப்பார் என்று சொல்வது புத்திசாலித்தனமா? அவர் அப்படிச் செய்வாரா?

கே.பியுடன் அவர் ஒப்பந்தம் செய்வாரா? மஹிந்த ராஜபக்ஷவைப் போல் நாட்டைச் சூறையாடுவாரா? - என்றார்.

# மழை தொடர்வதால் டெங்கு நோய் தீவிரமடையும் அபாயம் அதிகரிப்பு

## குடாநாட்டு மக்களை விழிப்புடன் செயற்படுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ். மாவட்டத்தில் கடந்த மாத நடுப்பகுதியில் இருந்து டெங்கு நோய் தீவிரமடைந்துள்ளது. 'இதுவரை சுமார் 500 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 14 இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தற்போது மழைக் காலம் தொடர்வதால் எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரிக்கலாம். இதனால் ஏற்படும் மோசமான விளைவுகளைத் தடுக்க குடாநாட்டு மக்கள் அனைவரும் முழுவீச்சில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

இந்த அபாயகரமான நிலைமை குறித்து நேற்று யாழ். அரச அதிபர் கே.கணேஷ், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இருவரும் இணைந்து நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

டெங்கு நோயை வெற்றிகரமாக கட்டுப்படுத்த திணைக்களங்கள், பொது நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது யாழ்.மாவட்டத்துக்கான தரை வழிப் பாதை திறக்கப்பட்டுள்ளதால் தென்பகுதியில் இருந்து இங்கும் இங்கிருந்து தென்பகுதிக்கும் தினமும் ஏராளமானவர் வந்து செல்கின்றனர். இதுவும் டெங்கு தீவிரமடைவதற்கு ஏதுவாக அமைகின்றது.

எனவே கிராமங்கள், நகரங்கள் தோறும் மக்கள் விழிப்புடன் செயற்பட்டு, சுற்றுச் சூழலை சுத்திகரிக்கும் நடவடிக்களிலும் நுளம்புகளை அழித்து ஒழிக்கும் செயற்பாடுளிலும் உடனடியாக ஈடுபட்டு பெரும் அனர்த்தங்கள் ஏற்படாமல் தவிர்க முடியும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ)

# கைதடியில் இன்று கலைவிழா நிகழ்வு

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் பவளவிழாவை முன்னிட்டு மாபெரும் கலைநிகழ்வு இன்று சனிக்கிழமை முத்துக்குமாரசாமி மகாவித்தியால அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த கலை நிகழ்வில் நடன நிகழ்வுகள், போட்டி நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள் என்பன நடைபெறவுள்ளன. (6)

# விஸ்வநாதக் குருக்களின் புகழுடம்புக்கு பெரும் எண்ணிக்கையானோர் அஞ்சலி

கொழும்பு, ஜன 9

கடந்த திங்கட்கிழமை சிவபதமடைந்த நவாலியூர் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களின் புகழுடம்பு நேற்று முன்தினம் பெரும் எண்ணிக்கையானோர் குழுமி நிற்க தீயுடன் சங்கமமாகியது.

பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் நடைபெற்ற இறுதிக் கிரியைகள், இரங்கல் உரைகளைத் தொடர்ந்து பொரளை கனத்தை இந்து மயானத்தில் அன்னாரின் புகழுடம்பு தகனம் செய்யப்பட்டது. அன்னாரின் பூதவுடலுக்கு ஜயரத்ன மலர்ச் சாலையில் பெருந்திரளானவர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர். மேலும், அந்தண சிவாச்சாரியார்கள், ஆலய அறங்காவலர்கள், இந்து அமைப்புக்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், பௌத்த குருமார்கள் ஆகியோர்களது இரங்கல் உரையும் இடம்பெற்றன.

ஸ்ரீவித்தியா வேத ஆகமபாடசாலை அதிபர் மட்டுவில் கி.சோமசுந்தரக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்கா குருகுல அதிபர் விஸ்வநாராயணசர்மா, திருமலை பத்திரகாளி பிரதமகுரு சோ.ரவிச்சந்திரகுருக்கள், ஜனாதிபதியின் இந்துமத அலுவல்கள் விவகார இணைப்பாளர் இராமசந்திரக் குருக்கள் பாபுசர்மா, மத பண்பாட்டு விவகார அலுவல்கள் செயலாளர் ஹேரத், இந்து கலாசார திணைக்கள அலுவல்கள் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசர், தெஹிவ்ளை விஸ்ணு ஆலய குரு சோமகாந்த சபேக் குருக்கள், அருள்மொழி அரசி வசந்தா வைத்தியநாதன் போன்றோர் உரை நிகழ்த்தினர்.

அமரர் விஸ்வநாதக்குருக்களின் உலகளாவிய அவரது ஆன்மீக சேவையையும் அவரது குருத்துவத்தின் மகிமையயும், வாக்கு வசீகரத்தையும், உபசரிக்கும் தன்மையையும்இரங்கல் உரையில் எடுத்துக் கூறினர்.

சேவாலங்கார ஜெகன்சர்மா, இராமகாண சபா சண்முகநாத சர்மா, கணநாத சர்மா, ஈஸ்வரக்குருக்கள் ஆகியோர் இறுதி நிகழ்வுக்கான செயற்பாடுகளை செய்திருந்தனர். (ஒ)

# கடற்கரை வீதி செவ்வாய் மூடப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.9

அவசர அவசிய திருத்த வேலைகளுக்கான யாழ்ப்பாணம் கடற்கரை வீதி துண்டிச்சந்தியில் இருந்து எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை கனரகப்பாவனைக்கு தடை செய்யப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இதனால் ஏற்படும் சிரமங்களை அனுசரித்து நடந்து கொள்ளுமாறு பொது மக்களிடம் மேயர் திருமதி யோ. பற்குணராசா கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 9

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தின் திருவாசக முற்றோதல் இன்று சனிக்கிழமை கல்வயல் சித்தன்மாவடிப் பிள்ளையார் கோவிலிலும், நாளை சாவகச்சேரி வாரிவளநாத சிவன் ஆலயத்திலும் இடம் பெறும். (ஒ-207)

* * *

தும்பளை தெற்கு நாவலடி அருள்மிகு சத்தியம்மன் கோவிலில் இன்று திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது. (ஒ-236)

# இறுப்பிட்டிக்கு பஸ் சேவை ஆரம்பிக்க கோரிக்கை

புங்குடுதீவு இறுப்பிட்டி பகுதியில் பெரும் எண்ணிக்கையான மக்கள் மீளக் குடி யேறிய நிலையிலும் அப் பகுதிக்கான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட வில்லை எனப் புகார் கூறப்படுகின்றது.

இந்த பகுதியில் வசிக்கும் மக்கள் மற்றும் அரச ஊழியர்கள் பெருங்காட்டுச் சந்தியில் இறங்கி நீண்ட தூரம் நடை பாதையூடாகவே செல்லவேண்டியுள்ளது.

எனவே இப்பாதையினூடாக பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு இப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# முஸ்லிம் காங்கிரஸின் பக்கம் பாய்ந்தார் சேகு இஸ்ஸதீன்

பெரியநீலாவணை, ஜன. 9

ஏற்றுமதி அபிவிருத்திப் பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் தாம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணையப்போகிறார் என அறிவித்துள்ளார்.

ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் அக்கரைப்பற்று பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான நஸீம் மாஸ்டரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் அக்கரைப்பற்று முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் றவூப் ஹக்கீமுக்கு இன்னும் ஓரிரு தினங்களில் தாம் அறிவிக்க இருக்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுச் செயலாளர் நஸார் ஹாஜி மற்றும் அக்கரைப்பற்று முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசில் இணைந்திருந்த காலம் முதலே தாம் கட்சியில் இணைவதற்கான எண்ணத்தில் இருந்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசு பல்வேறு ஊழல்கள் நிறைந்ததாகக் காணப்படுவதுடன் சிறுபான்மையினரின் நலனை அது ஒருபோதும் மதிக்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வீட்டில் 4 வருடங்கள் பணிபுரிந்த மலையக இளைஞருக்கு 75 ஆயிரம் ரூபா

## மனித உரிமை ஆணைக்குழு பெற்றுக்கொடுத்தது

யாழ்ப்பாணம்,ஜன.9

நான்கு வருடங்களாக வீட்டு வேலைக் கமர்த்தப்பட்ட தனக்கு எதுவித சம்பளமும் வழங்கப்படவில்லை என்று 20 வயது இளைஞன் ஒருவன் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பான விசாரணையின் பின் அந்த இளைஞனுக்கு 75 ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

நுவரெலியாவைச் சேர்ந்த 16 வயதுடைய இளைஞன் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் சித்தங்கேணியில் உள்ள ஒருவரின் வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார்.

அங்கு தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் பிரஸ்தாப இளைஞர் பணிபுரிந்து வந்துள்ளார்.

தற்போது 20 வயதுடைய இந்த இளைஞர் தனக்கு இதுவரை காலமும் எதுவித சம்பளமும் வழங்கப்படவில்லை என்றும், தன்னை தனது பெற்றோருடன் இணைத்து வைக்குமாறும் கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி த.கனகராஜ் மற்றும் தொழில் துறை திணைக்கள அதிகாரி ஆகிய இருவரும் சம்மந்தப்பட்ட வீட்டுக்காரரை அழைத்து விசாரணை மேற்கொண்டனர்.

இந்த விசாரணையை தொடர்ந்து பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு 75 ஆயிரம் ரூபா பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் நுவரெலியாவில் உள்ள பெற்றோருடன் இணைக் கப்பட்டுள்ளதாகவும் இணைப்பாளர்கனகராஜ் தெரிவித்தார். (ஒ - 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. மேயருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு நீக்கம்!

கொழும்பு, ஜன. 09

மட்டக்களப்பு மாநகரசபையின் மேயர் சிவகீதா பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட இராணுவப் பாதுகாப்பு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அகற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேயர் சிவகீதா, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தைத் தொடர்ந்து பாதுகாப்பு அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மேயருக்கு பெண் சிப்பாய்கள் உள்ளிட்ட 25 இராணுவப்படை வீரர்கள் பாதுகாப்பளித்து வந்ததனர் எனக் கூறப்பட்டது.

சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கும் நோக்கில் சிவகீதா பிரபாகரன் கொழும்பிற்கு வருகை தந்ததை அடுத்து அவருக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு முழுமையாக அகற்றப்பட்டுள்ளது.

சிவகீதாவின் இல்லத்திற்கு அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்பும் அகற்றிக் கொள்ளப்பட்டுள்ளது தற்போது இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மட்டுமே வீட்டைப் பாதுகாத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (மற்றொரு செய்தி 17 ஆம் பக்கத்தில்)

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் புதிய நிர்வாகிகளை அங்கீ கரித்தல் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 60 ஆம் ஆண்டு மலர் வெளி யீடு என்பன இடம்பெறவுள்ளன.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் இந்த மாநாட்டில் தலைமைப் பேருரையினை நிகழ்த்தவுள்ளார் என்று கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சோ. சேனாதிராஜா தெரிவித்தார்.

இதேவேளை, கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் இன்று யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இடம்பெறும். நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் இருந்து வந்துள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் சுமார் நூறு பேர் வரை இக்கூட்டத்தில் கலந்து கொள்வர். (அ-50-23-09)

ஜனவரி 10 நாளை ஆரம்பம்
A/L 2012
கலைப்பிரிவு: (8மணி) ஞாயிறு
வர்த்தகப்பிரிவு: (10 மணி)
விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

தேவை
ஒவ்செற் இயக்குனர்
கணினி இயக்குனர்
(D.T.P அனுபவம் உள்ளவர்கள்)
வேலை பெறுனர் (ஆண்)
புக் பைண்டர்
(முழு/பகுதி நேரம்)
ஸ்கிறீன் பிறின்டிங் தெரிந்தவர்கள்
நேரில் வரவும்
அகரம் கணினி பதிப்பகம்
பிறவுண் வீதி,(தொழில்நுட்ப கல்லூரி முன்பாக) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0776072291 - 0774150100

## சிறைக்கைதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ததாக ஜனாதிபதியின் ஆலோசகர் வாசு தேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது குறித்து வாசுதேவ கூறியிருப்பதா வது: மகஸின் சிறைச்சாலையில் உண்ணா விரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதி களை தாம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை சென்று சந்தித்ததாகவும் அவர்களின் கோரிக்கைகளை நேற்றைய தினம் சட்டமா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்தே அவர் இவ்வாறு தமக்கு உறுதியளித்ததாகவும் வாசுதேவ நாணயக்கார கூறினார். (அ-6)

## பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளையின் பூதவுடல் வல்வை, பூச்சிவிட்டானில் உள்ள அவரது உறவினர்களில் ஒருவரின் வீட்டில் வைக்கப்பட்டு கிரியைகள் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. பூச்சிவிட்டான் பகுதி தீருவில் பன்னிருவர் மயானத்திற்குச் சமீபாக உள்ளது.

அமரரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை நண்பகல் தொடக்கம் தீருவில் சதுக்கத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பனாகொட இராணுவ தடுப்பு முகாமில் காலமான வேலுப்பிள்ளையின் சடலத்தை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜி லிங்கம் பொறுப்பேற்று இங்கு கொண்டுவர ஏற்பாடாகியுள்ளதாகவும் அறியவந்தது. அதே பனாங்கொட முகாமில் தடுத்து வைக் கப்பட்டிருந்த பார்வதிப்பிள்ளை வேலுப்பிள்ளையும் யாழ்ப் பாணத்துக்கு கூட்டி வரப்படுவார் என்றும் பிந்திய தகவல்கள் தெரிவித்தன. (அ-70)

## யுத்தக் குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடனான மோதலின் இறுதி வேளைகளில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்த விசாரணைகளை முன்னெடுக்கும் விடயத்தில் இலங்கை அரசிற்கு உதவுவதற்கு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம், நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்கவுள்ளார்.

நியூயோர்க்கில் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.நா. பேச்சாளர் மார்ட்டின் நெய்சை இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் விடுத்துள்ள அறிக்கை இலங்கையில் இடம்பெற்ற மோதலின் போது சகல தரப்பாலும் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்கள், சர்வதேச சட்ட மீறல்கள் குறித்து நம்பகத்தன்மைமிக்க, சுயாதீன, பக்கச்சார்பற்ற விசாரணை இடம்பெற வேண்டியதன் அவசியத்தைப் புலப்படுத்தியுள்ளது.

ஐ.நா., குறிப்பாக மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம், இந்த விடயத்தில் உதவத் தயாராகவுள்ளது.

மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் தொடர்ச்சியாக முழுமையான, பக்கச்சார்பற்ற விசாரணைகளுக்காகக் குரல் கொடுத்துவருவதை ஐ.நா. செயலாளர் கவனத்தில் எடுத்துள்ளார்.

குற்றமிழைத்தவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கும் அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பும் கலாசாரத்தை எதிர்கொள்வதற்கும் இவ்வாறான விசாரணை அவசியம்.

ஐக்கிய நாடுகள் சபை இந்த விடயத்தில் இலங்கைக்கு உதவத் தயாராகவுள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறப்பட்ட விடயங்களுக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் இலங்கைக்கு உதவுவதற்கு நிபுணர்கள் குழுவொன்றை அமைப்பது குறித்து பான் கீ - மூன் சிந்தித்து வருகிறார் - என்றார் அவர். (அ-சி)

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
(சி/562626)
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

யாழ். நகரின் No1 கல்வி நிறுவனம்
எடிஷன் அக்கடமி
யாழ்ப்பாணம் - நல்லூர் - கோக்குவில் - வட்டுக்கோட்டை - சண்டிலிப்பாய்
அறிவித்தல்
தீவிரமாக பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுபடுத்தும் முகமாக யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்புரைக்கமைவாக எமது 5 கிளை நிறுவனங்களிலும் நடைபெற்றுவருகின்ற வகுப்புகள் யாவும் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை மட்டுமே நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். கொடிய டெங்கு நோயின் தாக்கம் குறைவடைந்த பின்னர் மீண்டும் வழமையான நேர அட்டவணைப்படி வகுப்புகள் தொடரும்.
நிர்வாகி: B.P பாஸ்கரன்.

நாளை ஆரம்பம்
O/L DAY CLASS
பிரிவு 1
ஞாயிறு 10 மணி சுபநேரம்
MON to FRI 8. 2 வரை
வல்லி மாணவர்க...
கும் பரீட்சைக்குத் தோ...
றாத மாணவர்களுக்கு
மான விசேட பிரிவு.
விக்னா
கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி, யாழ்.

## மகஸின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு பேர் கவலைக்கிடமான நிலை யில் யாழ். போதனா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பில் உண்ணா விரதம் மேற்கொண்டு வரும் கைதிகளுக்கு சிறைச்சாலை அதிகாரிகளால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை நீதி மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேரடியாக வந்து தமது விடுதலைக்கு உறுதியளிக்கும் வரை தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை என மகஸின் அரசியல் கைதிகள் அறிவித்துள்ளனர் எனக்கூறப்படுகிறது. (அ-சி)

## வடக்கு - கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் காணப்படும் இடைவெளியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு கட்சிக்கும் தாம் ஆதரவளிக்கவில்லை எனவும் கத்தோலிக்க மக்கள் தங்களது சிந்தனை ஓட்டத்திற்கு ஏற்ற வகையில் தேர்தலில் வாக்களிக்கக் கூடிய உரிமை காணப்படுகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-சி)

## மீள்குடி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர். அதன்படி இன்னும் மீள்குடியேற்றத்துக்கு 82 ஆயிரத்து 940 பேர் மாத்திரமே உள்ளனர் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை முன்னர் 2 லட்சத்து 70 ஆயிரம் பேர்களாக இருந்தது எனவும் தற்போது அவர்களில் ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 891 பேர் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டினார். (அ-சி)

IBM
அமெரிக்காவில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
மிகவும் நல்ல நிலையில் உள்ள
IBM ThinkPad Laptops
கணனிகள் மிகக் குறைந்த விலையில்
விற்பனைக்கு உண்டு.(Original - IBM)

Intel Pentium - 4 (Mobile Tech)
512 MB Ram 40 GB HD
CD RW / DVD Rom
தொழில் புரிவோர், பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மிகவும் உகந்தது.
விபரங்களுக்கு - UNI TECHNOLOGY
ICT Education Trainers - Manipay
Mobile - 0777 - 110862
(மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)

நீங்கள் மக்கள் மத்தியில் தனித்துவம் பெறுவதற்கு CIMA
உங்களை நிதித்துறையில் பயிற்சி பெற்ற வணிகத்தலைவராக உயர்த்தும்.
அனைவரும் பயிலலாம்
(வரையறுக்கப்பட்ட பதிவுகள்)
0772 395 895

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் இராஜேந்திரம் விஜயகுமார்**

(மின் அத்தியட்சகர் - மத்திய மின் நிலையம், சுன்னாகம்)

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு மிகவும் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதிப் பொது முகாமையாளரும் ஊழியர்களும் பி.பொ.மு (வடக்கு) அலுவலகம், இலங்கை மின்சார சபை,500, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் அருளானந்தம்

காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும் நாவற் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் அருளானந்தம் நேற்று (08.01.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அருளானந்தத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-வள்ளியம்மை தம்பதிகளின் மகளும், நாகமுத்து-பார்வதி தம்பதிகளின் மருமகளும், பத்மாவதி, நீலகண்டன், காலஞ்சென்ற ஆனந்தசிவம் மற்றும் தியாகராசா, சிவமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசபிள்ளை, வாலாம்பிகை, புனிதவதி, நாகேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியும், அருள்ராசா, சர்மிளா, அருட்குமரன், சயந்தன், சசிகரன், பி... தர்ஷினி, தர்மலோஜினி, துஷியந்தினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயான த்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்கண்டி,
காரைநகர்.
தொ.பே:- 0213737114 (C/564083)

தகவல்
கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

SM CONSULTANT SERVICE
UK STUDENT VISA
யாழ் மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன் மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.
பெப்ரவரி, ஏப்ரல் மாதங்களுக்கான பிரவேசத்துக்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.
விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களை சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களை பெற்றுக்கொள்ளுங்கள்.
சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!
STUDY IN MALASIYA
குறைந்த கட்டணத்தில் மலேசியாவில் பட்டப்படிப்பு (3 வருடங்கள்).
விரும்பின் 3ம் வருடம் லண்டனில் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பு.
மலேசியாவில் கல்வி கற்கையில் பகுதி நேர வேலைவாய்ப்பு.
மலேசியாவில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தால் மத்திய கிழக்கு நாடுகளில் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேலை பெறும் வாய்ப்பு.
STUDY IN EAST EUROPE-UKRAINE-MBBS/MD
Lugansk State Medical University(Ukraine) இல் இணைந்து சிறிலங்கா Medical Concil லினால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வர விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
G.C.E. O/L தகமையுடன் 7 வருடங்கள் கற்கைநெறி.
G.C.E. A/L தகமையுடன் 6 வருடங்கள் கற்கைநெறி.
உணவு, விடுதி வசதி அனைத்தும் உட்பட......
அனைத்து விபரங்கட்கும்
தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணிமுதல் மாலை 7.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துக் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.
தொடர்புகளுக்கு:
0212223818, 0215673818, 0774528818
e.mail: mg1404_2009@yahoo.com
இல:148,கோவில் வீதி
(புனிசெல் முன்பாக)
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org